இரண்டாம் பதிப்பு

விலை: 20
பக்கங்கள்: 28

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32
கதிர் 255
ஆடி 23ஆம் நாள்
செவ்வாய்க்கிழமை
08 ஒகஸ்ட் 2017
வள்ளுவர் ஆண்டு 2048

## உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பம்

வாழ்த்துகிறோம்
ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவ, மாணவியர் இலட்சியத்தில் வென்றிட உதயன் உங்களை மனதார வாழ்த்துகின்றான்.

ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகின்றது. இந்த முறை இந்தப் பரீட்சையில் மும்மொழிகளிலும் மூன்று இலட்சத்து 15 ஆயிரத்து 227 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.
2 ஆயிரத்து 230

>> 25

## பொலிஸார் மீதான வாள்வெட்டு வழக்கின் சூத்திரதாரி உட்பட 6 பேர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஓக. 8
பொலிஸார் மீதான வாள்வெட்டின் முக்கிய சூத்திரதாரி என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் தேடப்பட்ட நிசா விக்டர் என்பவர் உள்ளிட்ட 6 பேர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் நேற்றுமுன்தினமும், நேற்றும் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

>> 25

## துன்னாலையில் நேற்றும் தேடுதல்

யாழ்ப்பாணம், ஓக. 8
துன்னாலையில் மூன்றாவது நாளாக நேற்றும் வீடு வீடாக சோதனை நடத்தினர் சிறப்பு அதிரடிப் படையினர். குடும்ப அட்டை, குடும்பப் படங்கள் அடங்கிய 'அல்பங்களையும்' அவர்கள் பரிசோதித்தனர் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.
அதிகாலை 3.30 மணிக்கு அந்தப் பகுதியில் சிறப்பு அதிரடிப் படையினர், பொலிஸார், 'பீல்ட் பைக்' குறூப்பினர் களமிறக்

>> 25

## கூட்டமைப்புடனான அரச தலைவரின் சந்திப்புக்கு இன்னும் திகதி முடிவில்லை

யாழ்ப்பாணம், ஓக. 8
யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலவரங்கள் தொடர்பில் அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சருடன் சந்திப்புக்கு நேரம் ஒதுக்குமாறு கூட்டமைப்புக் கோரியபோதும் இன்னும் அதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
ஓரிரு நாளில் சந்திப்பு நடைபெறும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் இதுவரையில் திகதி உறுதிசெய்யப்படவில்லை.
இதேவேளை நிலமைகளை நேரில்

>> 25

# வடக்கு அமைச்சர் நியமனத்தில்: புலிசார் அரசியல் தலையீடு

### தமது எதிரிநாட்டு உளவாளிக்கு அமைச்சுப் பதவி கொடுக்காதீர் என்று அயல்நாடு வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 8
வடக்கு மாகாண அமைச்சரவை விடயத்தில் அயல்நாட்டுத் தூதரகம் ஒன்று மூக்கை நுழைத்துள்ளதாக உதயன் பத்திரிகை அறிந்தது.
கட்சி ஒன்றினால் மாகாண அமைச்சர் பதவிக்குப் பெயரிடப்பட்ட ஒருவருக்கு அந்தப் பதவியைக் கொடுக்க வேண்டாம் என்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தைக் கையாளும் தலைவரின் தனிப்பட்ட செயலாளரிடமே ஒரு ஆலோசனைப் பாணியில் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது என்று தெரிகிறது.
தமது எதிரி நாடு ஒன்றின் உளவாளியாக குறித்த உறுப்பினர் இருக்கிறார் எனச் சந்தேகிப்பதன் காரணத்தாலேயே அந்த நபருக்கு அமைச்சர் பதவி கொடுக்கக் கூடாது என்று அந்த அறிவுறுத்தலின்போது விளக்கமளிக்கப்பட்டதாகவும் உதயன் அறிந்தது.
முன்னாள் ஆயுதக் குழு ஒன்றின் உறுப்பினர் ஒருவருக்கே இவ்வாறு அமைச்சுப் பதவி வழங்கவேண்டாம் என்று கூறப்பட்டுள்ளது. அமைச்சுப் பதவிக்கு அவரது பெயர் அடிபட்ட உடனேயே அவரது கட்சியினரே அவருக்கு எதிராகப் பல விடயங்களை அவிழ்த்துவிட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.
அயல்நாட்டின் கொழும்புத் தூதரகத்தில் பணியாற்றும் இரண்டாம் நிலை அதிகாரி ஒருவர் அண்மையில் யாழ்ப்பாணம் வந்தார். நகரிலுள்ள விடுதியில் தமிழ் அரசியல்வாதிகளைச் சந்தித்துப் பேசியுள்ளார். முதலமைச்சரையும் அவர் சந்தித்துப் பேசுவதற்கு விரும்பியுள்ளார். இருப்பினும் அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அந்தச் சந்திப்பிலேயே அமைச்சர் நியமனம் தொடர்பான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.
(உ,5,101)



## பதவி விலகினார் சத்தியலிங்கம்

யாழ்ப்பாணம், ஓக. 8
வடக்கு மாகாண சுகாதாரத்துறை அமைச்சர் ப.சத்தியலிங்கம் நேற்றுப் பதவி விலகினார். அரசியல் உள்நோக்கத்துடனேயே அமைச்சரவையிலிருந்து தன்னை வெளியேற்ற வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எடுத்துள்ளார் என்பதைத் தன்னால் புரிந்துகொள்ள முடிவதால் அவருக்குக் கீழ் ஓர்

>> 25

## புளொட்டின் பதவி யாருக்கு?

யாழ்ப்பாணம், ஓக. 8
மாற்றியமைக்கப்படும் வடக்கு அமைச்சரவையில் புளொட் அமைப்புக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டால், அந்தக் கட்சி சார்பில் யாருக்கு அதனை வழங்குவது என்பதில் குழப்பம் தோன்றியுள்ளது.
வடக்கு மாகாணசபையின் அமைச்சரவை விரைவில் மாற்றியமைக்கப்படும் என்றும் இதன் போது, புளொட்டுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படும் என்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்திருந்தார்.
புளொட் அமைப்புக்கு அமைச்சுப் பதவி கிடைக்கப் பெற்றால் அந்தக் கட்சி சார்பில் யாரை நிய

>> 25

## வடக்கு மாகாண சபையை கலைக்க பரிந்துரையுங்கள்

### எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 8
வடக்கு மாகாண அமைச்சரவையிலிருந்து தமிழ் அரசுக் கட்சி ஒதுங்குமாயின், வடக்கு மாகாண சபையைக் கலைப்பதற்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பரிந்துரைக்கவேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா கோரிக்கை விடுத்துள்ளார்.
வடக்கு மாகாண எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணசபை மக்கள் எதிர்

>> 25

## சம்பந்தர் சமாளிப்பு மாவை கொந்தளிப்பு

### மாகாண சபை விவகாரத்தால் முறுகல்

யாழ்ப்பாணம், ஓக. 8
வடக்கு மாகாண அமைச்சரவையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பங்கேற்பதில்லை என்ற முடிவால், கட்சியின் உயர் பீடத்தினருக்கு இடையிலும் அது முறுகலை ஏற்படுத்தியுள்ளது என்று உதயன் அறிந்தது.
வடக்கு மாகாண முதலமைச்சர் விடயத்தில் கூட்டமைப்பின் தலைவரும் தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் தலைவருமான இரா.சம்பந்தன் சமாளிப்புப் போக்கில் நடந்துகொள்வதை அடுத்தே இந்த நிலமை தோன்றியது என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.
தமிழ் அரசுக் கட்சியின் வடக்கு மாகாண சபை

>> 25

## பிரபாகரன் போல் வரவேண்டுமென சிறு பிள்ளைகள் சொல்லமாட்டார்

### யாழ். நகரில் நின்று இப்படிச் சொன்னார் விக்கி

யாழ்ப்பாணம், ஓக. 8
சிறுபிள்ளைகள் பிரபாகரன் போன்று வருவதற்கு ஆசைப்படுவதாகச் சொல்லமாட்டார்கள் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மீண்டும் சர்ச்சைக்குரியவாறு பேசியுள்ளார்.
முதல் தமிழ் பெண் விமானி அர்ச்சனா செல்லத்துரை பாடிய 'மறத்தி' இறுவட்டு வெளியீடும் அவரை மதிப்புறுத்தும் நிகழ்வும், வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று மாலை இடம்பெற்றன. இதில் கலந்து கொண்டு அதிதி உரையாற்றினார் விக்னேஸ்வரன். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாரைப்போல வர ஆசைப்படுகின்றீர்கள் என்று நான் சிறு பிள்ளைகளிடம் கேட்பதுண்டு. காந்தி என்றோ பிரபாகரன் என்றோ அவர்கள் கூற

>> 25

## முச்சந்தி முரளி



ஓயாத அலைகள் 17 என்று பெயரிடலாம் போல கிடக்கு...

## அனந்தி, சர்வேஸ்வரனின் பதவிகள் நிரந்தரம்

யாழ்ப்பாணம், ஓக. 8
வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சராக நியமிக்கப்பட்ட திருமதி அனந்தி சசிதரன் மற்றும் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்ட க.சர்வேஸ்வரன் இருவருக்கும் பதவிகள் நிரந்தரமாக்கப்படும் என்று தெரிகிறது.
மூன்று மாதங்களுக்கு மட்டும் தற்காலிகமாகவே அவர்களுக்குப் பதவி வழங்கப்படுவதாக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அறிவித்திருந்தார். எனினும் மாகாண சபையின் எஞ்சிய காலப் பகுதிக்கும் அவர்கள் அமைச்சர்களாகத் தொடர்வார்கள் என்று கூறப்படுகிறது.
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த 5ஆம் திகதி நடைபெற்றிருந்தது. இதில் கலந்து கொண்டிருந்த ஈபிஆர்எல்எவ் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் நீண்ட அறிக்கையை வெளியிட்டிருந்தார்.
அந்த அறிக்கையில், "தமிழரசுக் கட்சிக்கான

>> 25



# 12 நாடகங்களுடன் 5ஆவது ஆண்டாக நல்லூர் நாடக விழா

## நாளை மாலை கொண்டாட்டம் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஒக. 8

நல்லூர் நாடகத் திருவிழா ஐந்தாவது ஆண்டாக நாளை 9ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. செயற்றிறன் அரங்க இயக்கம் நடத்திவரும் இந்த விழா சிறுவர்கள் மற்றும் பெரியவர்களுக்கான ஒரு பெரும் விருந்து.

இந்த ஆண்டு நாடாக விழா நாளை மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகி எதிர்வரும் 18ஆம் திகதி வரை தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும் என்று செயற்றிறன் அரங்க இயக்கத்தின் பணிப்பாளரும் ஈழத்தின் பிரபல நாடக நெறியாளருமான தே.தேவானந்த் தெரிவித்தார். "ஒவ்வொரு நாளும் இரண்டரை மணி நேரத்திற்கு குறைந்தது இரு நாடகங்களும் கூடுதலாக மூன்று நாடகங்களும் அளிக்கை செய்யப்படும்" என்றார் அவர்.

நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள பண்டாரக் குளத்தின் முன்பாக இருக்கும் செயற்றிறன் அரங்க இயக்கத்தின் பஞ்சபூத அரங்கிலேயே அனைத்துக் காட்சிகளும் இடம்பெறவுள்ளன. " அனுமதி அனைவருக்கும் இலவசமானதே. சிறுவர்களை அழைத்து வந்தால் அவர்களது குதூகலத்திற்கு நாங்கள் உத்தரவாதம்" என்றார் தேவானந்த்.

நாடகம் பார்ப்பவர்கள் குறைந்துவரும் சூழலிலும் நாடகங்கள் குறைந்து வரும் சூழலிலும் இளம் தலைமுறைக்கு அந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகத்தான் பாடசாலை விடுமுறைக் காலமான ஒகஸ்ட் மாதத்தில் இந்த நிகழ்வை நடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார். நல்லூர் கந்தன் திருவிழாவின் கொண்டாட்டத்திற்கு அணி சேர்க்கும் வகையில் பக்திப் பரவசத்தின் பின்னர் சிறுவர்களுக்குக் கொஞ்சம் ஆடலும் பாடலும் கிடைப்பது அவர்களின் உளவிருத்திக்கும் சிறந்தது என்றார் அவர்.

சிறுவர்களை முக்கிய இலக்காகக் கொண்டு நாடக விழா நடத்தப்பட்டாலும் பெரியவர்களுக்கான நாடகங்களும் ஒவ்வொரு நாளும் மேடையேற்றப்படவுள்ளன. பேராசிரியர் நந்தியின் 'சிங்கப்பூர் டொக்டர்', தேவானந்தின் ' ஏகாந்தம்' மற்றும் 'இது கூத்தல்ல நிஜம்' ஆகிய நாடகங்கள் பெரியவர்களுக்காக மேடையேற்றப்படவுள்ளன. நாட்டார் வழக்கியற் கழகம் வழங்கும் 'அரிச்சந்திர மயான காண்டம்' குழந்தை ம.சண்முலிங்கத்தின் 'பஞ்சவர்ண நரியார்', 'கூடி விளையாடு பாப்பா', 'குழந்தைகள் பாவனை செய்யும்', தேவானந்தின் பொம்மலாட்ட நாடகமான 'பாட்டி', 'பசுவும் புலியும்', 'ஒரு மோட்டார் சைக்கிளும் ஒன்பது பேரும்', 'மாயச் சங்கு' ஆகிய சிறுவர் நாடகங்களும் மேடையேற்றப்பட உள்ளன.

முதலாவது நாளான நாளை புதன் கிழமை குழந்தை ம.சண்முக லிங்கத்தின் 'பஞ்சவர்ண நரியார்' சிறுவர் நாடகமும் தே.தேவானந்தின் 'பாட்டி' பொம்மைகள் நாடகமும் மேடையேறவுள்ளன.

இரண்டாம் நாள் குழந்தை ம. சண்மகலிங்கத்தின் 'கூடிவிளையாடு பாப்பா' சிறுவர் நாடகமும் பேராசிரியர் நந்தியின் 'சிங்கப்பூர் டொக்டர்' நாடகமும் நடைபெறவுள்ளன. இலவசமாக நடைபெறுகின்ற இந்த நாடகத் திருவிழா சிறுவர்களுக்கு மட்டுமல்லாமல் நாடகமும் அரங்கியலும் கற்கின்ற மாணவர்களுக்கும் நாடக ஆர்வலர்களுக்கும் அரிய வாய்ப்பாக அமைகின்றது. என்று பாடசாலை நாடக ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

ஈழத்து நாடக வரலாற்றில் முக்கியமான மைல்கல்லாக கருதப்படுகின்ற நல்லூர் நாடகத்திருவிழா, இராணுவ நெருக்கடிக் காலமான 2013ஆம் ஆண்டு நல்லூர் முத்திரைச்சந்தியில் மக்களின் பிரச்சினைகளைப் பேசிய பத்து நாடக மேடையேற்றங்களுடன் இந்த நாடகத் திருவிழா ஆரம்பமானது. செயற்றிறன் அரங்க இயக்கத்தின் தனித்துவமான மேடை அமைப்பும் இருப்பிடமும் பார்ப்பவர்களுக்கு புதிய தொரு அனுபவத்தை வழங்கும்.

கடந்த நான்கு வருடங்களின் வருடாந்தம் நாடக விழாவுக்காகவே புதிய நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றியும் வருகிறது.

(உ)

# தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் பணம் பெற்றே அரசுக்கு ஆதரவாம்

## ஆனந்த சங்கரி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக.8

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 10 மில்லியன் ரூபாவையும், சொகுசு வாகனங்களையும் பெற்றுக் கொண்டே இந்த அரசுக்கு ஆதரவளிக்கின்றனர்.

இவ்வாறு குற்றஞ்சாட்டினார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளர் வீ.ஆனந்த சங்கரி.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசிய மாநாடு நீராவியடி இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

இலங்கையில் நடந்த போரில் பொதுமக்கள் உயிரிழந்தமைக்கான முழுப் பொறுப்பையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசாவும் ஏற்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன், புலிகள் இயக்கத்தினர், பொதுமக்கள் எனப் பலரைக் கொன்ற சரத் பொன்சேகாவையே இப்போது இரா.சம்பந்தன் தோளில் தூக்கித் திரிகின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகளின் காலத்தில் உருவாக்கப்பட்டபோது சு.ப.தமிழ்ச் செல்வனே இரா.சம்பந்தரின் தலைவராகச் செயற்பட்டார்.

வே.பிரபாகரன் என்னைச் சுட நினைத்திருந்தால் குருவியைச் சுடுவது போன்று சுட்டிருக்கலாம். ஆனால் அவர்களின் இலக்கு நான் இல்லை. அவர்களின் இலக்கு வேறொருவராக இருந்தார். அவர் யார் என்று மக்களுக்குத் தெரியும்.

தமிழ் மக்கள் இப்போது தலைமை மாற வேண்டும் என்று நினைக்கிறார்களா? அல்லது தலைவர் மாற வேண்டும் என்று நினைக்கிறார்களா என்பது தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் இரா. சம்பந்தனையும், மாவை. சேனாதிராசாவையும் தவிர்த்து வேறு எவரும் கூட்டணி வைத்துக் கொள்ளலாம்.

தற்போது தமிழர்களின் பலவீனத்தைத் தெரிந்து கொண்டு தமிழர்களை ஏமாற்றுவதற்கு அரசு ஆரம்பித்துள்ளது - என்றார்.

நிகழ்வில் வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, வடக்கு மாகாண உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், விந்தன் கனகரத்தினம், கஜதீபன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் சில வருமாறு

நீண்டகாலமாகச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சகல தமிழ் அரசியல் கைதிகள் பரிதாபமான நிலையைக் கருத்திற் கொண்டு அவர்கள் நிபந்தனையின்றி விரைவில் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதோடு அவர்களின் எதிர்கால வாழ்வாதாரப் பிரச்சினையையும் கருத்திற் கொண்டு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழர் விடுதலைக்கூட்டணி அரசை வற்புறுத்துகிறது.

படித்த இளைஞர் யுவதிகளுக்கு அவர்களின் தகுதிக்கேற்ற வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தி அவர்களின் விரக்தியான மன நிலமைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என அனைத்துத் தரப்பினரிடமும் தமிழர் விடுதலைக் கூட்டணி வினயமாக வேண்டுவதோடு வேலைவாய்ப்புக்களைப் பெற முடியாதவர்கள் சுயதொழிலை மேற்கொள்ள பொருளாதார நிதியுதவிகளை அரசாங்கம் வழங்க வேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணி கேட்டுக் கொள்கிறது.

வடமாகாண சபை தங்களுக்குள் உள்ள மோதல் போக்குகளைக் கைவிட்டு மக்கள் நலன் சார்ந்த விடயங்களில் தீவிர கவனம் எடுக்க வேண்டுமெனவும் குறிப்பாக வைப்பிலுள்ள நிதிகளைச் சரியாகப் பயன்படுத்தி போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த திட்டங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறது.

இராணுவம் கையகப்படுத்திய பொது மக்களின் காணிகளை மீண்டும் அவர்களிடமே கையளிக்க வேண்டுமென அரசுக்கு வேண்டுகோள் விடுக்கிறது.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை வாழைச்சேனை காகித ஆலை ஆனையிறவு உப்பளம் போன்றவற்றை மீண்டும் இயங்கச் செய்து வேலை வாய்ப்பை வழங்குமாறு அரசு வலியுறுத்துகிறது.

பொலிஸ் நிர்வாகச் சேவை போன்றவற்றுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் போது குறைந்தபட்சம் மூவின மக்களின் விகிதாசாரத்துக்கு ஏற்றவாறு அவர்களுக்கு நியமனங்கள் வழங்குமாறு அரசுக்கு வேண்டுகோள் விடுக்கிறது. ஐந்து இளைஞர்கள் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைப் படுகொலை செய்ய முயற்சித்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுச் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் ஒரு கையை இழந்தவராவார். இரண்டாவர் தனது கை ஒன்றில் மணிக்கட்டுக்குக் கீழ் பகுதியை இழந்தவர். மூன்றாமவர் சில வருடங்களுக்கு முன்பு சுயநினைவு இல்லாமல் மூன்று மாத காலமாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவாராவார். இந்த இளைஞர்கள் குற்றமற்றவர்கள் எனத் தமிழர் விடுதலைக்கூட்டணி கருதுவதால் அரசு இது சம்பந்தமாக விசாரணை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறது.

(ந-8)






மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலய பெருந் திருவிழாவின் தீர்த்தத் திருவிழா நேற்று இடம்பெற்றது.


(ஐ-9)

## தனியார் கிணற்றிலிருந்து நேற்றும் வெடிபொருள் மீட்பு



கிளிநொச்சி,ஒக.8

மலையாளபுரம் பகுதியில் தனியார் கிணற்றிலிருந்து நேற்று இரண்டாவது நாளாகவும் வெடிபொருள்கள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் காணி உரிமையாளர் தனது காணியில் இருந்த கிணற்றை நேற்று முன்தினம் துப்பரவு செய்தார். அதன் போது கிணற்றில் பல வெடிபொருள்கள் இருந்ததை அவதானித்தார். உடனடியாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார். பொலிஸாரால் நீதிமன்ற அனுமதி பெறப்பட்டு கிணற்றில் மீண்டும் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. சிறப்பு அதிரடிப்படையினரின் உதவியுடன் கிணற்றிலிருந்த வெடி பொருள்கள் மீட்கப்பட்டன. தகரத்தில் அடைக்கப்பட்ட கிரனைட் மற்றும் மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. வெடிபொருள்களின் தற்போதைய நிலை, யாருடைய பயன்பாட்டில் இருந்தமை தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். போர் நிறைவடைந்ததன் பின்னர் வடக்கு மாகாணத்தில் கிணறுகள், மலசலகூட குழிகள், துரவுகள் போன்றவற்றில் இருந்து மீட்கப்பட்டு வருகின்றன. இதே போன்று ஆனையிறவுப் பகுதியிலும் அண்மையில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த மோட்டார் குண்டுகள் இராணுவத்தால் மீட்கப்பட்டன. (ஐ-6)



தொடர் வறட்சியான காலநிலை நிலவும் சூழலில் கிளிநொச்சி மாவட்டத்தின் சில பகுதிகளில் நேற்று திடீர் மழை பெய்தது. சுமார் அரை மணிநேரம் மழை பெய்தது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)



## கௌரவிக்கப்பட்டார் சதாசிவக் குருக்கள்

தென்மராட்சி,ஒக. 8

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் கடந்த 25 வருடங்கள் நித்திய பூசகராகப் பணியாற்றிய சதா சிவக்குருக்கள் நேற்றுக் கௌரவிக்கப்பட்டார். அவர் இந்த ஆலயத்தில் 25 வருடங்கள் பணியாற்றினார். பின்னர் மலேசியாவுக்குச் சென்று அண்மையில் நாடு திரும்பியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது அவரை ஆலயப் பரிபாலனசபையினர் கௌரவித்தனர். அவருக்கு "வேதாகம கிரியா கலாநிதி" எனும் பட்டம் வழங்கி, பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். (ஐ-9)



## நிலத்துக்கான போராட்டம் 100ஆவது நாளில்

கிளிநொச்சி, ஒக. 8



காணி விடுவிப்புக் கோரி இரணைதீவு மக்களால் நடத்தப்படும் போராட்டம் இன்றுடன் 100 நாள்களை எட்டியுள்ளது. அதனை முன்னிட்டு இரணைமாதா நகர் தேவாலயத்தில் இன்று சிறப்புப் பூசை வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. தமது சொந்த நிலத்தை விடுவிக்கக் கோரி இரணைதீவு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கிளிநொச்சி - பூநகரிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள இரணைதீவு பகுதியில் குடியமர்வதற்கும் தொழில் செய்வதற்கும் அனுமதிக்கக் கோரி இரணைதீவு மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இரணைதீவில் பூர்வீகமாக வாழ்ந்த மக்கள் போர் காரணமாக 1992 ஆம் ஆண்டு அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். அவர்களுக்கு இது வரை அங்கு மீள்குடியமர அனுமதி வழங்கப்படவில்லை. கடந்த மே மாதம் முதலாம் திகதி தொழிலாளர் தினத்திலிருந்து இரணை மாதாநகர் கடற்கரை அண்டிய பகுதியில் போராட்டத்தை ஆரம்பித்தனர். அன்றிலிருந்து இன்று வரை அவர்களின் போராட்டம் தீர்வின்றித் தொடர்கின்றது.

"கூட்டரசின் காலத்தில் நல்லாட்சி ஓங்குகின்றது என்பது பொய். இதுவரை எமக்குச் சாதமான பதில் எந்தத் தரப்பிடம் இருந்தும் வந்ததில்லை. நாளை மறுதினம் (நாளை) 101ஆவது நாளிலிருந்து எமது போராட்ட வடிவம் மாறும். எமது சொந்த நிலத்தை விட்டு கடந்த 25 வருடமாக தற்காலிகமாகக் குடியமர்ந்திருக்கின்றோம். இந்தப் பகுதி மக்கள் கடற்றொழிலையே வாழ்வாதார தொழிலாகக் கொண்டனர். போரால் எல்லாவற்றையும் இழந்து நிற்கின்ற வேளை எமது தொழிலையும் இழந்து, தற்போது மிகவும் வறுமையுடன் வாழ்கின்றோம். அன்று தொடக்கம் இன்று வரை அரசியல் தலைவர்கள் மதத்தலைவர்கள், அமைச்சர்கள் வரை காணிகளை மீட்டுத் தருவதாகக் கூறிச் சென்றார்கள். ஆனால் இன்றுவரை எதுவும் நடந்த மாதிரி இல்லை. புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் எங்களுடைய போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் உதவ வேண்டும். இந்தப் போராட்டம் நிறுவனமோ அல்லது அரசியல் சார்ந்த கலப்பான போராட்டம் அல்ல. மக்களின் போராட்டம்.

இதுவரை காலமும் கடற்கரையை அண்மித்து எமது போராட்டத்தை ஆரம்பித்தோம். இனிவரும் காலம் மழைகாலம் என்பதாலும், நுளம்புகளின் பெருக்கம் காணப்படுவதாலும். இன்றிலிருந்து இரணை மாதா நகர் தேவாலயத்தில் எமது போராட்டத்தை ஆரம்பிக்க உள்ளோம்" என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர். (ஐ-10. 6)

### இரு வாகனங்கள் நேருக்கு நேர் மோதி விபத்து

சாவகச்சேரி,ஒக.8

சாவகச்சேரி கல்லடிமூட்டுச் சந்திப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்தனர். இந்த விபத்து நேற்று பி.ப. 4 மணியளவில் நடந்தது. மோட்டார் சைக்கிளும் கன்ரர் ரக வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்து நிகழ்ந்தது. மோட்டார் சைக்கிளின் அதிவேகமே விபத்துக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. விபத்துக்குள்ளான இருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பாக மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-9)



காரைதீவு மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா, தீர்த்தத் திருவிழா நேற்று வெகு சிறப்பாக இடம்பெற்றது. நூற்றுக்கணக்கான அடியார்கள் தீர்த்தமாடுவதற்குக் காவடி, பாற்குடம் ஏந்தி ஊர்வலமாகச் சென்றனர். (ஐ)



# கிழக்கு மாகாணத்தின் மீள்குடியமர்வுக்கு உதவ வேண்டும்

## பிரிட்டன் குழுவிடம் ஆளுநர் எடுத்துரைப்பு



திருமலை,ஓக.8
கிழக்குமாகாணத்தின்மீள் குடியமர்வு நடவடிக்கைக ளுக்கு உதவுமாறு பிரிட் டன் நாடாளுமன்றக் குழு வினரிடம் .ஆளுநர் ரோஹித போகல்லாகம வேண்டுகோள் விடுத்தார்.
பிரிட்டன் நாடாளுமன்றக் குழுவினர் கிழக்கு மாகா ணத்துக்கு நேற்றுப் பய ணம் செய்தனர். அங்கு கிழக்குமாகாண ஆளுநரு டன் சிறப்புக்கலந்துரையா டலை மேற்கொண்டனர்.
திருகோணமலை மாவட் டச் செயலக அலுவலகக் கேட்போர்கூடத்தில்இந்தக் கலந்துரையாடல் நடை பெற்றது. "கிழக்கு மாகா ணத்தில்நீண்டகாலமாகத் தீர்க்கப் பட்டாத பல பிரச்சி னைகள் உள்ளன. குறிப் பாக மக்களின் மீள்குடிய மர்வு, காணிகள்விடுவிப்பு, பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு, ஆசிரியர்கள் பற் றாக்குறை,வறட்சிநிலமை, தொழில்வாய்ப்புக்கள்உள் ளிட்டபலபிரச்சினைகளை மக்கள் எதிர்கொண்டுள்ள னர். இதற்காக மக்கள் போராட்டங்களையும்நடத் தியுள்ளனர்.
மக்களின் இந்தத் தேவை கள் உடனடியாக நிறை வேற்றப்பட வேண்டும். இதற்குப் பிரிட்டன் அரசு உதவிகளை வழங்க வேண்டும். கொழும்பு அர சுடன் பேச்சுக்களை மேற் கொள்ள வேண்டும்" இவ் வாறு கிழக்கு மாகாண ஆளுநர்பிரிட்டன்நாடாளு மன்றக்குழுவிடம்எடுத்துக் கூறினார். இதற்குப் பதில ளித்த பிரிட்டன் நாடாளு மன்றக் குழு. "இலங்கை மக்களுக்கு உதவிகளை வழங்கத்தயாராக இருக்கி ன்றோம். பிரிட்டன் அரசி டம்இலங்கைநிலவரத்தை எடுத்துக் கூறி அரச தரப்புக ளுடன் சந்திப்புக்களை நடத்த ஏற்பாடுகளை மேற் கொள்வோம். மக்களின் நிலமைகளை நேரடியாக அவதானித்துள்ளோம்" என்று தெரிவித்தனர்.
அதேவேளைஇலங்கையி லிருந்து அகதிகளாகச் சென்றுஇந்தியாவில்தங்கி யுள்ளவர்கள் நாடு திரும்பினால் அவர்க ளுக்கு உதவிகளைவழங் கத்தயாராக இருக்கிறோம் என்று ஆளுநர் தெரிவித் தார்.
இதில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களானஅப்துல் லாஹ் மஹ்ரூப், எம்.எஸ். தெளபீக்கே, துரைரெட்ண சிங்கம், கிழக்கு மாகாண சபை அமைச்சர்களான ஆரியவத்தி கலப்பத்தி, எஸ். தண்டாயுதபாணி. கே.துரைராஜசிங்கம் மற் றும் கிழக்கு மாகாண உறுப்பினர்கள், அமைச் சுக்களின் செயலாளர்கள் பிரதேச செயலர்கள் ஆகி யோர் சந்திப்பில் கலந்து கொண்டனர். (ஐ-10,45)

## 15 வயது மாணவன் நீரில் மூழ்கிச் சாவு

திருகோணமலை, ஓக. 8
நண்பர்களுடன் கடலில் குளிக்கச் சென்ற 15 வயது மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்தார். இந்தச் சம்ப வம் திருகோண மலை புல்மோட்டைப் பகுதியில் நேற்று நடந்தது. புல்மோட் டைப்பகுதியில்உள்ளஅரிசி மலைக்கடலில்மாணவன் தனது நண்பர்களுடன் குளிக்கச் சென்றுள்ளார். கடலில் குளித்துக் கொண்டி ருந்த மாணவன் நீண்ட நேரமாக வெளிவர வில்லை. அதனையடுத்து நண்பர்கள் மாணவனின் பெற்றோருக்குத் தெரியப்ப டுத்தினர். புல்மோட்டை மீனவர்கள் கடலில் தேடு தல் மேற்கொண்டனர். சுமார் ஒன்றரை மணித்தி யாலயத்துக்குப் பின்னர் மாணவனைச் சடலமாக மீட்டனர்என்றுதெரிவிக்கப் பட்டது. திருகோண மலை புல்மோட்டையைச்சேர்ந்த அமீர்நபீஸ்(வயது15) தரம் 10இல்கல்விபயிலும்மாண வரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
மாணவனின் சடலம்உடற் கூற்றுப்பரிசோதனைக்காக புல்மோட்டைதளமருத்துவ மனையில்வைக்கப்பட்டுள் ளது என்று தெரிவிக்கப்பட் டது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம் பித்துள்ளனர். (ஐ-10, 45)

## வாகன விபத்தில் இருவர் காயம்

வவுனியா, ஓக. 8
வவுனியாமணிக்கூட்டுச்சந் தியில் நடந்த வாகன விபத் தில் இருவர் காயமடைந்த னர். அவர்கள் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்என்று தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்து நேற்று பி.ப. 2.50 மணியளவில் நடந்தது. கந் தசுவாமி ஆலய வீதியுடாக வைரவப்புளியங்குளம் நோக்கிப் பயணித்த மோட் டார் சைக்கிளுடன், மணிக் கூட்டு சந்தியடியில் கண்டி வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ஹைஏஸ் வாகனம் மோதி விபத்துக்குள்ளாகின எனத் தெரிவிக்கப்பட்டது.
விபத்தில் மோட்டார் சைக்கி ளில் பயணித்த 52,55 வய துடையஇருவர்காயமடைந் தனர். விபத்துத்தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-10)

## மாற்றுத்திறனாளிகளின் உற்பத்திக் கண்காட்சி





கிளிநொச்சி, ஓக. 8
மாற்றுத்திறனாளிகளால் உற்பத்திசெய்யப்பட்ட உற்பத்திப் பொருள்களின் காட்சிப்படுத்தல் நிகழ்வு நேற்று ஆரம்பிக் கப்பட்டது. கிளிநொச்சி கருணா நிலையத்தில் உற்பத்திப் பொருள்கள்காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மாற்றுத்திறனாளி களை ஊக்குவிக்கும் நோக்குடன் அவர்களால் ஆக்கப்பட்ட பொருள்கள்கண்காட்சியில்காட்சிப்படுத்தப்பட்டன. காட்சிப் பொருள்களாகவைக்கப்பட்டிருந்த ஆக்கப்பொருள்களைப் பெருமளவு மக்கள் ஆர்வத்துடன் கொள்வனவு செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. மெதடிஸ்த திருச்சபையின் டேவ் லிங்க் அமைப்பின் ஏற்பாட்டில் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத்திற னாளிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். (ஐ-9)

## சிலாவத்துறை மருத்துவமனையின் புதிய கட்டடம் நேற்றுத் திறந்து வைப்பு

மன்னார், ஓக. 8
மன்னார் சிலாவத்துறை மருத்துவமனையின் புதிய கட்டடத்தைச் சுகாதார அமைச்சர்மருத்துவர்ராஜித சேனாரத்னநேற்றுத்திறந்து வைத்தார். கட்டடத் திறப்பு விழாவின் பின்னர் மருத்து வமனை அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். குப் பணித்தார். அதே வேளை புத்தளம், மன்னார் மாவட்டங்களிலுள்ள மருத் துவமனைகளின் குறைபா டுகள்தொடர்பாக அமைச்சர் ரிசாத் பதியுதீன் சுகாதார அமைச்சரிடம்எடுத்துக்கூறி யிருந்தார். அதற்கமைவாக இந்தப் பிரதேசத்திலுள்ள மருத்துவமனைகளின்மறு



மருத்துவமனையில் மருத் துவர்பற்றாக்குறை, தாதியர் பற்றாக்குறை, மருத்துவ உபகரணங்கள் பற்றாக் குறை, வளப்பற்றாக்குறை தொடர்பாக அதிகாரிகள் எடுத்துக் கூறினர். அதற்கு ரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுகா தார அமைச்சர் அதிகாரிக ளுக்குப் பணிப்புரை விடுத் தார். சிலாவத்துறைமருத்து வமனையை ஆதார மருத் துவமனையாக தரம் உயர்த்துமாறு வேண்டு கோள் விடுக்கப்பட்டது.
அதற்குரிய திட்ட வரைவுக ளையும், ஆவணங்களை யும் ஒரு மாதகாலத்துக்குள் சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சர் அதிகாரிகளுக் சீரமைப்புக்காகவும், ஏனைய மருத்துவ வசதிக ளுக்காகவும் சுகாதார அமைச்சர் நிதியொதுக்கீடு செய்துள்ளார். அதன் முதற் கட்டமாகவே இந்த மருத்து வமனையில் புதிய கட்டடம் அமைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ் தான், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ரிப்கான்பதியுதீன், வி. ஜயதி லக, கிரபைட் லங்கா நிறுவ னத் தலைவர் அலிகான் ஷரீப் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் ஹூனைஸ்பாரூக் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-10)



திருகோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. சிறப்புப்பூசை வழிபாடுகளுடன் சிவாச்சாரியார்கள் கொடியேற்றினர். இதில் எதிர்க்கட்சித்தலைவர் இரா. சம்பந்தன் உட்பட பக்தர்கள் வழிபாட்டில் ஈடுபட்டனர். (ஐ-40)

# விஞ்ஞானத்தை நோக்கிப் போவதற்கு பிள்ளைகளைத் தயார் செய்யுங்கள்

## புலமைப் பரிசில் வழிகாட்டல் செயலமர்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஓக. 8

"விஞ்ஞானத்துக்கு நிகர் விஞ்ஞானம்தான் எப்போதும் முதன்மையாக இருக்கின்றது. விஞ்ஞானத்தை நோக்கிப் போவதற்குப் பிள்ளைகளைத் தயாராக்குங்கள்."

இவ்வாறு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

உதயன் குழுமத்தின் ஏற்பாட்டில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தென்மராட்சி மாணவர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதன் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:



புலமைப் பரிசில் வழிகாட்டல் செயலமர்வு நடக்கும் எந்த இடமாக இருந்தாலும் அங்கு அதிகளவான பெற்றோர்களைக் காணலாம். புலமைப் பரி சில் வறுமைக் கோட்டின் கீழ் இருப்பவர்களுக்கு என்றுதான் சொல்லப்பட்டது. தற்போது வெட்டுப் புள்ளியாக மாறி நல்ல பாடசாலைகளுக்கு பிள்ளைகளைக் கொண்டு போவதற்குரிய ஒரு வழியைத் தேடிவிட்டது. அது ஒரு பிழையான வழி. எந்த மாணவனும் 70 புள்ளிகளுக்கு மேல் பெறுவானாக இருந்தால் அவன் புலமைப்பரிசில் சித்தியெய்தியவன்தான். வெட்டுப்புள்ளி ஒன்றுதான் அதனை மாற்றி அமைக்கும். ஆகவே நெருக்குதல்கள், அழுத்தங்கள் பிள்ளைகளுக்குக் கொடுப்பதை நீங்களாகவே தவிர்த்துக் கொள்ளுங்கள். இந்த விடயத்தில் பெற்றோர் அவதானம் செலுத்தவேண்டும்.


பாடவிதானங்கள் எல்லாம் தொழில்நுட்பவியலைநோக்கி ஓடுகின்றன. பாடசாலைகளில் அவை அறிமுகப்படுத்தப்பட்டுவிட்டன. தொழில்நுட்ப கூடங்கள், ஆராய்ச்சி கூடங்கள் வந்துகொண்டிருக்கின்றன. முன்பு மருத்துவரையோ, பொறியியலாளரையோ, சட்டத்தரணியையோ, கணக்காளரையோ தான் எங்களுக்குத் தெரியும். ஆனால் இன்று அப்படிஅல்ல. அநேகமான மாணவர்கள் தற்போது கலைத்துறையை நாடுகின்றனர்.

விஞ்ஞானத்துக்கு நிகர் விஞ்ஞானம் தான் எப்போதும் முதன்மையாக இருக்கின்றது. விஞ்ஞானத்தை நோக்கிப் போவதற்குப் பிள்ளைகளைத் தயாராக்குங்கள். எல்லாப் பிள்ளைகளுமே இங்கு கெட்டிக்காரர்கள்தான் - என்றார். (4)

# யாழ்ப்பாணம் சோனகர் தெருவில் நூலகம் திறப்பு

யாழ்ப்பாணம்.ஓக.8

யாழ்ப்பாணம், சோனகர் தெருவில் நூலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. 136, கலீபா அப்



துல் காதர் சாலையில் நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு நூலகம் திறந்து வைக்கப்பட்டது. நூலகத்திறப்பு விழாவில் ஜேஓ74 நண்பர்கள், மஸ்ஜித் முஹம்மதியா, ஜும்மா பள்ளிவாசல் தலைவர் ஏ.சி முபீன், எழுத்தாளர் இக்பால், மூத்த ஊடகவியலாளர் கலாபூஷணம் லாபிர் ஆகியோர் கலந்துகொண்டனர். 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் கல்வி கற்று வெளியேறிய நண்பர்கள் இணைந்து ஜெஓ74 என்ற அமைப்பை உருவாக்கி அந்தப் பகுதியில் பல்வேறு சேவைகளைச் செய்து வருகின்றனர். குறித்த நூலகமானது யாழ்ப்பாணம், சோனகர் தெருவில் நீண்ட காலம் நிலவிய நூலகத் தேவையை நிறைவு செய்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (21)

# பொலிஸாரின் கைதுகளால் துன்னாலை மக்கள் அச்சம்

## நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சரிடம் மனு

யாழ்ப்பாணம் ஓக. 8

வடமராட்சி துன்னாலைப் பகுதியில் கடந்த சில தினங்களாக இடம்பெற்றுவரும் கைது நடவடிக்கையைத் தடுத்து நிறுத்திநீதியை நிலைநாட்டித்தரவேண்டும் என்று துன்னாலை பிரதேச மக்கள் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். முதலமைச்சரை நேற்று சந்தித்த மக்கள் தமது கோரிக்கை அடங்கிய மனுவை அவரிடம் கையளித்தனர்.

இது தொடர்பில் வடமராட்சிப் பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு முதலமைச்சர் கடிதம் அனுப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

துன்னாலைப் பகுதி மக்கள் கையளித்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

துன்னாலை பகுதியில் பொலிஸாரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி இளைஞன் ஒருவர் துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்தார். அதன் விளைவாக எமது பிரதேசத்தில் பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையே அசாதாரண நிலமை ஏற்பட்டிருந்தது. அந்தச் சம்பவத்துடன் தொடர்பில்லாதவர்களை வேண்டுமென்று பொலிஸாரும் சிறப்பு அதிரடிப் படையினரும் கைது செய்கின்றனர். அவர்களால் கைது செய்யப்படும் இளைஞர்கள் நீதி மன்றத்தில் முற்படுத்துவதற்கு முன்னர் பல சித்திரவதைகளுக்கு ஆளாகின்றனர்.

கடந்த 31ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றுக்குச் சென்ற 5 இளைஞர்களை பொலிஸார் கைது செய்தனர். கைது செய்தவர்களின் கண்களை கட்டிச் சித்திரவதைக்கு உட்படுத்தியுள்ளனர். சிறைக்குள்ளும் அவர்களை அடித்து துன்புறுத்துவதாக அறிய முடிகின்றது. இவ்வாறான மனித உரிமை மீறல்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்துகின்றோம்- என்றுள்ளது.

இது தொடர்பில் முதலமைச்சர் வடமராட்சிப் பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

'துன்னாலைப் பகுதியில் சுற்றிவளைப்பு நடத்தப்படுவதால் அந்தப் பகுதி மக்கள் அச்சத்தில் உள்ளனர். தற்போது பரீட்சைக் காலம் அண்மித்துள்ள நிலையில் இவ்வாறான செயற்பாடுகளால் மாணவர்கள் விரக்தியடைந்துள்ளனர். இந்த நடவடிக்கையில் பொலிஸாரை மட்டும் பயன்படுத்தாது வேறு சாராரைப் பயன்படுத்துவதால் போர்காலச் சூழ்நிலை போன்ற எண்ணம் ஏற்படுகின்றது - போர்ச் சூழலை மீள ஞாபகப்படுத்துகின்றது. இவ்வாறான நிலமையை தவிர்க்கவேண்டும். யார் மீதாவது சந்தேகம் இருப்பின் பொலிஸாரைக் கொண்டு அவர்களைக் கைது செய்து நடவடிக்கையை மேற்கொள்ள முடியும்' - என்று முதலமைச்சரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-8,101)



சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயத் திருவிழா திருப்பலி நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் யாழ்ப்பாண மாவட்டக் குரு முதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் தலைமையில், அருட்தந்தையர்களான ஸ் ரீபன், வினோதன் றெக்ஸ் சௌந்தரா ஆகியோரால் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. (21)

# தென்மராட்சியில் டெங்கு அதிகரிப்பு

## அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்து

தென்மராட்சி பிரதேசத்தில் டெங்கு நோய்த் தொற்றின் தாக்கம் அதிகரித்து வருவதால் பொதுமக்கள் அவதானத்துடன் இருக்குமாறு சுகாதாரப் பகுதியினர் எச்சரித்துள்ளனர்.

கடந்த வாரம் பிரதேசத்தில் மழை பெய்ததையடுத்து டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளது. அதனால் இந்த மாதத்தின் முதல் ஆறு நாள்களில் 20 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் அனைவரும் பல்வேறு தேவைகளுக்காகத் தென் பகுதிக்குச் சென்று திரும்பியவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. இவ்வாறான நோயாளர்களால் அயலவர்கள் பாதிக்கப்படும் அபாயம் காணப்படுகிறது.

அடுத்து வரும் மாதங்களில் பருவ மழை ஆரம்பித்துவிடும். குடியிருப்பாளர்கள் தமது குடியிருப்பு மற்றும் அயல் பகுதிகளை டெங்கு நுளம்பு உற்பத்தியைத் தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

பிரதேசத்தில் கடந்த ஜூன் மாதம் 26 பேர்டெங்குநோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தனர். ஜூலை மாதத்தில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டு எண்ணிக்கை 69 ஆகக் காணப்பட்டது. இந்த நிலையில் ஒகஸ்ட் மாதத்தில் முதல் ஆறு நாள்களில் 20 பேர் பீடிக்கப்பட்டுள்ளனர். இந்தமாத முடிவில் எண்ணிக்கை 100ஐ விட அதிகரிக்கும் என்று கூறப்பட்டது.

அண்மைக் காலமாக புலம்பெயர் நாடுகளிலிருந்து சொந்த இடங்களுக்கு வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததுள்ளது. இவர்களை வரவேற்க வழியனுப்ப மற்றும் இவர்களுடன் சுற்றுலா செல்வதற்காகத் தென்பகுதிக்கு சென்று வருவோரே டெங்கு நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தென்பகுதிக்குச் செல்வோர் நுளம்பு கடிக்காமல் அதற்கான மருந்துகளைப் பாவிக்குமாறும் அங்கு தங்கும் வேளைகளில் நுளம்புவலைகளை பயன்படுத்துமாறும் சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (4 - 9)

# காணி நடுவர்களுக்கு சமாதான நீதவான் பட்டம்

யாழ்ப்பாணம், ஓக.8

காணி சம்பந்தமான சிறப்பு நடுவர் சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்குச் சமாதான நீதவான் பட்டம் வழங்கப்படவுள்ளது என நீதி அமைச்சுடன் இணைந்த நடுவர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி எம். திருநாவுக்கரசு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களில் நிலவும் காணி தொடர்பான பிணக்குகளைத் தீர்ப்பதற்கு அந்த மாவட்டங்களுக்கான சிறப்புக் காணி நடுவர் சபைக்கு 66 பேர் நடுவர்களாக நியமனம் பெற்றுள்ளனர். இவ்வாறு நியமனம் பெற்றவர்களுக்கே சமாதான நீதவான் பட்டம் பதவி வழியாக வழங்கப்படவுள்ளது. இவர்களுக்கான அரச இலச்சினையும் வழங்கப்படவுள்ளது. தெரிவான சிறப்பு காணி நடுவர்களுடைய பெயர் விவரங்களை விரைவில் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் நடுவர் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது" - என்றார். (21,50)



ஈழத்தின் முதலாவது தமிழ்ப்பெண் விமானியான டென்மார்க்கைச் சேர்ந்த அர்ச்சனா செல்லத்துரையின் பாராட்டு விழாவும், 'மறத்தி' இறுவட்டு வெளியீட்டு விழாவும் நேற்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. சிம்மக்குரலோன் சி.நாகேந்திரராசாவின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். (21)

அரசியல் கைதிகளான நிமலரூபன், டில்ருக்ஸன் அடித்துக்கொலை:

# யாழ்ப்பாணம், வவுனியாவில் இன்று கவனவீர்ப்பு

## அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் இடம்பெறும்

வவுனியா, ஓக 7


சிறையில் அடித்துக் கொல்லப்பட்ட அரசியல் கைதிகளான நிமலரூபன், டில்ருக்ஸன் ஆகியோரது 5ஆம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

இந்தப் போராட்டங்கள் இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மையப் பேருந்து முன்பாக இடம்பெறவுள்ளன. இந்த போராட்டத்தை அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு ஒழுங்குபடுத்தியுள்ளது. வவுனியாவில் இடம்பெறும் போராட்டத்துக்கு வவுனியா மாவட்ட சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும் வழங்கி நிற்பதாக அந்த அமைப்பின் செயலாளர் சு.டொன்பொஸ்கோ தெரிவித்தார்.

வவுனியா சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யுமாறும், அல்லது தங்கள் மீதான வழக்குகளைத் துரிதப்படுத்துமாறு வலியுறுத்தியும் கடந்த 2012ஆம் ஆண்டு ஜூலையில் உணவு ஒறுப்பில் ஈடுபட்டனர். அன்றைய மகிந்த ராஜபக்ச ஆட்சியில் அரசியல் கைதிகள் நடத்திய அந்தப் போராட்டத்தை நிறுத்த இராணுவத்தினர் அனுப்பப்பட்டார்கள். அங்கு சென்ற இராணுவத்தினர் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தோர் என்று சந்தேகிக்கப்பட்ட அரசியல் கைதிகளைத் தனிமைப்படுத்தி அவர்கள் மீது மோசமான முறையில் தாக்குதலில் ஈடுபட்டனர். இதில் அரசியல் கைதிகள் 15 பேர் வரை கடுமையான காயங்களுக்கு உள்ளானார்கள். அவ்வாறு காயங்களுக்குள்ளான நிமலரூபன் அடுத்த நாளே உயிரிழந்தார். டில்ருக்ஸன் உடல் அசைவற்ற நிலையில் மருத்துவமனையில் கை, கால்கள் விலங்கிடப்பட்ட நிலையில் சிகிச்சை வழங்கப்பட்டு ஒரு மாதத்தின் பின்னர் உயிரிழந்தார். இருவரும் உயிரிழந்து 5 ஆண்டுகள் நிறைவடைகின்றன. அந்த நாளை நினைவு கூர்ந்தும், அவ்வாறு அரசியல் கைதிகள் மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குல் தாரிகள் தண்டிக்கப்படாமையைக் கண்டித்தும், தாக்குதல் தாரிகளை நீதித்துறை முன் நிறுத்தக் கோரியும், படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்பங்க ளுக்கு உரிய இழப்பீடுகளை வழங்கவும், அனைத்து அரசியல் கைதிகளையும் உடனே விடுவிக்கவும், தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்கக் கோரியுமே இன்று கவனவீர்ப்புப் போராட்டங்கள் இடம்பெறவுள்ளன என அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மையப் பேருந்து நிலையம் முன்பாகவும் இன்றையதினம் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இலங்கை ஆசிரியர் சங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம், கிராமிய உழைப்பாளர் சங்கம், சமூக விஞ்ஞான ஆய்வு மையம், தமிழ் மக்கள் வாழ்வுரிமைக்கான செயற்பாட்டு மையம், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு ஆகியன . யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் கவனவீர்ப்பு போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளன. (21)

## சந்திரகிரகணம் நேற்றிரவு யாழ்ப்பாணத்தில் தெரிந்தது



யாழ்ப்பாணம், ஓக. 8

சூரியன், சந்திரன், பூமி ஆகியவை ஒரே நேர்கோட்டில் சந்திக்கும் நிகழ்வான சந்திரகிரகணம் நேற்றிரவு 10. 52 மணிக்கு ஆரம்பமாகியது. பூமியின் நிழல் சந்திரன் மீது விழத் தொடங்கியது. இந்த நிகழ்வு இரவு 10.52 மணிக்கு ஆரம்பமாகி 12.48 மணிவரை நீடித்தது. யாழ்ப்பாணத்தில் சந்திரகிரணத்தைக் காண முடிந்தது. (வ)

## தெய்வீகத் தொடர் இசைப் பேருரை மூன்றாம் நாள்

யாழ்ப்பாணம் ஓக.6

யாழ்ப்பாணம் நல்லூர் கந்த சுவாமி ஆலய வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் இடம்பெறும் "தெய்வீகத் தொடர் இசைப்பேருரை"யின் மூன்றாவது நாளான இன்று கம்பராமாயணத்தின் "கல் பெண்ணானது "எனும் பகுதி இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன குரு மூர்த்த ஆலய மண்டபத்தில் இடம் பெறும். நிகழ்வைக் கான கதா வாரிதி கலாபூஷணம் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா நிகழ்த்தி வருகின்றார். (21)

## கந்தபுராண வாழ்வியல்: 12ஆம் நாள் இன்று

யாழ்ப்பாணம், ஓக.8

நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழாவை முன்னிட்டு கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் நிகழ்வுகள் அரங்கேறும் "கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம்" 12 ஆம் நாள் வைபவம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் மகாலிங்கம் ஞானசம்பந்தன் கலந்து கொள்ளவுள்ளார் என அறிவிக்கப்பட்டது. (21)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்:

## வெட்டுப் புள்ளிகளைப் பெறுவதற்கு மாணவர்களை தூண்டிவிடுங்கள்

### சாவகச்சேரி வர்த்தக சங்க உபதலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.8

"புலமைப்பரிசில் பரீட்சையைப் பொறுத்தளவில் மாற்றுக் கருத்துக்கள் பல இருக்கலாம். ஆனால் வெட்டுப் புள்ளியை எடுப்பதற்கு அந்தப் பிள்ளையைத் தூண்டி விடுவதில் எந்தப் பிழையும் இல்லை. தூண்டிவிடுங்கள் அந்தப் பிள்ளை சிறப்பான புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளட்டும்" என சாவகச்சேரி வர்த்தக சங்க உபதலைவர் லயன் பிரகாஸ் தெரிவித்தார்.

நடப்பாண்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் தென்மராட்சிப்பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான செயலமர்வு நேற்று முன்தினம் தென்மராட்சியில் இடம்பெற்றது. உதயன் குழுமத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இது இன்று நேற்று நடக்கின்ற நிகழ்வு அல்ல. எனக்குத் தெரிந்தளவில் கடந்த 5 வருடங்களாக இந்த நிகழ்வு மிகச் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டு நடைபெறுகிறது. இதற்காக உதயன் குழுமத்தினருக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்வோம். செய்கின்ற உதவிகளை நீங்கள் மறந்து விடக்கூடாது. உங்களின் கல்வி வளர்ச்சிக்காக உங்களைச் சிறந்த பெறுபேறு அடைய வைப்பதற்காக அவர்கள் எந்தவித பலனையும் உங்களிடம் இருந்து எதிர்பார்க்காமல் உங்களுக்காக செய்கின்ற இந்தச் சேவைக்காக நன்றி மிக்கவர்களாக நீங்கள் இருக்க வேண்டும். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. நாங்கள் வெறும் வாயால் சொல்கின்ற நன்றி மட்டம் இதற்கு சிறந்த பரிசாக இருக்க முடியாது. நீங்கள் எடுக்கப்போகின்ற புள்ளி, நீங்கள் இந்தப் பரீட்சையில் செய்யப் போகின்ற சாதனைகள் அவைதான் அவர்களுக்குக் கொடுக்கின்ற சிறந்த பரிசாக அமையும். தன்நிலையை உணர்ந்து கொள்வது என்பது மிக முக்கியமானது. எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது இங்கு இருக்கிற 500 பிள்ளைகள் 110 புள்ளிகளைப் பெற்று இங்கு வந்திருக்கிறார்கள். இது பெருமைக்குரிய விடயம். நீங்கள் இன்னும் செய்ய வேண்டியது இந்தக் குறுகிய நாள்களுக்குள் உங்களைக் கட்டுப்படுத்தி பெற்றோரின் சொல்லைக் கேட்டு ஆசிரியர்களின் சொல்லைக்கேட்டு மனதை அடக்கிப் படிக்க வேண்டும். அப்படிச் செய்வீர்களானால் நீங்கள் அனைவருமே வெட்டுப்புள்ளியை அடையமுடியும்.

110 இல் இருந்து வெட்டுப்புள்ளியை அடைவது பெரிய ஒரு காரியல்அல்ல. அந்தச் சாதனையைச் செய்வதற்கு நீங்கள் தயாராக வேண்டும்.

தென்மராட்சியில் இந்துக்கல்லூரியில் இருந்து அல்லது சில வேறு பாடசாலைகளில் இருந்து, அல்லதுசிறிய பாடசாலையான கைதடி நுணாவில் அ.த.க பாடசாலையில் இருந்து கூட விளையாட்டு நிகழ்வுகளில், ஒலிம்பியாட்டில் போய் வெற்றிபெற்று வருகின்ற மாணவர்களின் விவரங்கள் பத்திரிகையில் வந்துகொண்டிருக்கின்றன. இது ஒரு பெருமையான விடயம்.

தென்மராட்சி வலயமட்டத்தில் மட்டும் அடங்கி ஒடுங்கி இருந்தவர்கள் மாகாணமட்டத்துக்குப் போய், தேசியமட்டத்துக்குப் போய், பன்னாட்டுக்குப் போய், ஒலிம்பியாட்டில் சான்றிதழ்களையும், பதக்கங்களையும் பெற்றுக் கொண்டு வருகின்ற ஒரு அற்புதமான நிலமை தற்போது இருக்கின்றது. இங்கு கல்வி வீழ்ச்சி அடையவில்லை. கல்வி சிறப்பாகத் தான் இருக்கின்றது - என்றார். (21)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 80 | 80 | 60 | 80 |
| கத்தரி | 100 | 60 | 140 | 100 | 120 |
| மரவள்ளி | 70 | 80 | 100 | 60 | 80 |
| பயிற்றை | 120 | 160 | 140 | 140 | 180 |
| பாகல் | 200 | 140 | 200 | 180 | 180 |
| க.கிழங்கு | 120 | 140 | 120 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 110 | 120 | 110 | 100 |
| சி.வெங்காயம் | 160 | 150 | 140 | 140 | 120 |
| பூசணி | 80 | 80 | 100 | 70 | 80 |
| தக்காளி | 150 | 160 | 160 | 150 | 140 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 80 | 60 |
| கீரை | 25 | 25 | 40 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 25 | 40 | 15 | 30 |
| ப.மிளகாய் | 250 | 400 | 350 | 400 | 360 |
| புடோல் | 100 | 80 | 100 | 100 | 80 |
| கோவா | 120 | 120 | 160 | 140 | 100 |
| வெண்டி | 80 | 80 | 60 | 100 | 60 |
| போஞ்சி | 120 | 150 | 150 | 160 | 180 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 120 | 120 |
| தேங்காய் | 60 | 70 | 70 | 70 | 70 |
| உ.கிழங்கு | 100 | 100 | 120 | 110 | 120 |
| தேசிக்காய் | 60 | 60 | 80 | 60 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 160 | 200 | 140 | 340 |
| கரட் | 180 | 200 | 200 | 200 | 240 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 100 | 60 | 100 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 500 | 700 | 1000 | 1000 |
| நண்டு | 300 | 300 | 600 | 400 |
| கணவாய் | 600 | 700 | 800 | 1000 |
| பாரை | 500 | 500 | 700 | – |
| சுறா | 500 | 700 | 1000 | – |
| சீலா | 400 | 400 | 600 | 500 |
| விளை | 500 | 400 | 400 | 600 |
| முரல் | 400 | 400 | 500 | 400 |
| கும்பிளா | 400 | 300 | 450 | 500 |
| கிளாக்கன் | 800 | – | 600 | – |
| ஓரா | 300 | 300 | 450 | 400 |
| திரளி | 300 | 200 | 200 | 200 |
| நகரை | 250 | 150 | 400 | – |
| சூடை | 150 | 100 | 200 | 150 |
| ஒட்டி | 200 | 200 | 300 | 350 |
| திருக்கை | 300 | 200 | 400 | – |
| மதனம் | 250 | 150 | 250 | – |
| கொய் | 150 | 30 | 80 | 100 |
| பாலை | 150 | 200 | 600 | – |
| வாழை | 200 | 200 | 500 | – |




நூல் வேலைப்பாடுகள் நிறைந்த காதணிகள் தற்போது நவீன வடிவில் சந்தைக்கு வந்துள்ளன. இவை ஆயிரம் ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றை ஆடைகளின் நிறங்களுக்கு ஏற்பவும் கொள்வனவு செய்யமுடியும்.

# கனியவள அகழ்வுகளும் சட்டவிரோத மீன்பிடியும் கட்டுக்குள் வரவேண்டும்

## அரசதலைவரிடம்கோரும்பிரேரணைகள் 101ஆவது சபை அமர்வில் முன்மொழிவு

யாழ்ப்பாணம், ஓக. 8

முல்லைத்தீவு மாவட்டத்தின் கனிய வளங்கள் அகழ்வு மற்றும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையைக் கட்டுப்படுத்துமாறுஅரசதலைவரிடம் வலியுறுத்தி வடக்கு மாகாண சபையில் இரண்டுபிரேரணைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

நாளைமறுதினம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ள வடக்கு மாகாண சபையின் 101 ஆவது அமர்வில் மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் இந்தப் பிரேரணைகளை முன்மொழியவுள்ளார்.

"முல்லைத்தீவுமாவட்டத்தின்கனிய வளங்கள் உரியஅளவுப்பிரமாணங்களையும் மீறி அகழப்படுகின்றன. அவை அகழப்படும் இடங்கள் மீள் நிரப்பப்படாமல் விடப்படுகின்றன. துறைசார் பிரிவினர் அகழ்வுக்கு அனுமதி வழங்கும்போது, காட்டுகின்ற அக்கறையை பிழையான வகையில் நடைபெறும் அகழ்வின் போதோ அகழ்வின்பின் செய்ய வேண்டிய நடவடிக்கைகளின் போதோ நடைமுறைகளைப் பின்பற்றுவதில் காட்டுவதில்லை.

இதனால் நீண்ட காலமாகப் பாதுகாக்கப்பட்ட கனிய வளங்கள் சட்டவிரோதிகளின் கைகளுக்கு மாறிவிட்டதோ? என்றுஎண்ணத்தோன்றுகின்றது.

இதனைக் காப்பாற்றாவிட்டால் இயற்கைச் சமநிலையில் பெருமளவில் மாற்றங்கள் ஏற்பட்டு மோசமானஅழிவுகளைநோக்கிமுல்லைத்தீவு மாவட்டம் தள்ளப்படலாம்.

அரசின் சுற்றுச்சூழல் கொள்கைகளுக்கு மாறாக அழிவுப்பாதைகளுக்குஇட்டுச்செல்லக்கூடிய வகையான இந்தச் செயல்களைச் செய்பவர்களையும்செய்கின்றவர்களுக்கு துணைபோகின்றவர்களையும் இனங்காணவேண்டும். அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அழிவுகளிலிருந்து முல்லைத்தீவு மண்ணைக் காப்பாற்றவேண்டும் என்று சுற்றுச்சூழல் அமைச்சின் பொறுப்பைச் சுமந்து கொண்டிருக்கம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன விடம் இந்தச் சபை கோருகின்றது என்று அந்தப் பிரேரணையைஉறுப்பினர்க.ரவிகரன் முன்மொழியவுள்ளார்.

"மீன்பிடி முறைமைகள் தெரியாதவர்கள்தான் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் துறைகளில் நியமிக்கப்படுகின்றார்களா? அல்லதுதெரிந்தும் தெரியாதது போல் நாடகமாடுகின்றார்களா? என்று எண்ணத் தோன்றுகின்றது.

இந்த விடயத்தில் கொழும்பிலுள்ள தலைமைத் திணைக்களம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி மற்றொரு பிரேரணையை முன்வைக்கின்றார்.

"முல்லைத்தீவுமாவட்டகடற்றொழில் நீரியல்வளத்துறைத்திணைக்களம் புதியவகையில்சுருக்குவலைகளுக்கு அனுமதிகளை வழங்குகின்றது.

இதனால் சட்டவிரோத மீன்பிடி ஊக்குவிக்கப்படுவதாகவே மீனவ சமூகம் கருதுகின்றது. அனுமதி வழங்கப்பட்ட சுருக்குவலை தொழில் முறைகள் சரியாகப் பயன்படுத்தப்படுகின்றனவா? என்பதுகூடக் கவனிக்கப்படுவதில்லை.

எனவேமீனவசமூகத்தைஒடுக்காத வகையில், விதிமுறைகளோடுஒத்த தொழில்முறைகளை மீனவர்கள் செய்வதற்கு நீதியான செயல்களை மாவட்ட நீரியல்வளத்துறைத் திணைக்களங்கள் மேற்கொள்ள வேண்டும்.

அதற்கு அரச கடற்றொழில் நீரியல் வள அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று அந்தப் பிரேரணையில் முன்மொழியப்படவுள்ளது. (4,8)

# வடமராட்சி வலய கல்விப்பணிப்பாளரின் நியமனத்தை உடன் நிறுத்தவும்

## மாகாண சபையில் பிரேரணை


யாழ்ப்பாணம், ஓக. 8

வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளரின்நியமனத்தை நீக்கம் செய்யுமாறு வலியுறுத்தி வடக்கு மாகாண சபை அமர்வில் பிரேரணை ஒன்று முன்வைக்கப்படவுள்ளது. அதிகாரம் இல்லாத ஒருவர் குறித்தநியமனத்தைவழங்கியுள்ளமையும் காரணம் என்று அதில் தெரிவிக்கப்பட்டது.

நாளைமறுதினம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ள மாகாணசபைஅமர்வில்சபை உறுப்பினர்அ.பரஞ்சோதிஇந்தப்பிரேரணையைமுன்மொழியவுள்ளார்.

"கடந்தஜூலைமாதம்நடைமுறைப்படுத்தப்பட்ட வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளரது நியமனம் முறையற்ற விதத்தில்வழங்கப்பட்டது. எந்தவிதமான கொள்கைகளுமில்லாமல் காலத்துக்குக் காலம் சந்தர்ப்பத்துக்கேற்றவாறு தாம் விரும்பியவர்கள் பதவிக்கு வரக்கூடியதாகநியமனங்கள் கையாளப்படுகின்றது என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. முன்னர் பதவி உயர்வுகள்சம்பந்தமாகசேவைமூப்பு கருத்தில் எடுக்கப்பட்டு பதவி உயர்வுகள்வழங்கப்பட்டன. நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு அகில இலங்கை ரீதியாக பதவி உயர்வுக்கு நியமனம் வழங்க அதிகாரம் இல்லாத ஒருவரால்இந்தப்பதவிக்கான நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இந்தப் பதவியை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்று இந்தச் சபை கோருகின்றது" என்று பிரேரணை கூறப்பட்டுள்ளது. (4,8)



# 12ஆம் திருவிழா

### கந்தா வேலா வருக!

எங்கள் குலம் காக்க
வந்த வேலையா
எம் குறை தீர்க்க
உன்னையன்றி யாரையா
ஔவைக்கு பிடித்த முருகையா
உன் அழகு முகம் காண ஓடி
வந்தோமையா
கோடி மக்கள் உன் முகம்
காண கோடி புண்ணியம் தரும்
நல்லூர் கந்த வேலாயுதா!
உன் புன்னகை ஜொலிக்கும்
சிரிப்பழகு காண என்ன பயன்
நாங்கள் செய்தோமையா!
வேலவா வடி வேலவா
எனும் நாமம் கொண்ட
நல்லூரா!
வள்ளியுடன் தெய்வானையும்
சேர்ந்துவர மனமுருகுது குமரா!

*சுபானுஜன், தெல்லிப்பழை.*

### பேராற்றல் தந்திடையா

சரவணனின் தாள் பணிந்து
சஞ்சலங்கள் போக்கிடுவோம்
பிரணவப் பொருளுணர்ந்து
பிறவிப் பயணடைவோம்

கன்னித் தமிழ் ஞான
கந்த வடிவேலனே
பின்னிப் பிணைந்தெமக்கு (ப்)
பேராற்றல் தந்திடையா
வாழும் வகை தெருட்டும்
வண்மையொளிர்
திண்ணியனே
சூழும் வினையகற்றிச்
சுந்தரத்தைத் தந்திடையா

*கூத்தாடி குஞ்சிதபாதம்*

### அருள் தருபவன் நீயே முருகா

நெற்றிக் கண்ணில் உதித்த
வனே எம்
அகக் கண்ணில் பதிந்தவனே
தாமரை மலரினிலே தவழ்ந்த
வனே எம்
உள்ளமதில் உறைந்தவனே
சூரனை சங்கரித்தவனே நின்
கொடியாய் மாற்றியவனே
நல்லைப்பதியிலே
எழுந்தவனே எம்
நாயகனாய் வீற்றிருப்பவனே
அடியார் குறை தீர்ப்பவனே
யாவர்க்கும்
அருள் தருபவன்
நீயே முருகா

*அரியாலையூர்*
*செல்வி மிஷாந்தி செல்வராஜா*

# பச்சிலைப்பள்ளிக்கு ரூ.13 மில்லியன் நிதி ஒதுக்கீடு

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் இந்த வருட வாழ்வாதார திட்டங்களுக்கு என ஒரு கோடியே 36 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

மீள்குடியேற்றஅமைச்சும்தேசியஒருமைப்பாட்டுஅலுவலகமும்இணைந்து இந்த நிதியை ஒதுக்கியுள்ளன.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில்உள்ளவர்களுக்குஇந்தவருட வாழ்வாதாரத்திட்டங்களைவழங்குவதற்காக இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்றஅமைச்சு88பயனாளிகளுக்கென 88 லட்சம் ரூபா நிதியும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் 50 பேருக்கு விவசாய வாழ்வாதாரங்களும் மறுவாழ்வு அளிக்கப்பட்ட 48 பேருக்கு என 48 லட்சம் ரூபாவும் ஒதுக்கியுள்ளதாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன. (4.6)

## வறுமை ஒழிப்புத் திட்டத்தில்

# சபைகளின்கருத்திட்டவிவரங்களை முதலமைச்சர்விக்கி கோரியுள்ளார்

வடக்கில்உள்ள34உள்ளூராட்சி சபைகளின் வறுமை ஒழிப்புக் கருத்திட்ட விவரங்களையும் அதன் முன்னேற்ற விவ ரங்களையும்வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளூராட்சி அமைச்சுஊடாகக் கோரியுள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின்தேசியவேலைத் திட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட வறுமை ஒழிப்பு வேலைத்திட்டம் நாடு முழுவதும் 335 உள்ளூராட்சி சபைகளில் கூடுதல் முக்கியத்துவம் அளித்து முன்னெடுக்கப்படுகின்றது. வறுமை தணிப்பை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு அரச திணைக்களங்களும் கருத்திட்டங்களை முன்மொழிந்து சமர்ப்பிக்குமாறு கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர்பணிக்கப்பட்டது. இதன் அடிப்படையில்வடக்குமாகாண உள்ளூராட்சி சபைகள் உட்பட ஏனையஅரசதிணைக்களங்கள் முன்னெடுத்த வறுமை ஒழிப்பு திட்டங்களின் முன்னேற்ற விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

முதற்கட்டமாக வடக்கு மாகாணத்தில்வறுமைஒழிப்புசெயற்றிட்டத்தின் கீழ் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களும் ஆகக்குறைந்தது 5லட்சம்ரூபாவுக்கு உட்பட்ட திட்டங்களை முன்வைத்திருந்தன.

சிறுவர்கள், குழந்தைகள், வயோதிபர்கள், சமூகமட்ட அமைப்புக்கள் மற்றும் நலத்திட்ட விவரங்களின் முன்னேற்றங்களே இவ்வாறு ஆராயப்படஉள்ளதாக உள்ளூராட்சி அமைச்சு செய்திகள் தெரிவிக்கின்றன. (4.50)



# சிறுவர் இல்லங்களை ஒகஸ்ட் இறுதிக்குள் பதிவு செய்வது கட்டாயம்

## வடக்கு மாகாண ஆணையாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக. 8
வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து சிறுவர் இல்லங்களும் இந்தமாத இறுதிக்குள் வடக்கு மாகாண சபையின் நியதிச் சட்டத்தின் கீழ் பதியப்படல் வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண சிறுவர்கள் நன்னடத்தை பராமரிப்புத் திணைக்களத்தின் ஆணையாளர் தி. விஸ்வரூபன் தெரிவித்தார்.
இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:
சிறுவர் இல்லங்களைப் பதிவு செய்தல் பராமரித்தல், சீரமைத்தல் போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு வடக்கு மாகாண சபையின் 2016ஆம் ஆண்டு 4ஆம் இலக்கச் சட்டத்தின்படி சிறுவர் இல்லங்கள் யாவும் பதிவு செய்யப்படல்வேண்டும்.
இந்தக் கூட்டம் 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் திகதி நடைமுறைப்படுத்தப்பட்டது. அதனால் இதுவரை காலமும் 1941ஆம் ஆண்டு 22ஆம் இலக்க அநாதைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு வந்த வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து சிறுவர் இல்லங்களும், வடக்கு மாகாண சபையின் கீழ் பதிவு செய்யப்படவேண்டும் என்று மாற்றி அமைக்கப்பட்டது.
வடக்கில் சிறுவர் இல்லங்களைப் பதிவு செய்வதற்கு 6 மாதங்கள் கால எல்லையாக வழங்கப்பட்டன. ஆனால் உரிய ஆவணங்களை முறையாகச் சமர்ப்பித்து இதுவரையில் ஒரேயொரு சிறுவர் இல்லமே பதிவு செய்யப்பட்டுள்ளது. மிகுதி40 இல்லங்களும்பதிவுசெய்யப்படவில்லை. வவுனியா நீதிவான் மன்றில் கடந்த மாதம் 25ஆம் திகதி சிறுவர் அபிவிருத்தி தொடர்பான வழக்கு ஒன்று இடம்பெற்றது. அதில் வடக்கு மாகாண நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யாமல் எந்தவொரு சிறுவர் இல்லமும் நடத்தப்பட முடியாது. அவ்வாறு பதிவு செய்யாமல் நடத்தப்படும் சிறுவர் இல்லங்களின் சேவைகள் முடிவுறுத்தப்படவேண்டும் என்று நீதிமன்று கட்டளை பிறப்பித்தது.
.ஆகவே இந்தமாத இறுதிக்குள் அனைத்துச் சிறுவர் இல்லங்களும் பதிவு செய்யப்படவேண்டும். பதிவு செய்யப்படாத சிறுவர் இல்லங்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (4,ரி)

# சமிக்ஞை குறியீடு



★இனிப்பூட்டிய பானங்களில் அடங்கியுள்ள சீனியின் அளவை தெரிவிப்பதற்காக சிவப்பு, மஞ்சள், பச்சை நிறக் குறியீடுகள் போத்தலில் மூடியிலோ லேபலிலோ [illegible] பொறிக்கப்பட்டிருக்கும்.
★சிவப்பு 100 மி.லீ பானத்தில் அடங்கிய[illegible]ள்ள சீனியின் அளவு,11கிராமுக்கு அதிகம் பாவிப்பதை தவிர்த்தல் வேண்டும்.
★மஞ்சள் 100 மி.லீ பானத்தில் அடங்கியுள்ள சீனியின் அளவு 02 கிராமுக்கும் 11கிராமுக்கும்இடைப்பட்டதாகும்.
★நீரிழிவு நோய் ஏற்படுத்தும் அபாய நிலை உண்டு.
★பச்சை 100மி.லீ பானத்தி[illegible] அடங்கியுள்ள சீனியின் அ[illegible]வு 02 கிராமுக்கும் குறைவாகும். நீரிழிவு நோய் ஏற்படுத்தும் அபாய நிலை கு[illegible]றைவு

*[illegible] கவல்*
*சு.ம.அ.பணி[illegible] னை,*
*யாழ். மாநகர சபை.*


# குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரங்களைப் பெற சபை உறுப்பினர்களிடம் நிதி கோரப்படுகிறது

## பாடசாலை மாணவர்களுக்காக மாகாண சுகாதார அமைச்சு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 8
வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளுக்கு குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரங்களைப் பொருத்துவதற்காக மாகாண சபை உறுப்பினர்களின் ஒதுக்கீடுகளிலிருந்து நிதி கோரப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்தது.
இது தொடர்பில் அமைச்சு மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணத்தில் சிறுநீரக நோய் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகின்றது. சுத்தமான குடிதண்ணீர் அருந்தாமையும் இதற்கு ஒரு காரணமாகிவிட்டது.
இவ்வாறான நிலமைகளில் இருந்து பாதுகாப்புப் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள் சுத்தமான குடிதண்ணீரைப் பருகச் செய்யும் பழக்கவழக்கத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் பாடசாலைகளில் தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரங்களைப் பொருத்தத் தீர்மானித்துள் ளோம். இதற்காகத் தனியான நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை.
ஆனாலும் எமக்கு ஒதுக்கப்பட்ட நன்கொடை நிதி மூலமாக இதனைப்பொருத்தலாம். இதற்கு அமைவாக மாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் நடப்பு வருடத்தில் தனக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து இயந்திரங்களைப் பொருத்தி வருகின்றார். இன்னமும் 3 குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை அவர் பொருத்தவுள்ளார்.
எனினும் பாடசாலைகளுக்கு குடிதண்ணீர் சுத்திகரிக்கும் இயந்திரத்தின் தேவை நிறைவுசெய்யப்படவில்லை. இந்த செயற்பாட்டுக்காக எமது அமைச்சின் ஏனைய உறுப்பினர்களையும் பாடசாலை மற்றும் பொருத்தக்கூடிய இயந்திரங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்களைத் தருமாறும் கேட்டுள்ளோம். இதற்கான விவரங்கள் எமக்கு உறுப்பினர்கள் மூலமாகக் கிடைக்கப் பெற்றவண்ணம் உள்ளன.
அவர்களின் பங்களிப்புடன் பாடசாலைகளில் குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரங்களைப் பொருத்தவுள்ளோம் என்று தெரிவிக்கப்பட்டது. (4,ரி)

# பண்ணையாளர்களுக்கு கால்நடை வளர்ப்பு பயிற்சிகள்

## 12 இடங்களில் நடைபெறவுள்ளன



யாழ்ப்பாணம், ஒக. 8
கால்நடை வளர்ப்பு மற்றும் பராமரிப்பு சம்பந்தமான பயிற்சி நெறிகள் யாழ்ப்பாண மாவட்ட பண்ணையாளர்களுக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன்மூலமாக நடப்பு வருடத்தில் பண்ணையாளர்கள் ஊக்குவிக்கப்படவுள்ளனர் என்று யாழ்ப்பாண மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் வக்சலா அமிர்தலிங்கம் தெரிவித்தார்.
இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:
மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்வதற்காக வருடாந்தம் பண்ணையாளர் மற்றும் கால்நடை வளர்ப்பில் ஆர்வம் உள்ளோருக்கு பல்வேறுபட்ட உதவிகளை வழங்கி வருகிறோம். பால் உற்பத்தி, ஆடு, மாடு, கோழி வளர்ப்பு, புல் வளர்ப்பு, இயற்கை முறை விவசாயம். போன்றவற்றுக்கு உதவிகளைச் செய்து வருகின்றோம்.
இதன் மூலமாகக் கடந்த வருடங்களைவிட உற்பத்திகள் அதிகரித்துள்ளதைத் திணைக்களப் புள்ளி விவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.
பண்ணை வளர்ப்புக்கான கால்நடைகளை வழங்கல், அவற்றுக்கான கொட்டகைகள் அமைத்துக் கொடுத்தல், நடமாடும் மருத்துவ சேவைகளை வழங்கல்.போன்ற பல்வேறு செயற்பாடுகளைச் செய்து வருகின்றோம்.
எனினும் கால்நடைகளை வழங்கும்போது அவை முறையாக பராமரிக்கப்படாததால் அவை உயிரிழக்கின்றன. ஆகவே நடப்பு வருடத்தில் கால்நடைகளை எவ்வாறு பராமரிப்பது மற்றும் அது தொடர்பான பயிற்சிகள் பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காக 12 பிரதேசங்களைத் தெரிவு செய்துள்ளோம். குறித்த பிர தேசத்தில் ஒருநாள் பயிற்சி நெறியில் 30 பண்ணையாளர்கள் உள்வாங்கப்படுகின்றனர் - என்றார். (4,ரி)

# பேருந்து சேவைகளின் ஒழுங்கு யாழ்ப்பாணத்தில் மறுசீரமைப்பு

## மாகாண போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை

யாழ்ப்பாணம் ஒக.8
யாழ்ப்பாண மாவட்டத்தில் மக்களின் போக்குவரத்துத் தேவை அதிகமாக உள்ள இடங்களில் பேருந்து சேவைகள் விரிவாக்கப்படும் என்று வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.
இது பற்றி மேலும் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாண மாவட்டத்தில் தனியார் மற்றும் அரச பேருந்துகள் சேவையில் உள்ளன. இருதரப்பினதும் பிரச்சினைகள் தொடர்பாகச் சங்கங்களை அழைத்துக் கலந்துரையாடப்படுகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சில பாதைகளுக்கு அதிகளவு பேருந்து சேவையும், சில பாதைகளுக்கு பேருந்து சேவை இல்லாத நிலைமையும் காணப்படுகின்றது.
ஒரு பாதையில் அதிகளவான பேருந்துகள் சேவையில் ஈடுபடுவதால் பேருந்து உரிமையாளர்களுக்கு இடையே சச்சரவுகளும் ஏற்பட்டுள்ளன. தீவகப் பகுதிகளுக்குக் குறித்த நேரத்துக்கு இடையில் பேருந்து சேவையும், வெளிமாவட்டப் பணிகளுக்காகத் தரித்து நின்று ஏற்றக்கூடிய தரிப்பிட வசதிகளும் இல்லாமை சுட்டிக்காட்டப்பட்டது. ஆகவே அதிகளவு பேருந்துகள் சேவையில் ஈடுபடும் பாதைகள் கண்டறியப்பட்டு அந்தப் பாதைகளில் பணியில் உள்ள பேருந்துகளை, சேவைகள் இடம்பெறாத அல்லது குறைவாக நடைபெறும் பாதைகளில் பணியில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4,ரி)

# ஆட்டிசம் பற்றிய விழிப்புணர்வுக்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்

## மாகாண சுகாதார அமைச்சு கோருகிறது

யாழ்ப்பாணம், ஒக. 8
ஆட்டிசம் தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்வுகளை நடத்த அனைத்து துறையினரும் முன்வரவேண்டு என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சு கேட்டுள்ளது. ஆட்டிசம் தொடர்பிலானபுரிந்துணர்வு அனைவருக்கும் அவசியம் என்றும் அது குறிப்பிட்டுள்ளது.
இது தொடர்பில் அமைச்சு மேலும் தெரிவித்ததாவது:
ஆட்டிசம் தொடர்பான சிறுவர்களை நாம் கண்டறிந்து அவர்களுக்கான சிகிச்சையை வழங்க முற்படும்போதுதான் அவர்களின் தேவைகளை எம்மால் இனங்காண முடிகிறது. சிறுவயதில் இதனைக் கண்டறிந்தால் அதற்கான சிகிச்சை முறைகளை ஆரம்பிக்கலாம். அதற்கு அனைவரும் முன்வர வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளுக்கு அனைத்து அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களைப் பயன்படுத்த வேண்டும். அலுவலகங்கள், பாடசாலைகள், பொது இடங்கள் ஆகியவற்றில் இவற்றுக்கான விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். அதற்கு அனைவரினதும் ஒத்துழைப்புவேண்டும். சமூக மட்டத்தில் ஆட்டிசம் தொடர்பான பிழையான எண்ணங்களை நீக்கவேண்டும். ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்டவர்கள் சமூக மட்டத்தில் பின்தள்ளப்படுவதால் பலர் ஒதுங்குகின்றனர். ஆகவே ஆட்டிசம் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கையில் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் - என்று அமைச்சு கேட்டுள்ளது. (4,ரி)

# ரவி மீதான தீர்மானம்; விவாதம் நடத்தும் திகதி குறித்து இன்று முடிவு

கொழும்பு, ஓக. 8

ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதத்துக்கு எடுக்கும் திகதி இன்று தீர்மானிக்கப்படவுள்ளது. இன்று நண்பகல் நாடாளுமன்றத் கட்டடத் தொகுதியில் சபாநாயகர் கரு ஜயசூரியவின் தலைமையில் கூடும் கட்சித் தலைவர்கள் இந்தத் தீர்மானத்தை எடுக்கவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தத் தீர்மான வரைவை முடியுமானவரை இந்த மாதத்துக்குள் விவாதத்துக்கு எடுக்கவேண்டும் என்று மகிந்த அணி இந்தக் கூட்டத்தில் வேண்டுகோள் விடுக்கவுள்ளது என்று தெரியவருகிறது.

இதேவேளை, ரவிக்கு எதிரான இந்தத் தீர்மான வரைவை வெல்ல வைப்பதற்காக அரசுக்குள் ஆதரவைத் திரட்டும் முயற்சியில் மகிந்த அணியினர் ஈடுபட்டுள்ளனர் என்றும் இதுவரை 130 வாக்குகள் ரவிக்கு எதிராக விழப் போவது உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டு இந்தப் பிரேரணையைத் தம்மால் வெற்றிபெறச் செய்ய முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். சுதந்திரக் கட்சியின் 96 உறுப்பினர்களும் ரவிக்கு எதிராக வாக்களிப்பது உறுதி என்று அவர் மேலும் கூறினார்.

(த-3)

**மாபிள் வேலை செய்து தரப்படும்**

ஒரு சதுர அடி
45 ரூபா (CS 6467) (14)

தொடர்பு: நிமல் நெல்லியடி
077 334 1281

**கடைத்தொகுதி வாடகைக்குண்டு**

இல. 210 ஆனைப்பந்தி, பருத்தித்துறை வீதியில் கடைத்தொகுதி (கீழ்ப்பகுதியில் ஒரு கடையும், மேற்பகுதியில் 3கடைகளும்) வாடகைக்குண்டு. களஞ்சிய வசதி செய்யக்கூடிய இடமும் உண்டு. (CS 6552) (14)

076 831 3674

**ஆங்கில வகுப்பு**

வீட்டில் வந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும்.
077 534 2025 (CS 6536) (14)

**யாழ் மாநகரில் முதன் முறையாக**
**சினிமா பாடல்களுடன்**



பிரபல தென்னிந்திய பாடகர்
கலைமாமணி
உன்னிகிருஷ்ணன்
மற்றும் பாடகி உத்ரா உன்னிகிருஸ்ணன்
இணைந்து வழங்கும் மாபெரும் இசை நிகழ்ச்சி

இடம் : யாழ்/ஸ்ரான்லி வீதி , லிங்கம் கூல்பார் சந்தியில் (வெலிங்டன் தியேட்டர் மைதானம்)
காலம் : இம்மாதம் 12 ஆம் திகதி (12.08.2017) மாலை 6.00 மணிக்கு
300/=, 500/=, 1000/= டிக்கெட்

டிக்கெட்டுகளைப் பெற்றுக் கொள்ள
The Phone Shop
நெல்லியடி 077 285 0285
பூபாலசிங்கம் புத்தகசாலை 021 222 6693

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் : K.T. பிரசாத்
Ceylon Art Creation
தொடர்பு 077 550 4910

**ஆடி பிறந்திருச்சி!**
**அதிர்ஸ்டம் வந்திருச்சு!**
ஆடி தள்ளுபடி

# வாணி ரெக்ஸ்



உங்கள் வாணி ரெக்ஸ் இன் அசத்தலான ஆடித்தள்ளுபடி

**10%-30% வரை**
விசேட விலைக்கழிவு

- இந்தியாவில் புதிதாக வந்த ஒன்லைன் சாறி வகைகள்
- சிறுவர், சிறுமியர்க்கான நவீன டிசைன் ஆடைகள்
- திருமண, பூப்புனித நீராட்டு விழா பட்டுச்சாறிகள்
- பாம்பூறுக், மொடன் புறோக் வகைகள்
- புதியவகை சல்வார், லெகங்கா, மஸ்தானி ஆடைகள்
- ஆண், பெண், அரச, தனியார் ஊழியர் களுக்கான ஒரே நிற ஆடைகள்

கொள்வனவு செய்யும் பெறுமதிக்கேற்ப அன்பளிப்புக்கள் வழங்கப்படும்

இல.81, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5578, 021 222 9286

**மணமகள் தேவை**

யாழ் இந்து கௌரவகுடும்பம் 1990 ஆம் ஆண்டு பிறந்த கும்ப நட்சத்திரமுடைய கூலி வேலை செய்யும் மணமகனுக்கு வசதி குறைந்த மணமகள் தேவை. (CS 6368) (14)

077 900 1432

**பணிப்பெண் தேவை**

கந்தர்மடம் பரமேஸ்வரா சந்திக்கு அருகில் வசிக்கும் 3பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு தங்கி நின்று வேலை செய்வதற்கு 35 வயதிற்கு மேற்பட்ட பொறுப்புகள் அற்ற பெண் பணியாளர் தேவை. உரிய விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல - 5540
C.O உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**ENGLISH LANGUAGE CENTER**

**IELTS**
Life Skill - A1
**Spoken With Grammar**

G.A.Q, B.A, B.Com மாணவர்களுக்கான தனியான, குழு முறையிலான வகுப்புக்கள்
தொழில் புரிவோருக்கான Professional English Business English வகுப்புக்கள்

ஆரம்பம் - 10.08.2017

நீண்ட காலமாக வவுனியாவில் IELTS இன் அதி சிறந்த பெறுபேறுகளின் வெற்றிக்கான அனுபவம் மிக்க ஆசிரியர்

B.Murali
53, சிவகுருநாதர் வீதி, Brown Road, Neeraviady, Jaffna.
077 798 9830

**13 ஆவது பிறந்தநாள் வாழ்த்து**
**08.08.2017**



240 மாடசாமி கோயிலடி, அண்ணா வீதி பண்டாரிக்குளத்தைச் சேர்ந்த

**செல்வி லதுஸ்ரிகா**

இன்று (08.08.2017) செவ்வாய்க்கிழமை தனது 13 ஆவது பிறந்தநாளை அவரின் இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவர் பல கலைகளையும் கற்று சிறப்புடன் வாழ்கவென மனமகிழ்வோடு வாழ்த்துகின்றோம்.

அம்மா - பொபிற்றா,
அம்மையா - சு.நாகேந்திரன்
அம்மம்மா - தா.யோகேஸ்வரி ,
சசிமாமா குடும்பம் - நெளுக்குளம்
ஆனந்தன் தாத்தா குடும்பம் - திருமன்காடு
பூட்டி, தாத்தாமார், அம்மம்மாமார்,
மாமன்மார், அன்ரிமார், அத்தை,
சித்தப்பா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

அம்மையா.

# வேலைவாய்ப்பு

- ✓ வரவேற்பாளர் (Recepcenist) (சிங்களம், ஆங்கிலம் ஓரளவு தெரிந்தவர்கள்)
- ✓ கணினி வடிவமைப்பாளர் (Graphic Designer)
- ✓ அல்பம் பைண்டிங் (Album Binding)
- ✓ அலுமினியம் பொருத்துபவர் (Aluminium Fitting )
- ✓ மின் ஒட்டு (Welding)
- ✓ உணவு தயாரிப்பாளர் (Cooking)
- ✓ சுத்திகரிப்பாளர் (Cleaner)

பார்த்தீபன் ஆட்ஸ் டிஜிற்றல் கலர் லாப் கிளிநொச்சி நிறுவனத்துக்கு மேற்குறிப்பிட்ட வெற்றிடங்கள் உள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளோர், கிளிநொச்சியில் தங்குமிட வசதியுள்ளோர் தொடர்புகொள்ளவும்.

புதியவர்களுக்கு 6 மாதகாலப் பயிற்சிகளும் பயிற்சியின் போது கொடுப்பனவும் வழங்கப்படும்.

**பார்த்தீபன் ஆட்ஸ்**
**டிஜிற்றல் கலர்லாப் - கிளிநொச்சி**
**077 740 2847**
parththeepanart@gmail.com

# கேள்வி கோரல்

2017/ 2018 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டப் பொதுவைத்தியசாலை வாகனப் பாதுகாப்பு நிலையத்தினைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்.

கிளிநொச்சி மாவட்டப் பொதுவைத்தியசாலை வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை 01.09.2017 தொடக்கம் 31.08.2018 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்களை 08.08.2017 ஆம் திகதி முதல் 15.08.2017 ஆம் திகதி வரை வைத்தியசாலையிலுள்ள நோயாளர் நலன்புரி சங்கத்தின் அலுவலகத்தில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை பின்வரும் கொடுப்பனவினைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

**மீளளிப்புச் செய்யப்படாத தொகை - 1,000.00உம்**
**மீளளிப்புத்தொகை - 10.000.00 உம்.**

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களை 22.08.2017 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன் நேரடியாக மீளளிப்புத் தொகையினைச் செலுத்தி ஒப்படைக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் யாவும் "கி.சின்னராசா, தலைவர், நோயாளர் நலன்புரி சங்கம், மாவட்டப் பொதுவைத்தியசாலை கிளிநொச்சி" முகவரியிடப்பட்ட கடித உறைக்குள் உள்ளடக்கி பொறியிட்டு (Sealed) அதன் இடது பக்க மேல் மூலையில் " 2017/ 2018 ஆம் ஆண்டுக்கான வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி" எனக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

சகல கேள்விப்பத்திரங்களும் 22.08.2017 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கேள்விச்சபையின் முன்னிலையில் திறக்கப்படும்.

சி.ஜீவநாயகம்
(செயலாளர்)

# மாகாணத் தேர்தல் ஒத்திவைப்பை ஆதரிக்கக்கூடாது கூட்டமைப்பு

## அது தமிழருக்கு இழைக்கும் துரோகம் என்கிறது கபே அமைப்பு

மாகாண சபைகளுக்கான தேர்தல்களை ஒத்திவைக்கும் அரசின் திட்டத்தை முதன்மை எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையாக எதிர்க்கவேண்டும் . அவ்வாறு இல்லாவிட்டால் அது தமிழருக்கு இழைக்கப்படும் மாபெரும் துரோகமாகவே கருதப்படும்.

இவ்வாறு நீதியானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் (கபே) அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான கீர்த்தி தென்னக்கோன் நேற்றுத் தெரிவித்தார்.

அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை ஒரே நாளில் நடத்தும் வகையில் அரசமைப்பில் திருத்தம் கொண்டுவரவுள்ள அரசு அதற்காக 20 ஆவது திருத்தச்சட்டவரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, இது நிறைவேறும் பட்சத்தில் எதிர்வரும் செப்ரெம்பரில் நடத்தவேண்டிய கிழக்கு, வடமத்திய, ஊவா ஆகிய மாகாண சபைகளுக்கான தேர்தல்களும் 2019 வரை ஒத்திவைக்கப்படக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இந்த நிலையில் இது குறித்து நேற்று கருத்து வெளியிட்ட கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாண சபைத் தேர்தலை இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைப்பதற்கு அரசு தீர்மானித்துள் ளது. இந்த முடிவைக் கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒட்டுமொத்த கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடுமையாக எதிர்க்க வேண்டும். மாறாக ஆதரவாகத் கைதூக்கினால் அது தமிழர்களுக்கு இழைக்கும் மாபெரும் துரோகமாகவே கருதப்படும்.

தமிழர்களுக்காகவே மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. இதற்காக பல தியாகங்கள் செய்யப்பட்டுள்ளன. எனவே, அந்த மாகாண சபையின் செயற்பாட்டை முடக்கும் வகையில் அதன் அதிகாரங்களில் கையடிக்கும் வகையில் கொண்டுவரப்படவுள்ள திருத்தச் சட்டத்தை முதன்மை எதிர்க்கட்சியின் தலைவரான இரா. சம்பந்தன் முற்றாக நிராகரிக்கவேண் டும். அவ்வாறு செய்யாவிட்டால் சிங்கள மக்களும் அவரைத் துரோகியாகப் பார்க்கவேண்டிய நிலை உருவாகும்.

மாகாண சபைகள் முறைமைக்குத் தெற்கிலுள்ள சிங்கள முற்போக்குவாதிகளும் ஆதரவு வழங்கினர் என்பதை மறந்து செயற்படக்கூடாது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலை வைக்குமாறு நாமே குரல் எழுப்பினோம். அப்போது எமக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல்களை முழு உலகமும் அறியும். இது உட்பட மேலும் சில சனநாயக அம்சங்களைக் கருத்தில்கொண்டு முதன்மை எதிர்க்கட்சிக்குரிய வகிபாகத்தை இது விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிச்சயம் வகிக்கவேண்டும். அத்துடன், ஏனைய சிறுபான்மையினக் கட்சிகளும் இதை எதிர்க்க வேண்டும்என்றார். (கு)

# ரவியால் சபையில் இன்று சூடு பறக்கும்

## நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து- கடும் வாதப்பிரதிவாதங்கள் நடக்கும்

கொழும்பு, ஓக 8

அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தால் அரசியல் களத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ள நிலையில் இன்று நடைபெறும் நாடாளுமன்ற அமர்விலும் அது குறித்து சூடான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாடாளுமன்றம் இன்று பிற்பகல் ஒரு மணிக்குச் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடவுள்ளது.

அதற்கு முன்னர் சபாநாயகர் தலைமையில் கட்சித் தலைவர்கள் கூட்டமும் இடம்பெறவுள்ளது. இது முக்கியத்துவமிக்க சந்திப்பாகக் கருதப்படுகின்றது.

வழமையாக நாடாளுமன்றம் ஆரம்பமாவதற்கு முதல் நாளே கட்சித் தலைவர்கள் கூட்டம் கூட்டப்பட்டு விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்து இறுதி முடிவெடுக்கப்படும். நேற்று பௌர்ணமி தினம் என்பதால் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறவில்லை. அதுவே இன்று காலையில் நடைபெறவுள்ளது.

மகிந்த அணியின் 32 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் முன்னாள் நிதி அமைச்சரும் தற்போதைய அயலுறவு அமைச்சருமான ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் கடந்த வியாழனன்று நாடாளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்டது. இதை நாடாளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் உட்படுத்தல்- எப்போது விவாதத்துக்கு எடுப்பது என்பது பற்றி இன்றைய கூட்டத்தில் பேசப்படவுள்ளன.


அதேவேளை, ஆளுங்கட்சி, மகிந்த அணியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டங்களி லும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்துக் கருத்தாடல்கள் இடம்பெறவுள்ளன.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இன்று பிற்பகல் நாடாளுமன்றம் கூடவுள்ளது. அதன்போது மகிந்த அணி உறுப்பினர்கள் இது பற்றிக் கேள்வி எழுப்புவதற்குரிய வாய்ப்பு பிரகாசமாகவே தென்படுகின்றது.

இதற்கிடையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதற்கு முன்னர் அரச தலைவர் ஆணைக்குழுவின் விசாரணைகள் நிறைவடையும்வரை அமைச்சர் ரவி கருணாநாயக்க தனது பதவியைத் தற்காலிகமாகத் துறப்பார் என ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

தேசிய இறைவரிச் சட்டவரைவு தொடர்பில் அரசு தனது நிலைப்பாட்டை இன்று அறிவிக்கவுள்ளது. அத்துடன், உத்தேச 20 ஆவது சட்டவரைவு பற்றியும் இன்று எதிரணி கேள்விகளை எழுப்பவுள்ளது. (கு)

## மரண அறிவித்தல்



### வெற்றிவேலு செல்லையா குணரத்தினம்

| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 26.09.1936 | 31.07.2017 |

கோப்பாய் தெற்கு, இருபாலை, கும்பப்பிள்ளையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி (பேர்லின்) ஐ வசிப்பிடமாகவும் கொண்டிருந்த செல்லையா குணரத்தினம் 31.07.2017 திங்கட்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா இராசம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற கனகசபை இராசமணி தம்பதிகளின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் இரத்தினேஸ்வரி, இராஜேஸ்வரி, குணரஞ்சன், ஞானரஞ்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற இராஜரட்ணம், யோகரட்ணம், செல்வரட்ணம் காலஞ்சென்ற ஜெயரட்ணம், பாலசுந்தரம் மற்றும் சண்முகரட்ணம், ஜெயபாலரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜோசப் தயாநிதி, யோகேந்திரராஜா, ரஜனி, சுதர்ஷினி ஆகியோரின் மாமனாரும் நாகேஸ்வரன், பரமேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் தஸ்மினி, யாழினி, உசாந்தினி, தயாளன், தாசன், அரவிந்தன், அபிராமி, அகல்யா, ரஞ்சித், ரமேஷ் கவின், காவ்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஹாசினியின் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் Ruhleben Krematorium Germany இல் நாளை (09.08.2017) புதன்கிழமை மு.ப 11 மணியிலிருந்து 2.30 மணி வரை இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டு பின்னர் நல்லடக்கம் செய்யப்படும். இதே தினத்தன்று இருபாலை இரஞ்சன் இல்லத்திலும் துயர் பகிர்வு நிகழ்வு நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

தொடர்பு: 0094 - 766221193 (இருபாலை)
0049 - 307818137 (ஜேர்மனி)
0094 - 773529941 (கொழும்பு)
0094 - 771967368 (கொழும்பு)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 10 . 03 . 1942 |  | 01 . 08 . 2017 |

### சபாரத்தினம் பாலசுந்தரம் (பொன்னார்-ஆசாரி)

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் பாலசுந்தரம் (பொன்னார்) 01.08.2017 செவ்வாய்க்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - இலட்சுமி தம்பதியரின் மூத்த மருமகனும், கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், மதனராஜ் (பிரான்ஸ்), மதனியா (லண்டன்) மர்ஷிகா, மதனரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், துவாரகா (பிரான்ஸ்), சிவராமலிங்கம் (லண்டன்), முருகானந் தன் (ஆசிரியர் தொழில்நுட்பக் கல்லூரி வட்டுக் கோட்டை) ஆகியோரின் பாசமிகு மாமனும், அகிஷன், அகிலாஷ், அசிந், காருண்யன், காருண்யா, கஜானிகா, கஜானன் ஆகியோரின் அன்புப் பேரனும், இராசதுரை, சண்முகலிங்கம், மனோன்மணி, அன்னலட்சுமி, அருந்தவமணி, சிவகுருநாதன், குணபாலசிங்கம், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் . நீலாம்பாள், சீதாலட்சுமி, காலஞ்சென்ற அருந்தவநாதன் மற்றும் கயிலைநாதன், துரைசிங்கம் (முன்னாள் தவிசாளர், வலி.கிழக்கு பிரதேசசபை), இந்துமதி, அன்னலட்சுமி, தயாநிதி, காலஞ்சென்ற கனகராசா மற்றும் மகேஸ்வரி, நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற அருள்தாசன், கெங்கநாதன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.08.2017) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குறுக்கு வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

077 617 6582



# தேர்தல்களை இஷ்டத்துக்கு தள்ளிப்போட முடியாது

## மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்படுவதை எதிர்க்கிறார் மகிந்த தேசப்பிரிய

கொழும்பு, ஓக. 8

மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திவைப்பதற்காக இரண்டு சட்ட வரைவுகளைத் திருத்துவதற்கு அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்குத் தேர்தல் ஆணையகத் தலைவர் மகிந்த தேசப்பிரிய கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

தனது இஷ்டத்துக்குத் தேர்தல்களைத் தள்ளிப்போடுவதன் மூலம் அரசு ஜனநாயகத்தை மட்டுமன்றிப் பொதுமக்களின் அடிப்படை உரிமைகளையும் மீறி வருகிறது எனவும் அவர் சாடியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றம் எடுக்கும் தீர்மானத்துக்குக் கட்டுப்படவேண்டிய பொறுப்பு தேர்தல் ஆணையகத்துக்கு உள்ளது. எனினும், ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு விரோதமாகத் தேர்தல்களை ஒத்திவைப்பதற்காக ஓரிரு சட்டவரைவுகளைத் திருத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது. உரிய காலத்தில் தேர்தல்களை நடத்தி மக்களின் ஆணைக்கு மதிப்பளிக்கவேண்டிய தலையாய பொறுப்பு நாடாளுமன்றத்துக்கு உள்ளது. தனது இஷ்டத்துக்குத் தேர்தல்களைத் தள்ளிப்போடுவதன் மூலம் அரசு ஜனநாயகத்தை மட்டுமன்றிப் பொதுமக்களின் அடிப்படை உரிமைகளையும் மீறி வருகிறது.

தேர்தலொன்றின் மூலம் தங்களுக்குத் தேவையான அரசொன்றைத் தெரிவு செய்யும் உரிமை மக்களுக்கு உள்ளது. உள்ளூராட்சிச் சபைத் தேர்தலைப் பல்வேறு காரணங்களைக் காட்டி நீண்ட காலமாக இழுத்தடித்துவரும் அரசு இப்போது மாகாண சபைத் தேர்தலிலும் கை வைக்கப்பார்க்கின்றது. இது பொதுமக்களின் உரிமைகளை மட்டுமன்றித் தேர்தல்களில் போட்டியிடும் அரசியல் கட்சிகளினது உரிமைகளையும் பாதிக்கின்றது-என்றார். (த)

# சைட்டத்துக்கு எதிராக போராட ஆதரவு தேடும் அரச மருத்துவர் சங்கம்

கொழும்பு, ஓக 8

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி (சைட்டம்) விவகாரம் தொடர்பில் தங்களது அடுத்த கட்ட நடவடிக்கை பற்றித் தீர்மானிப்பதற்காக இலங்கை அரச மருத்துவர் அதிகாரிகள் சங்கம் ஏனைய தொழிற்சங்கங்களுடன் ஆலோசனை நடத்தி வருகின்றது.

சைட்டம் விவகாரம் தொடர்பில் அரச தலைவரும் தலைமை அமைச்சரும் எவ்வித அக்கறையும் காட்டாமல் உள்ளனர். இதனால் தாங்கள் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றித் தீர்மானிக்க வேண்டியிருப்பதால் தங்களது போராட்டத்துக்கு ஏனைய தொழிற்சங்கங்களின் ஆதரவைத் திரட்டிவருவதாக இலங்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் மருத்துவர் நவீன் டீ சொய்சா தெரிவித்துள்ளார்.

அரச தலைவரும் தலைமை அமைச்சரும் பல தடவைகள் தங்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளனர் எனவும், அதனால் விரக்தியடைந்த நிலையிலேயே தாங்கள் மற்றுமொரு போராட்டத்தில் இறங்கவேண்டியுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார். (த)

**ரவி மீதான தீர்மானம்;**

# ஐ.தே.கவும் முழு ஆதரவு

கொழும்பு, ஓக 8

அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக மகிந்த அணி கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவு வழங்குவதற்குச் சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியும் அதே நிலைப்பாட்டில்தான் உள்ளது என்றும் பிரதி அமைச்சர் நிமல் லான்ஸா தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட பின் ஊடகங்களுக்குக் கருத்துக் கூறியபோதே அவர் இவ்வாறு கூறினார்.



அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்த ஆட்சிக்கு ஏற்பட்ட மிகப் பெரிய கரும்புள்ளிதான் மத்திய வங்கி பிணை முறி விவகாரம். ஆட்சி அமைந்தது முதல் இப்போதுவரை அந்தக் கரும்புள்ளி பெரிதாகிக்கொண்டே செல்கின்றது. இன்று அந்த மோசடியுடன் தொடர்புபட்ட ஒருவர் சிக்கியுள்ளார். அவர்தான் அமைச்சர் ரவி கருணாநாயக்க.

இந்த மோசடியுடன் இவர் மட்டும் தொடர்புபட்டிருக்கவில்லை. இன்னும் பலர் உள்ளனர். இவர்தான் முதலாவதாகச் சிக்கி இருக்கின்றார். ஏனையவர்கள் விரைவில் சிக்குவார்கள். இவர்கள் அனைவருக்கும் எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாம் அரச தலைவரிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

மக்களுக்குச் சேவை செய்வதற்காக அவர்களிடம் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்கு வந்தவர்கள் அந்த மக்களின் பணத்தைக் கொள்ளையடிக்கின்றனர். கிராமங்களுக்குச் செல்ல முடியவில்லை. மக்கள் எமக்கு ஏசுகிறார்கள். அவர்களின் முகங்களைப் பார்ப்பதற்கு வெட்கமாக உள்ளது.

எமது மானத்தைக்காப்பாற்றவேண்டுமென்றால் ரவிக்கு எதிராக யார் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தாலும் அதற்கு ஆதரவு வழங்கவேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களே என்னிடம் கூறினார்கள். அவர்கள் ரவிக்கு எதிராக வாக்களிக்கத் தயாராக உள்ளனர். சுதந்திரக் கட்சியும் ரவிக்கு எதிராகவே வாக்களிக்கும்.

இவ்வாறான காரணங்களால்தான் நாம் அரசை விட்டு விலகுவதற்குத் தீர்மானித்தோம். இரண்டு வருடங்களாக நாம் இந்த அரசின்மீது அதிருப்தியாகவே உள்ளோம். அரசின் செயற்பாடுகள் மீது மக்கள் கடும் கோபத்தில் உள்ளனர். ஆதலால் இந்த அரசுடன் இருப்பதைவிட விலகுவதே மேல்-என்றார். (த-3)

# மைத்திரிபால தலைமையில் அமைச்சரவை கூட்டம் இன்று

கொழும்பு, ஓக 8

இந்த வார அமைச்சரவைக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் அரச தலைவர் செயலகத்தில் நடைபெறும்.

அரச தலைவர் மைத்திரிபால கண்டி எசல பெரஹர நிறைவு வைபவத்தில் கலந்துகொள்வதால் அமைச்சரவைக் கூட்டத்தை இன்று மாலை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அரச தலைவர் ஊடகப் பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# மாகாணத் தேர்தல் ஒத்திவைப்புக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வோம்

## தேர்தல் கண்காணிப்பகங்கள் அரசுக்குக் கடும் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 8

மாகாண சபைத் தேர்தல்களை மீண்டும் ஒத்திவைப்பதற்காக அரசு 20ஆவது அரசமைப்புச்சட்டவரைவை மாற்ற முயற்சித்தால் அதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக முன்னணித் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளும், சிவில் அமைப்புகளும் எச்சரிக்கை விடுத்துள்ளன.

சகல மாகாண சபைத் தேர்தல்களையும் ஒரே தினத்தில் நடத்துவதற்கு எவராலும் எதிர்ப்புத் தெரிவிக்க முடியாது. எனினும், அந்தக் காரணத்தை முன்வைத்துப் பதவிக்காலம் முடிவடையும் மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திவைக்கமுடியாது எனவும், 20ஆவது அரசமைப்புச் சட்டவரைவில் மாற்றம் செய்ய முயல்வதன் மூலம் அரசு மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைப்பது சனநாயகத்துக்கு விரோதமான செயல் எனவும், அரசு அத்தகைய முயற்சியொன்றை மேற்கொண்டால் தாங்கள் சட்ட நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டி வரும் எனவும் அந்த அமைப்புகள் எச்சரித்துள்ளன. (த)

**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**

கடந்த 10.07.2017
திங்கட்கிழமை இறைவனடி
சேர்ந்த எமது
குடும்பத்தலைவி
அமரர்
**இரத்தினபூபதி (கிளி)**
**சற்குணநாதன்**



அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 08.08.2017 செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 09.08.2017 புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்திலும் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

மீசாலை மேற்கு,
மீசாலை.

குடும்பத்தினர்.
077 666 0199

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# துவாரகேஸ்வரன் கொழும்பில் கைது

## 11ஆம் திகதி வரை விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஒக. 8
முன்னாள் அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரனின் சகோதரர், துவாரகேஸ்வரன் நாரஹேன்பிட்டிப் பொலிஸாரால் கைது செய்யபட்டுள்ளார். எதிர்வரும் 11ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைப்பதற்கு கொழும்பு மூன்றாம் இலக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இவ்வாறு பொலிஸ் பேச்சாளர் அலுவலகத்தினரால் தெரிவிக்கப்பட்டது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு உத்தியோகத்தர்களைக் கடமை செய்யவிடாது அடாவடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் அவருக்கு எதிராகப் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. நீதிமன்றில் அவர் முன்னிலையாகவில்லை. இதனையடுத்துக் கடந்த மாதம் 26ஆம் திகதி மன்றினால் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே கடந்த 4ஆம் திகதி நாரஹேன்பிட்டிப் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அன்றைய தினம் கொழும்பு மூன்றாம் இலக்க நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 11ஆம் திகதி வரையில் விளக்கமறியில் வைக்க உத்தரவிட்டார். இதனடிப்படையில் தி.துவாரகேஸ்வரன் மறியல்சாலையில் அடைக்கப்பட்டுள்ளார்.

**பின்னணி**

தேசியப் போக்குவரத்து ஆணைக் குழுவுக்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தைச் செலுத்துவதில் முரண்பட்ட வர்த்தகர் துவாரகேஸ்வரன், அங்கு பணியாற்றும் அலுவலர்களுடன் அடாவடித்தனம் புரிந்துள்ளார். அது தொடர்பில் தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

முறைப்பாட்டின் அடிப்படையில் புதுக்கடை நீதிவான் மன்றில் துவாரகேஸ்வரனுக்கு எதிராக வழக்குத் தாக்குதல் செய்யப்பட்டது.



தேசியப் போக்குவரத்து ஆணைக் குழுவின் அறிவுறுத்தலை மீறி பேருந்தை நிறுத்தி வைத்த குற்றச் சாட்டில் துவாரகேஸ்வரனின் போக்குவரத்துச் சேவையில் பணியாற்றும் சாரதி கைது செய்யப்பட்டார். அவர் நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

(கு-5)

# பாக். குடிமகன் ஹெரோயினுடன் கைதாகினார்

கொழும்பு, ஒக 8
ஹெரோய்ன் போதைப் பொருளுடன் பாகிஸ்தான் குடிமகன் ஒருவர் நேற்று முன் தினம் - ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.
37 இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோய்ன் போதைப் பொருளுடன் நேற்று முன் தினம் இரவு பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் சுங்கப்பிரிவினரால் இவர் கைது செய்யப்பட்டு வானூர்தி நிலையப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
பாங்கொக்கில் இருந்து இலங்கைக்கு வந்த வானூர்தியில் பயணித்த பாகிஸ்தான் குடிமகன் மிக நுட்பமான முறையில் போதைப் பொருளை மறைத்துக் கடத்தியுள்ளார்.
இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (கு-ய)

# ஐ.தே.கவுடன் ஆட்சியமைக்க தயார் நிலையில் சு.க. எம்.பிக்கள்

## அமைச்சர் தயாசிறி கூறுகிறார்



கொழும்பு, ஒக 8
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசை அமைக்கவேண்டும் என்று கூறும் அக்கட்சியின் 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஆட்சியமைக்கத் தயாராகவுள்ளனர் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.
2015ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததால் ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் தேசிய அரசை அமைத்திருந்தன. குறித்த உடன்படிக்கை எதிர்வரும் டிசெம்பர் மாதத்துடன் முடிவடையவுள்ள நிலையில், தேசிய அரசில் இருந்து சுதந்திரக் கட்சி வெளியேற வேண்டும் என்ற கோரிக்கை கட்சியில் தற்போதே வலுப்பெற்றுள்ளது.
முன்னாள் அரச தலைவரின் ஆதரவாளர்களாக உள்ள அமைச்சர்களும், பிரதி அமைச்சர்களுமே இவ்வாறு கூட்டு அரசில் இருந்து சுதந்திரக் கட்சி விலகவேண்டும் என்று அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.
இந்த விவகாரம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் தயாசிறி, "தேசிய அரசில் இருக்கும் சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் எனப் 11 பேர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஆட்சியமைக்கத் தயாராகவுள்ளனர். இவர்கள்தான் சுதந்திரக் கட்சி தனித்து ஆட்சியமைக்க வேண்டும் என்று கூறிவருகின்றனர்" - என்றார். (கு)

# தூக்குத் தண்டனை ஆயுள் சிறையானது

## தப்பினர் 2 இலங்கையர்

கொழும்பு, ஒக 8
குவைத்தில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட இரண்டு இலங்கையர்களைக் காப்பாற்ற இலங்கைத் தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.
சக இலங்கையர் ஒருவரைப் படுகொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட இலங்கையர் ஒருவரும் இதில் உள்ளடங்குகின்றார்.
குவைத் வாழ் இலங்கையர்களின் நிதி உதவியுடன் இரத்த நட்டஈட்டை வழங்கி, இந்த இலங்கையர்கள் சாவுத் தண்டனையிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர்.
சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட ஏனைய இலங்கையர் 43 வயதான பெண் ஆவார். வீட்டுப் பணிப் பெண்ணாக குவைத் சென்ற குறித்த இலங்கைப் பெண் போதைப் பொருள் விற்பனை செய்தார் எனக் குற்றம் சுமத்தி சாவுத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.
குவைத்துக்கான இலங்கை தூதுவர் காண்டீபன் பாலசுப்ரமணியம் உள்ளிட்ட தூதரக அதிகாரிகளின் முயற்சியினால் இவ்வாறு இரண்டு இலங்கையர்களும் தண்டனையிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர்.
சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட வீட்டுப் பணிப் பெண்ணின் சார்பிலான மேன்முறையீட்டு மனுவுக்காக நீதிமன்றில் ஆதாரமாக அந்த நாட்டுச் சட்டத்தரணி அல் சமாலி பணம் எதனையும் அறவிடவில்லை. சாவுத் தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்ட இருவருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (கு)

# அமைச்சர் ரவியைப் போன்று இளைஞர்கள் இருக்கக்கூடாது

## முன்னள் அமைச்சர் அதாவுல்லா கூறுகிறார்

அம்பாறை, ஒக.
இன்றைய இளைஞர்கள் ரவி கருணாநாயக்கவைப் போன்று ஒன்றும் தெரியாது என்று கூறுபவர்களாக இருக்க முடியாது. யாரைக் கள்ளன் என்று யார் யார் எல்லாம் சொன்னார்களோ அவர்கள்தான் முழுக் கள்ளர்கள்.
இவ்வாறு தேசிய காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவித்தார்.
அம்பாறை. மருதமுனையில் நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இளைஞர்கள் என்போர் ஒரு சமுதாயத்தினுடைய முதுகெலும்புகள். இளைஞர்களை வைத்தே அந்தக்காலத்தினுடைய நாகரிகம், சமுதாயத்தினுடைய சிந்தனை, போக்கு, வீரம் எல்லாவற்றையும் தீர்மானிக்க முடியும்.
கடந்த அரசின் என்னென்ன பிழைகளையெல்லாம் சொல்லி முஸ்லிம் மக்களை



ஏமாற்றி வாக்குகளைப் பெற்று ஆட்சியைக் கைபற்றினார்களோ அந்த அநியாயங்களை விட 200 மடங்கு அதிகமாக விடயங்கள் இன்றைய அரசில் நடைபெற்று வருகின்றன.
முஸ்லிம்கள் எங்கும் உரித்தொடு வாழமுடியாத நிலைக்குள் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கின்றோம். விலபத்து என்றாலும் எங்களுக்குப் பிரச்சினை, வடக்கு மாகாணத்தில் முல்லைத்தீவிலே 30 ஆண்டுகளுக்கு முன்பு வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் அவர்களது இடங்களுக்குச் செல்முடியாதவாறு தமிழ்ப் பேரினவாதிகள் எதிராக குரல் கொடுக்கின்றனர்.
வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழ்கின்ற முஸ்லிம்களைச் சிங்கள மக்கள் விரட்டியடிக்க முற்படுகிறார்கள். பள்ளிகளுக்குக் கல்வீசுகிறார்கள். இவைகளை அடக்கப்போகின்றோம் என்று வந்தவர்கள் இன்று அதைவிடவும் அதிகமாக செய்துகொண்டு வருவதை நாங்கள் அவதானிக்கின்றோம்.
எமது இளைஞர்கள் உரிமை இழந்தவர்களாக இருக்கக்கூடாது.
இன்று இந்த நாட்டில் என்ன நடக்கின்றது? பொதுபலசேனா என்ற இயக்கம் ஆர்.எஸ்.எஸ். என்ற இயக்கம் என்பன இரண்டுமே ஒன்று சேர்ந்து ஒரே வேலைத் திட்டத்தின் கீழ் எங்களுக்கெதிராக பணியாற்றிக்கொண்டிருக்கின்றன. இந்தக் காலத்தில் நாங்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.
தற்போது முஸ்லிம் தலைவர்கள் என்போர் தங்களது வாய்களும் கைகளும் கட்டப்பட்ட நிலையில் இருக்கிறார்கள். எனவே இளைஞர்கள் விழிபபுடையவர்களாக இருக்க வேண்டும் - என்றார்.
(கு-ய)



# சீனப் படைகள் ஒருபோதுமே இலங்கையில் நிறுத்தப்படா

## உறுதிபடத் தெரிவித்தார் அந்த நாட்டுத் தூதுவர்

கொழும்பு, ஓக. 8
இலங்கையைச் சீனா தனது மூலோபாய மற்றும் பாதுகாப்புத் தேவைகளுக்காகப் பயன்படுத்திக் கொள்ளாது. நாம் எந்தவொரு கடற்படை வீரர்களையோ, ஏனைய படையினரையோ நிறுத்தி வைத்திருக்கவில்லை. இலங்கையில் நாம் புலனாய்வாளர்களையும் கொண்டிருக்கவில்லை.
இவ்வாறு இலங்கைக்கான சீனத் தூதுவர் யி ஷியான்லி யாங் தெரிவித்தார்.
கொழும்புத் துறைமுகத்தை நேற்று முன் தினம் வந்தடைந்த சீனக் கடற்படையின் மருத்துவமனைக் கப்பலான ஹெபிங்பாங்சோவை வரவேற்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே இலங்கை மூலோபாய அமைவிட வாய்ப்பை அனுபவித்து வருகிறது. அதற்குக் காரணம், பட்டுப் பாதையின் நடுவில் இலங்கைத் தீவு இருப்பதேயாகும்.
உங்களின் முக்கியத்துவத்தை நீங்கள் எவ்வாறு பூயன்படுத்திக் கொள்ளப் போகிறீர்கள்? உங்களிடம் உள்ள இந்த வாய்ப்பை எப்படி பயன்படுத்திக் கொள்ளப்போகிறீர்கள்? என்ற கேள்விகள் இருக்கின்றன.
இதற்கான முதன்மைப் பதில், அமைதி மற்றும் அபிவிருத்தியாகவே இருக்கிறது. இலங்கையில் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு முயற்சிகள் ஒவ்வொன்றுக்கும் சீனா ஆதரவாக இருக்கும்.
இது இலங்கை மக்களின் தேவை. இந்த வாய்ப்பை, எமது மூலோபாய மற்றும் பாதுகாப்புத் தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ள மாட்டோம்.
இலங்கை அபிவிருத்திக்கு நாங்கள் ஆதரவு அளிக்கிறோம். கடந்த காலத்தில் இலங்கையில் சீனா என்ன செய்திருக்கிறது என்று நீங்களே, ஆய்வு செய்ய முடியும்.
நாங்கள் மருத்துவமனைகள், வானூர்தி நிலையம், துறைமுகம் போன்ற உட்கட்டமைப்புகளைக் கட்டியுள்ளோம். சீனாவிடம் இருந்து மிகப் பெரிய கொடைகளையும் நிதி உதவிகளையும் பெற்ற முதல் நாடு இலங்கை தான்.
இலங்கையில் நாம் எந்தவொரு கடற்படை வீரர்களையோ, ஏனைய படையினரையோ நிறுத்தி வைத்திருக்கவில்லை. இலங்கையில் நாம் புலனாய்வாளர்களையும் கொண்டிருக்கவில்லை. இங்குள்ள சீன இராஜதந்திரிகளைத் தவிர, வேறு அத்தகையவர்கள் யாரையும் நாம் கொண்டிருக்கவில்லை. சீனாவின் பிரதிநிதியாக நானே இருக்கிறேன்.
ஆனால், பல தலைமை நிறைவேற்று அதிகாரிகள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள், பேராசிரியர்களை நாம் இங்கு வைத்திருக்கிறோம். அவர்கள் இங்கு என்ன செய்கிறார்கள்? இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துகிறார்கள். இந்த நாட்டின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்காகப் பணியாற்றுகின்றனர்.
நாங்கள் எதைக் கூறினோமோ அந்த வாக்குறுதிகளை நாம் காப்பாற்றுகிறோம். எனவே நாங்கள் இலங்கையின் உண்மையான நண்பர்கள் என்பதை நம்புங்கள் - என்றார்.
இதேவேளை, நான்கு நாள்கள் நல்லெண்ணப் பயணமாக, சீனக் கடற்படையின் மருத்துவமனைக் கப்பலான, ஹெபிங்பாங்சோ நேற்று முன்தினம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. 178 மீற்றர் நீளமும், 24 மீற்றர் அகலமும் கொண்ட இந்தக் கப்பலில், 381 மாலுமிகள் உள்ளனர்.
இந்தக் கப்பலில் ஒரு நவீன மருத்துவமனையில் உள்ள அறுவைச் சிகிச்சைக் கூடங்கள், அவசர சிகிச்சைப் பிரிவுகள், ஆலோசனை மருத்துவச் சேவை, வதிவிட. மருத்துவ அலகுகள். மற்றும் கணினி மயப்படுத்தப்பட்ட சோதனைத் தொகுதிகள், 300 நோயாளிகளுக்கான படுக்கை வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் உள்ளன.
எந்த நேரத்திலும் நோயாளிகளை ஏற்றி வரவும், கொண்டு செல்லவும் உலங்கு வானூர்தியை இறக்கும் வசதிகளும் இந்தக் கப்பலில் உள்ளன.
நான்கு நாட்கள் கொழும்பில் தரித்திருக்கும் போது, இலங்கைக் கடற்படையினருடன் இணைந்து சில நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ள சீனக்கடற்படையினர், இன்றுசெவ்வாய்க்கிழமை இலச்வ மருத்துவ முகாம் ஒன்றையும் நடத்தவுள்ளனர். நாளை இந்தக் கப்பல் கொழும்பில் இருந்து புறப்பட்டுச் செல்லும். (த)

## நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு ஆதரவு நிச்சயம்

### கூறுகிறார் மகிந்த



கொழும்பு, ஓக 8
அமைச்சர்ரவிகருணாநாயக்கவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிப்பேன் என்று முன்னாள் அரச தலை வர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
மகிந்த அணியைச் சேர்ந்த 32 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்ரவிகருணாநாயக்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைச் சபாநாயகரிடம் கையளித்துள்ளனர்.
மகிந்த அணியில் 52 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளபோதிலும், 32 பேர் மாத்திரமே கையெழுத்திட்டுள்ளனர். மகிந்த ராஜபக்ச உள்ளிட்டவர்களின் கையெழுத்து இதில் இல்லை.
ஏற்கனவே சில முக்கியமான வாக்கெடுப்புகளில் மகிந்த ராஜபக்ச பங்கேற்காத நிலையில், இந்த வாக்கெடுப்பிலும் அவர் பங்கேற்கமாட்டார் என்று கூறப்பட்டது.
இந்தநிலையிலேயே. நாடாளுமன்றத்தில் தாம் நிச்சயமாக ரவி கருணா நாயக்கவுக்கு எதிராக வாக்களிப்பேன் என்று மகிந்த ராஜபக்ச கூறியுள்ளார். (த)

# கல்வித்துறைக்கும் சுகாதாரத்துக்கும் அரசு முன்னுரிமை

## கிழக்கு அமைச்சர் பெருமிதம்

அம்பாறை, ஓக. 8
அரசு தற்போது கல்வித் துறைக்கும் சுகாதரத்துறைக்குமே அதிக முக்கியத்துவம் கொடுத்துச் செயற்பட்டு வருகின்றது. அதனையிட்டுத் நாம் மகிழ்ச்சியடைகின்றோம் எனக் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஸீர் தெரிவித்தார். அக்கரைபற்று ரெயின்போவ் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப்போட்டி நேற்றுமுன்தினம் மாலை அக்கரைப்பற்றில் இடம்பெற்றது. இதில் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையில் நல்லாட்சி அரசு சுகாதாரத்துறையையும், கல்வித்துறையையும் அதிகமாகக் கவனத்திற்கொண்டு வருகின்றது. அதற்காகப் பல மில்லியன் கணக்கான நிதிகளை வழங்கி வருகின்றது. கல்வியை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்ல பல திட்டங்களை வகுத்து வருகின்றது. கிழக்கு மாகாணக் கல்வியமைச்சும் அவ்வாறே கல்விக்கு முன்னுரிமை வழங்க வருகின்றது.
அவ்வாறு கல்விக்கு நாம் முன்னுரிமை வழங்கி அதற்கான உதவிகளுக்காக பேசியும் வருகின்றோம். அரசதலைவர் தற்போது பல திட்டங்களை கல்வியமைச்சு ஊடாக மேற்கொண்டு செயற்படுவதை நாம் அவதானித்து வருகின்றோம். பாலர் பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்களை விளையாட்டுத்துறையிலும் ஈடுபட வைப்பதன் மூலம் அவர்களின் மூளை வளர்ச்சியடையும்.
பாலர் பாடசாலையே ஒரு மாணவனின் அஸ்திவரம். ஆகவே பாலர் பாடசாலை ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் - என்றார். (த-ய)

# ரவியுடன் ரணில் இரகசியப் பேச்சு

கொழும்பு, ஓக 8
அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்கவுடன், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சிறப்புப் பேச்சுக்களை நடத்தியுள்ளார் என்று அரச வட்டாரங்கள் கூறுகின்றன.
கடந்த சனிக்கிழமை மாலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக கூறப்படுகின்றது.
மத்திய வங்கிப் பிணை முறி விற்பனையில் இடம்பெற்ற முறைகேடு தொடர்பான விசாரணை வளையத்துக்குள் அமைச்சர் ரவி கருணாநாயக்க சிக்கியுள்ளார்.
இதையடுத்து, அவருக்கு எதிராக, நாடாளுமன்றத்தில் மகிந்த அணி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளது.
அத்துடன், அயலுறவு அமைச்சர் பதவியில் இருந்து விலகுமாறும் ரவி கருணாநாயக்கவுக்கு அழுத்தம் வழங்கப்படுகிறது.
ஹற்றனில் நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில் உரையாற்றிய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, "ஐக்கிய தேசியக் கட்சியில் திருடர்கள் இல்லை. திருடர்களை எமது அரசு பாதுகாக்காது. எமது அரசில் திருடர்கள் இருந்தால் அவர்கள் நீக்கப்படுவார்கள். யாரையும் ஊழல் செய்ய அனுமதிக்கமாட்டோம்" என்று கூறியிருந்தார்.
அரசில் உள்ள சில அமைச்சர்களும் கூட, ரவி கருணாநாயக்கவைப் பதவி விலக வலியுறுத்தியுள்ளனர்.
இந்த நிலையிலேயே ரணில் விக்கிரமசிங்க, கடந்த சனிக்கிழமை மாலை, ரவி கருணாநாயக்கவைச் சந்தித்துப் பேசியுள்ளார்.
அத்துடன், இந்த விவகாரம் தொடர்பாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வுடனும், ரணில் விக்கிரமசிங்க பேச்சு நடத்தவுள்ளார். (த)

# மகிந்தவின் குடியுரிமையை பறிக்க சதியாம்!

கொழும்பு, ஓக. 8
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் குடியுரிமையைப் பறிப்பதற்குச் சூழ்ச்சித் திட்டம் தீட்டப்படுவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாலிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மகிந்தவைக் கொலை செய்ய, சிறையில் அடைக்க அல்லது குடியுரிமையைப் பறிக்கச் சூழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. விக்ரம ராஜசிங்க மன்னன் இறக்கும் வரை சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். மகிந்தவுக்கும் அவ்வாறு நிகழுமா?
ஆப்கானிஸ்தான், துருக்கி, சிரியா போன்ற நாடுகளுக்குச் செய்ததை அமெரிக்கா இலங்கையிலும் செய்கின்றது. இதன் ஓர் கட்டமாகவே மகிந்த ஆட்சியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார்
அமெரிக்கா திருகோணமலையைக் கைப்பற்றிக் கொள்ளவே முயற்சிக்கின்றது. இந்த அரசு சிறுபான்மை மக்களுக்கு நல்ல சலுகை வழங்குகின்றது.
கூட்டாட்சி முன்னெடுக்கப்பட்டால் நாட்டில் இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடக் கூடும் - என்றார். (த)



## ஜெயலலிதா மறைவு தொடர்பில் இன்னும் விளக்கமளிக்கவில்லை

### இ.பி.எஸ். மீது ஓ.பி.எஸ். காட்டம்

சென்னை, ஒக. 8

"ஜெயலலிதா மறைவு தொடர்பில் முழுமையான விளக்கம் தரப்பட வேண்டும். விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று கேட்டிருந்தோம். ஆனால் இது தொடர்பில் எந்தக் கருத்தும் எடப்பாடி பழனிச்சாமியின் தரப்பில் இருந்து முன்வைக்கப்படவில்லை" இவ்வாறு தெரிவித்தார் தமிழக முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம்.

ஜெயலலிதா மறைவின் பின்னர் அ.தி.மு.கழகம் மூன்றாக உடைந்துள்ளது. தினகரன், தமிழகத்தின் தற்போதைய முதல்வர் எடப்பாடி, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் ஒவ்வொரு தரப்புக்கும் தலைமை வகிக்கின்றனர். தினகரன், சசிகலாவை முழுமையாக விலக்கி வைத்துவிட்டு இணைந்து ஆட்சியை நடத்துவது என்பது தொடர்பில் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் எடப்பாடி பழனிச்சாமி தரப்புக்கிடையே பேச்சு நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் பின்னர் பேச்சு நடைபெறவில்லை. கடந்த வாரம் பொது நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, இரு குழுக்களும் இணைந்து செயற்படும் என்று தெரிவித்தார். இந்த நிலையில் எடப்பாடியின் கருத்துக்கு முரணான தகவல்களை வெளிப்படுத்தினார் பன்னீர்செல்வம்.

> “ இணைப்புத் தொடர்பில் நாம் இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை. அவ்வாறு எடப்பாடியின் தரப்புடன் இணையக்கூடிய வகையில் அவர்கள் செயற்படவில்லை.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் பன்னீர்செல்வம் உரையாற்றுகையில், "இணைப்புத் தொடர்பில் நாம் இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை. அவ்வாறு எடப்பாடியின் தரப்புடன் இணையக்கூடிய வகையில் அவர்கள் செயற்படவில்லை. முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மறைவு தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினோம். இதற்கு இன்னும் எந்தப் பதிலும் வரவில்லை. எடப்பாடி அரசு தி.மு.கவுடன் கூட்டு வைத்துள்ளதோ என்ற சந்தேகம் எமக்கு ஏற்படுகிறது" என்று அவர் மேலும்குறிப்பிட்டார். (ம)

# ஆப்கானில் தாக்குதல் 50 அப்பாவிகள் சாவு

## தலிபான் அமைப்பு வெறியாட்டம்

காபுல், ஒக. 8

ஆப்கானிஸ்தானின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள கிராமத்தில் தலிபான் ஆயுததாரிகள் நேற்றுமுன்தினம் நடத்திய பல்வேறு தாக்குதல்களில் சுமார் 50 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள சரிபுல் மாகாணத்திலேயே இந்த அசம்பாவிதம் இடம்பெற்றது. தற்கொலைத் தாக்குதல் நடத்தியும், துப்பாக்கிச் சூடு நடத்தியும், மக்களை உயிருடன் கொழுத்தியும் தலிபான்கள் வெறியாட்டம் நடத்தியுள்ளனர் என்று ஆப்கானிஸ்தான் ஊடகம் செய்தி வெளியிட்டது.

மாகாணத்தின் ஆளுநரான சபிநுல்லா அமானி இந்தத் தாக்குதல் சம்பவத்தை உறுதி செய்ததுடன் தலிபான், மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) ஆயுததாரிகளைக் கொண்ட குழுவொன்றே இந்தத் தாக்குதலை நடத்தியது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் தலிபான் அமைப்பு இந்தச் செய்தியை மறுத்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் தாக்குதல் சம்பவங்கள் கடந்த சில காலங்களில் அதிகரித்துள்ளன. தினசரி அடிப்படையில் தாக்குதல் சம்பவங்கள் அரங்கேறி வரும் நிலையில், இந்த ஆண்டின் முதல் பாதியில் மட்டும் ஆயிரத்து 662 பேர் தாக்குதல்களில் சிக்கி உயிரிழந்துள்ளனர், 3 ஆயிரத்து 581 பேர் காயமுற்றுள்ளனர், என ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)




## ஏவுகணைச் சோதனைகளை நிறுத்துங்கள் வடகொரியாவுக்கு சீனா விடுத்த கட்டளை

பியாங்யாங், ஒக. 8

வடகொரியா தனது ஏவுகணைச் சோதனைகளை நிறுத்திக் கொள்ளவேண்டும் என்று கட்டளையிட்டுள்ளது சீனா.

உலக நாடுகளின் எதிர்ப்பையும், பன்னாட்டு விதிமுறைகளையும் மீறி வடகொரியா அவ்வப்போது ஆயுத மற்றும் அணுவாயுதச் சோதனைகளை நடத்தி வருகிறது. கடந்த மாதத்தின் இறுதிப் பகுதியில் சக்தி வாய்ந்த கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனையை நடத்தியது. இதையடுத்து அவசரமாகக் கூடிய ஐக்கிய நாடுகள் சபை, வடகொரியா மீது கூடுதல் தடைகளை விதித்தது. 2006ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடகொரியா மீது கொண்டுவரப்படும் ஏழாவது தடையுத்தரவாக இது அமைந்தது. வடகொரியா விடயத்தில் சீனா கடினப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியிருந்த நிலையில் சீனா இந்தக் கட்டளையைப் பிறப்பித்துள்ளது.



"வடகொரியா மீது பொருளாதாரத் தடைகள் விதிப்பது மட்டுமே இறுதித் தீர்வாகாது. ஆக்கப்பூர்வமான பேச்சுக்கள் நடத்துவதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். வடகொரியா தனது ஏவுகணைச் சோதனைகளைக்கைவிட்டு கொரியத் தீபகற்பத்தில் அமைதி திரும்ப ஒத்துழைக்க வேண்டும்" என்று சீனா விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)



இந்தோ...
தில் ஒ...
மலைக...
கல்வி...

## அல் ஜசீரா ஊடகத்தை தடை செய்கிறது இஸ்ரேல்

ஜெருசலேம், ஒக. 8

மக்களிடையே உணர்ச்சிகளைத் தூண்டி விடு கிறது என்று அல் ஜசீரா ஊடகத்தின் மீது இஸ்ரேல் தலைமை அமைச்சர் பெஞ்சமின் நெத்தன்யாகு குற்றஞ்சாட்டியதைத் தொடர்ந்து, அந்த நாட்டில் அல் ஜசீரா ஊடகத்தை முடக்க இஸ்ரேல் அரசு உத்தரவிட்டுள்ளது.



கிழக்கு ஜெருசலேம் நகரில் சமீபத்தில் நடந்த இஸ்ரேலியர்கள் - பலஸ்தீனர்கள் இடையிலான மோதல்களில் அல் ஜசீரா ஊடகத்தின் பங்கு அதிகம் இருந்தது. அந்த அமைப்பு இஸ்ரேலியர்களுக்கு எதிராக பலஸ்தீனர்களைத் தூண்டியது. ஹமாஸ், ஹிஸ்புல்லா ஆகிய ஆயுதக் குழுக்களின் முக்கிய கருவியாகச் செயல்படுகிறது என்று கடந்த 27ஆம் திகதி நெத்தன்யாகு குற்றம் சுமத்தினார்.

இஸ்ரேலின் அண்டை நாடுகளான சவூதி அரேபியா, எகிப்து போன்றவை அல் ஜசீராவைத் தடை செய்துள்ளன. மத தீவிரவாதத்தை அல் ஜசீரா தூண்டுகிறது என்பதாலேயே அதன் மீது தடை விதிக்கப்பட்டுள்ளது என்று இந்த விவகாரத்துடன் தொடர்புடைய அரபு நாடுகள் தெரிவித்திருந்த நிலையில் தற்போது இஸ்ரேலும் அல் ஜசீராவைத் தடை செய்துள்ளது.

அல் ஜசீரா ஊடகம் கட்டார் நாட்டுடையது. ஆயுதக்குழுக்களுக்கு கட்டார் உதவி செய்கிறது என்று தெரிவித்தே அந்த நாட்டின் அல் ஜசீரா ஊடகத்தை வளைகுடா நாடுகள் தடை செய்தன என்ற ஒரு கருத்தும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஹிரோசிமா மீது அணுகுண்டு வீசப்பட்ட 72ஆ...

டோக்கியோ, ஒக. 8

இரண்டாம் உலகப் போரின்போது 1945ஆம் ஆண்டு ஜப்பானின் ஹிரோசிமா நகரில் அணுகுண்டு வீசப்பட்ட 72ஆவது ஆண்டு நினைவுதினம் அந்த நாட்டில் நேற்று முன்தினம் உருக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

இரண்டாம் உலகப் போரின்போது, உலகின் முதல் அணுகுண்டாக கருதப்படும் 'லிட்டில் போய்' குண்டை ஜப்பானில் உள்ள ஹிரோசிமா நகரின் மீது அமெரிக்கா 1945 ஆண்டு ஒகஸ்ட் மாதம் 6ஆம் திகதியன்று வீசியது.

இரும்பைக் கூட உருகவைக்கும் 4 ஆயிரம் டிகிரி செல்சியஸ் வெப்பத்தில் குண்டு வீசப்பட்ட இடத்தின் அருகிலிருந்த அத்தனையும் நிர்மூலமாகின. சுமார், ஒரு லட்சத்து நாற்பதாயிரம் மக்கள் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டனர். இதற்கு அடுத்த அணுகுண்டு ஜப்பானின் துறைமுக நகரமான நாகசாகியில் 1945ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 9ஆம் திகதி வீசப்பட்டது. இதில் 70ஆயிரம் பேர்வரை கொல்லப்பட்டனர். இரு தாக்குதல்களையும் அமெரிக்காவே நடத்தியது.

அணுகுண்டு வீசப்பட்டு பேரழிவை சந்தித்த ஹிரோசிமா நகரில் உயிரிழந்த மக்களுக்கு வருடாவருடம் அஞ்சலி செலுத்தப்படும் விதமாக மிகப்பெரிய நினைவாலயம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. ஹிரோசிமா ... கப்பட்ட 72ஆவது நினைவுதி... முன்தினம் கடைப்பிடிக்கப்பட்... தலைமை அமைச்சர் ஷின்சோ... வில் கலந்துகொண்டார். "அ... பாவனையால் ஏற்படும் அழி... யம்பும் வகையில் ஹிரோசிம... உலகில் நிரந்தர அமைதியை ... வகையில் அணுவாயுத பாவ... தவிர்க்க உலக நாடுகள் ஒன்... வேண்டும்" என்று அபே தெ... அமைதியின் அடையாளமா... கணக்கான வெண்புறாக்கள்... பறக்க விடப்பட்டன.

ல்
வு



# இலை, குழைகளைக் கட்டியபடி தமிழக விவசாயிகள் போராட்டம்



சென்னை, ஓக. 8

உடலில் இலை, குழைகளைக் கட்டிக் கொண்டு கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி தமிழக விவசாயிகள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து 23ஆவது நாளாக அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

விவசாயக் கடன்களைத் தள்ளுபடிசெய்ய வேண்டும், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும், விளைபொருள்களுக்கு இலாபகரமான விலை வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட

> “விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும், விளை பொருள்களுக்கு இலாபகரமான விலை வழங்க வேண்டும்

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத் தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில், டெல்லி ஜந்தர் மந்தரில் தமிழக விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

மத்திய அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில், ஒவ்வொரு நாளும் விவசாயிகள் நூதனப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். நேற்று உடலில் இலை தழைகளைக் கட்டிக்கொண்டு, கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி ஆதிவாசிகள் போல போராட்டம் நடத்தினர். (ம)

# வெனிசுலா அதிபருக்கு எதிராக தோற்றம்பெற்றது ஆயுதக் குழு



கரஸ்கஸ், ஓக. 8

வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ, பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி அங்கு போராடிவந்த அழுத்தக் குழுக்கள் தற்போது ஆயுதக் குழுவாக மாற்றம் பெற்றுள்ளன. இந்த ஆயுதக் குழுவால் அந்த நாட்டின் இராணுவ முகாம் ஒன்றின் மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் இரண்டு சிப்பாய்கள் உயிரிழந்தனர் என்ற தகவல் தற்போது வந்துள்ளது.

வெனிசுலா அதிபராக நிக்கோலஸ் மதுரோ உள்ளார். மதுரோவின் மூன்று வருட ஆட்சியில் வெனிசுலா வரலாறு காணாத பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்துள்ளது. இதனாலேயே ஆட்சி மாற்றத்துக்கான போராட்டம் அங்கு கடந்த நான்கு மாதங்களாக நடைபெற்று வருகின்றன. மதுரோ பதவி விலகவேண்டும் என்றும் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் எதிர்கட்சிகள் வலியுறுத்தின. அந்த நாட்டின் பொதுத் தேர்தலைத் தீர்மானிக்கும் அரசியல் நிர்ணய சபையும் பொதுத் தேர்தலை நடத்த முன்வந்தது. இதனால் அந்த சபையையே தற்போது மாற்றியமைத்துள்ளார் மதுரோ. இதனால் தேர்தலைப் பிற்போட அவர் எத்தனிக்கிறார் என்று எதிர்கட்சிகள் குற்றம் சுமத்தின.

இதையடுத்து கடந்த நான்கு மாதங்களாக நடைபெற்றுவந்த போராட்டம் மேலும் தீவிரமடைந்தது. இந்தப் பின்னணியிலேயே இந்த ஆயுதக் குழு தோற்றம் பெற்றுள்ளது என்று அறிய வருகிறது. (ம)



ந்தோனேசியாவின் சங் பியாங் மாகாணத்தில் உள்ளது பான்டென் கிராமம். இந்தக் கிராமத்ல் ஒரேயொரு பாடசாலை மட்டுமே உள்ளது. நூற்றுக் கணக்கான மாணவர்கள் ஏரிகள், லைகள் போன்றவற்றைத் தாண்டி நீண்ட தூரம் பயணம் செய்து அங்கு சென்று தமது பள்ளிக் ல்வியைப் பெறுகின்றனர். (ம)

# 40 பில்லியன் யூரோ விவகாரம் அடியோடு மறுக்கிறது பிரிட்டன்

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுவதற்கான இழப்பீடாக சுமார் 40 பில்லியன் யூரோவை வழங்க பிரிட்டன் தயாராகவுள்ளது என்று வெளியான செய்தியில் எவ்வித உண்மைத்தன்மையும் இல்லை என்று பிரிட்டன் நேற்று அறிவித்தது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள நாடுகளின் பிரஜைகள், அந்த அமைப்பிலுள்ள ஏனைய நாடுகளுக்குச் சென்று தங்கலாம், கல்வி கற்கலாம், தொழில் வாய்ப்பைத் தேடிக்கொள்ளலாம் என்பது விதி. இந்த விதியால் பிரிட்டன் பாதிக்கப்படுகிறது என்று குற்றம் சுமத்தப்பட்டது. ஏனைய நாட்டின் மக்கள் பிரிட்டன் மக்களின் தொழில் வாய்ப்பையும், கல்வியையும் சுரண்டுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. இதனால் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருப்பது தொடர்பாக பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட்டு விலகுவது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. விலகுவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் பிரிட்டன் விலகவேண்டுமானால் சுமார் 60 பில்லியன் டொலர்களை இழப்பீடாகத் தரவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தி வருகிறது. இதற்கு பிரிட்டன் மறுப்புத் தெரிவித்து வருகிறது.

இந்த நிலையில் சுமார் 40 பில்லியன் டொலர்கள் வரை வழங்க பிரிட்டன் தயாராக உள்ளது என்ற தகவல் பன்னாட்டு ஊடகங்களால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. இதை பிரிட்டன் நேற்று மறுத்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்துக்கு கொடுக்க வேண்டிய தொகை தொடர்பில் இன்னும் முடிவாகவில்லை. எனவே தற்போது வெளியாகியுள்ள செய்திகள் ஆதாரமற்றவை என்கிறது பிரிட்டன். (ம)



# ஆவது நினைவுதினம் நேற்றுமுன்தினம்



ாசிமா நிர்மூலமாக்
னவுதினம் நேற்று
ப்பட்டது. ஜப்பான்
ன்சோ அபே நிகழ்
ர். “அணுவாயுத
அழிவை எடுத்தி
ரோசிமா உள்ளது.
நியை ஏற்படுத்தும
 பாவனையைத்
ள் ஒன்றிணைய
பே தெரிவித்தார்.
ளமான நூற்றுக்
ாக்கள் நிகழ்வில்
(ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# உறைக்கும் உண்மை

ஆரம்பித்த நாளில் இருந்து சர்ச்சைகளுக்குக் குறைவில்லாத வடக்கு மாகாண சபை, தொடர்ந்தும் சர்ச்சைகளுக்குத்தீனி போட்டுக்கொண்டே இருக்கிறது. அமைச்சர்கள்மீள்நியமனத்தையொட்டி இப்போது மீண்டும்சர்ச்சை வெடித்திருக்கிறது.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் அமைச்சரவையில் தனக்கு எதிரானவர்கள்என்றுகருதும்சுகாதார அமைச்சரான ப.சத்தியலிங்கத்தையும். போக்குவரத்து மீன்பிடி அமைச்சரான பா.டெனீஸ்வரனையும்நீக்குவது என்பதில்விடாப்பிடியாக இருக்கிறார். அவருக்கு ஆதரவான விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும் கல்வி அமைச்சர் த.குருகுலராசாவும் பதவிவிலகவேண்டிய சூழல்தன்னாலேயே ஏற்பட்டதைத் தொடர்ந்துமற்றைய இருவரையும்விரட்டிவிடுவதில்அவர் விட்டுக்கொடுப்புக்குத் தயாராக இல்லை.

முதலமைச்சர்சி.வி.விக்னேஸ்வரனைநன்குஅறிந்தவர்கள் எப்போதும்சுட்டிக்காட்டும் ஒரு விடயம், அவர்தான்தீர்மானித்த ஒன்றிலிருந்து மாறுவதென்பது முடியாத காரியம் என்பதுதான். ''தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள்'' என்று இதனை பேச்சு வழக்கில் சொல்வார்கள். எனவே மற்றைய இரு அமைச்சர்களையும் பதவி நீக்குவது என்ற விடயத்தில்அவர்பிடிவாதமாக இருக்கிறார். அதுவே இப்போது மீண்டும் பிரச்சினையை உருவாக்கி வருகிறது.

அந்த இரு அமைச்சர்களும் ஊழல் விசாரணையை எதிர்கொள்வதற்குத்தயார்என்கிறார்கள். ஆனால், முதலமைச்சர் தான்தோன்றித்தனமாக நியமிக்கும் ஒரு சட்டபூர்வமற்ற விசாரணைக்குழுவின்முன்பாக அல்லாமல், மாகாணசபையால்நியமிக்கப்படும் தெரிவுக்குழு ஒன்றின்முன்பாகவிசாரணைக்குத்தோன்றுவோம்என்கிறார்கள்.அதைநிராகரிக்கும் முதலமைச்சர், தான் நியமிக்கும் குழுவின் முன்பாகவே அவர்கள்விசாரணைக்குத் தோற்றவேண்டும் என்று விடாப்பிடியாக நிற்கிறார். அவர்கள் அப்படிச் செய்யவில்லை என்றால் அவர்களைத் தான் பதவி நீக்கம் செய்வார் என்றும் மிரட்டுகிறார்.

முதலமைச்சர் முதலில் நியமித்த குழுவை அதன் அறிக்கையால் பாதிக்கப்பட்ட இரு அமைச்சர்களும் ஏற்கனவே நிராகரித்திருந்தனர். அந்த அறிக்கையில் ஏனைய இருஅமைச்சர்கள்தொடர்பிலும்தெரிவிக்கப்பட்ட விடயங்களைநிராகரித்ததன்மூலம், முதலமைச்சரும்அந்தக்குழுவைநிராகரித்திருந்தார். இப்படிப்பெரும்பான்மையான அமைச்சர்கள்நிராகரித்த குழுவைப்போன்றஒன்றையேமீண்டும்நியமிப்பேன்என்று முதலமைச்சர்அடம்பிடிப்பதில்எந்தநியாயமும்இருப்பதாகத் தெரியவில்லை. அதற்குப்பதிலாகமாகாணசபைத்தெரிவுக் குழுஒன்றைநியமித்துஇந்தவிசாரணையைமுன்னெடுப்பதன் மூலம் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளலாம்.

ஆனால், ஆண்டியானாலும் அரசனானாலும் 'ஈகோ' எவரைத் தான் விட்டது! தலைவர்களுக்கு மக்கள் நலனைவிடத்தமது 'ஈகோ' பெரிதாகிவிட்டதால், அதிலேயே முட்டி மோதிக்கொண்டு தாமும் அழிந்து மக்களையும் அழிவுப் பாதைக்குள் தள்ளுகிறார்கள்.

தற்போது புதிய அமைச்சரவையில் தாம் பதவி எதனையும் பெறுவதில்லைஎன்றுதமிழ்அரசுக்கட்சியின்மாகாணசபை உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர். இந்த முடிவுக்கான கட்சித்தலைமையின் அங்கீகாரத்தை அவர்கள் எதிர்பார்த்திருக்கின்றனர். அமைச்சரவையில் தமிழ் அரசுக் கட்சியை ஓரங்கட்டிவிட்டு இந்த முடிவு இறுதி செய்யப்பட்டால், மாகாண சபையில் அடுத்து வரும் 13 மாதங்களில் (ஒருவேளைபதவி நீடிக்கப்பட்டால் 3 வருடங்களில்) அந்தக் கட்சியின் ஒத்துழைப்பு இல்லாமல்சபையைநடத்துவது முதலமைச்சருக்குச் மிகச் சவாலானதாக இருக்கும்.

தற்போதைய அரசியல் சூழலில் தமிழர்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்பதை முதலமைச்சர் மேடைப் பேச்சில் கூறினாலும் அந்த ஒற்றுமையைத் தனது செயல்களால் கட்டிக்காக்க முடியாத அல்லது அதற்கான இராஜதந்திரம் தெரியாத ஒருவராகவே முதலமைச்சர் இருக்கிறார் என்பது முழு உண்மை.

# கைவிடப்பட்ட பகுதியா யாழ். குடாநாடு?

இந்துமதி

அண்மையில் யாழ்ப்பாணத்துக்குவருகை தந்த சிங்கப்பூர் அயலுறவுத் துறை அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன், யாழ்ப்பாணத்தவரின் பெருமைகளையெல்லாம் வானளாவப் புகழ்ந்து உரைத்தார். இதைக் கேட்டு யாழ் மக்களின் உள்ளம் புளகாங்கிதம் அடைந்தது. இத்தனை பெருமைகளுக்கு உரியவர்களா நாம்? என்ற வியப்புக் கூட ஏற்பட்டது.

ஆனால் அந்த இறுமாப்பு அதிக நாள்களுக்கு நீடிக்கவில்லை. மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம், பெருமையுடன் தலை நிமிர்ந்து வாழ்ந்த யாழ்ப்பாணத்தவரைத் தலைகுனிய வைத்து விட்டது. நேர்மையான ஒரு நீதித்துறை உயரதிகாரி மீது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டதை ஒரு சாதாரணமான விடயமாகக் கொள்ள முடியாது. நீதித்துறை மற்றும் குடாநாட்டுச் சமூகத்தின் மீது மேற்கொள்ளப்பட்டதொரு தாக்குதல் சம்பவமாகவே இதைக் கருத வேண்டும். பொலிஸார் தற்போது இந்தச் சூட்டுச் சம்பவத்தை திசை திருப்புவதற்கு முயல்கின்றனர் என்றே தெரிகின்றது. ஆனால் மக்கள் அதை நம்புவதாகத் தெரியவில்லை.



### கைவிடப்பட்ட பகுதியாக யாழ்.குடாநாடு

சமூக விரோதிகளை அடக்குவதில் தீவிரமாகச் செயற்பட்டு வந்தவர் நீதிபதி இளஞ்செழியன். இதனால் எதிரிகள் பலரை அவர் சம்பாதித்திருந்தார். இதன் காரணமாகவே அவரது உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக மக்கள் நம்புகின்றனர்.

யாழ் குடாநாடு மிகப் பெரிய பரந்த பிரதேசமொன்றல்ல. அது குறுகியதொருநிலப்பரப்பையேகொண்டது. மக்களின் அடர்த்திக்கு ஏற்றவாறு ஏராளமான பொலிஸ் நிலையங்கள் இங்கு அமைந்துள்ளன. இதை விடப் படையினரின் முகாம்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. இந்த நிலையில் இங்கு குற்றச் செயல்கள் இடம்பெறுகின்றமை வியப்புக்குரியது. குற்றவாளி களை அடக்குவதற்குப் பொலிஸார் ஏன் தயங்குகின்றார்கள் என்பது புரியவில்லை. குடாநாடு கைவிடப்பட்டதொரு பகுதியாகவே தற்போது காட்சியளிக்கின்றது.

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மனிதரைக்கடிக்கமுயன்ற கதை போன்று நல்லூரில் இடம்பெற்றதுயரமான குறித்தசம்பவத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொல்லப்பட்டிருந்தார். மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் படுகாயம் அடைந்திருந்தார். நீதிபதி இளஞ்செழியன் மயிரிழையில் உயிர்தப்பியிருந்தார்.

### பொலிஸார் பொதுமக்களது அச்சத்தை போக்க வேண்டும்

பொலிஸாரைப் பொறுத்தவரையில் இந்தச் சம்பவத்தை அவர்களால் பொறுத்துக் கொள்ளவே முடியாது. அவர்களது தன்மானத்துக்கு விடுக்கப்பட்ட சவாலாகவே இதனைக் கொள்ள முடிகின்றது. ஆகவே பொலிஸார் துடிப்புடன் செயலாற்றி உண்மையான குற்றவாளிகளைக் கைது செய்து சட்டத்தின் முன்னால் நிறுத்த வேண்டும். அதுமட்டுமல்லாது, வேறு குற்றச்செயல்களில்ஈடுபடுகின்றவர்கள் எங்கிருந்தாலும் அவர்களைக் கைது செய்து மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டும்.

யாழ். குடாநாடு மிகவும் திட்டமிடப்பட்ட வகையில் வன்முறைக் கலாசாரத்தினுள் தள்ளப்பட்டு வருகின்றமை தெளிவாகத் தெரிகின்றது. புங்குடுதீவு வித்தியாவின் படுகொலை கூட நன்கு திட்டமிடப்பட்ட ஒன்றுதான். இந்தக் கொடிய சம்பவம், குடநாட்டின் பண்பாட்டையும், கலாசாரத்தையும் குழிதோண்டிப் புதைத்து விட்டது. இதில் குற்றம் புரிந்தவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டாலும் இந்தச் சம்பவத்தால் ஏற்படுத்தப்பட்ட களங்கம் மறையவே மறையாது.

இந்த நிலையில், இளைஞர்கள் சிலரின் அட்டகாசம் குடாநாட்டின் சில பகுதிகளில் எல்லைமீறிப் போவதைக் காண முடிகின்றது. மோட்டார் சைக்கிள்களில் வாள்களை ஏந்தியவாறு வலம் வந்து மக்களை அச்சமடையச் செய்வதில் இவர்கள் குரூரமானதொரு ஆனந்தத்தை அனுபவிக்கின்றனர். தட்டிக் கேட்பதற்கு எவரும் இல்லாததால் இந்த இளைஞர்கள் எல்லைமீறிச் செயற்படுகின்றனர்.

பொலிஸார் மனம் வைத்தால் இவர்களை அடக்கிவிடுவதுபெரியதொரு காரியமல்ல. ஆனால் அவர்கள் மனம் வைத்துச் செயற்படுகின்றனரா எனத் தெரியவில்லை. அவ்வாறாயின் மக்களைக்காப்பாற்றுவதற்குக்கடவுள் தான் கீழே இறங்கி வரவேண்டும்.

### குடாநாட்டில் சட்டவிரோத மணல் கடத்தல் தாராளம்

போர் இடம்பெற்று முடிந்த ஓரிடத்தில் கட்டுமானவேலைகள் அதிகளவில் இடம்பெறுவது வழக்கமாகும். கட்டுமானங்களுக்குத் தேவையான பொருள்களும் அதிகளவில் தேவைப்படும். இவற்றுள் சீமேந்து, கல் ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக மணல் முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஆனால் மணலைப் பெறுவதில் வீட்டுத் திட்டப் பயனாளிகள் மிகக் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். ஆனால் வேறொரு புறத்தில் சட்ட விரோதமாக மணல் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் அதிக பணத்தைச் சம்பாதித்துக் கொள்கின்றர். வடமராட்சியின் வல்லிபுரம் தொடக்கம் பரந்து காணப்படும் மணலுக்கு எப்போதுமே மிகுந்த மதிப்பு உள்ளது. மணலைக் கடத்தி வியாபாரம் செய்யபவர்களின் கேந்திர நிலையமாகவும் இது காணப்படுகின்றது. மணற் கொள்ளையில் ஈடுபடுபவர்கள் தம்மைத் தடுப்பதற்கு முற்படுகின்ற பொலிஸாரையும், பண்டயினரையும்கூட எதுவிதத் தயக்கமுமின்றித்தாக்குவதில்ஈடுபடுகின்றனர். மணலை ஏற்றிக் கொண்டு இவர்கள் வாகனங்களை தாறுமாறாகச் செலுத்துவதால் அப்பாவி மக்கள் உயிராபத்தையும் எதிர்கொண்டு வருகின்றனர். ஆனால் இவர்களை எவராலும் கட்டுப்படுத்த முடியவில்லை.

மக்களுக்கு உணவு, உறைவிடம் ஆகியவை முக்கியமான தேவைகளாகக் காணப்படுகின்றன. ஆனால் அவர்கள் அச்சமின்றித் தூங்குவதற்கும் நடமாடுவதற்கும் பாதுகாப்பான சூழ்நிலை மிக மிக அவசியமானதாகும் எந்த நேரமும் அச்சத்துடன் வாழும்போது அவர்களது மனநிலையில் பாதிப்புஏற்பட்டுவிடும்.

குடாநாட்டு அரசியல்வாதிகள் முதலில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். அரசியல் பிரச்சினைகளை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, அவர்கள் இதில் கூடிய கவன்ம் செலுத்துவது முக்கிய மானதாகும்.

அரசும் இதற்குப் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். நீதிபதி இளஞ்செழியன் மீதான கொலை முயற்சிக்குப் பின்னராவது பாதுகாப்புத் தரப்பினரின் தூக்கம் கலைய வேண்டும்.

குடாநாட்டைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களே அதிகளவில் வாழ்கின்றனர். போரினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் இவர்கள். ஆனால் தமிழ்ப் பிரதேசம்என்பதால்பலவிடயங்களிலும் இதுவொரு கைவிடப்பட்ட பகுதியாகவே காணப்படுகின்றது. பாதுகாப்பு நிலைமை இங்கு படுமோசமாகவுள்ளது. இதைத் தொடர்ந்தும் நாம் அனுமதிக்கலாமா?

# நாட்டின் அரசியல் குழப்பங்களால் பாதிக்கப்படப்போவது தமிழர்கள்தான்

சேரலாதன்

முன்னாள்அரசதலைவர் மகிந்த ராஜபக்ச கொள்ளை அடித்தவர் தான். ஆனால் அவர் நாட்டை அபிவிருத்தி செய்தவர் என்பதை எவரும் மறந்து விடக்கூடாது. இவ்வாறுபௌத்ததேரர்ஒருவர்மகிந்தவுக்கு சான்றிதழ் வழங்கியுள்ளார். இதில் மகிந்த கொள்ளை அடித்தமை தொடர்பாகப் பெரிதும் அலட்டிக் கொள்ளவில்லை அந்தத் தேரர். அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அப்போது நிதிப் பொறுப்பையும் மகிந்தவே தம்வசம் வைத்துக் கொண்டார். அவரது தம்பியாரான பசில் ராஜபக்ச பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகப் பணிபுரிந்ததுடன், அரசின் சகல நிதிக் கட்டுப்பாடுகளையும்தம்மிடமேவைத்துக்கொண்டார். இன்னொருதம்பியாரானகோத்தபாயபாதுகாப்புச்செயலர்பதவியை வகித்ததுடன்கொழும்பநகரின்அபிவிருத்தித் திட்டங்களுக்கும் பொறுப்பாக இருந்தார். இதைவிட மகிந்தவின் குடும்பத்தைச் சேர்ந்த பலர் அரச துறைகளில்முக்கியபதவிகளைவகித்தனர். இதனால்பெருமளவுநிதி மகிந்தவின் குடும்பத்தினர் ஊடாகவே கையாளப்பட்டது. அன்றைய நிலையில்மகிந்தவையும்அவரைச்சார்ந்தவர்களையும் எவருமே கேள்வி கேட்க முடியாததொரு நிலை காணப்பட்டது. இதனால்மோசடிகள்ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்களும் நிறையவே காணப்பட்டன.

### அரச தலைவரால் மகிந்த காலத்து ஊழல்களை வெளிக்கொண்டு வர இயலாது

கடந்த 2015ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன தேர்தலில் வெற்றி பெற்று அரச தலைவர் பதவியில் அமர்ந்தபோதிலும், அவரால் முன்னையஆட்சிக்காலத்தில்இடம்பெற்ற ஊழல்கள் மற்றும் மோசடிகளை வெளிக்கொணர முடியவில்லை. இதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. தற்போதைய அரச தலைவரும், மகிந்தவும்ஒரேகட்சியைச் சேர்ந்தவர்கள்என்பதுமுதலாவது முக்கிய காரணமாகும். மகிந்தவுக்கு எதிராக நடவடிக்கைஎடுத்தால்அது கட்சிக்குள்பிளவைஏற்படுத்திவிடும் என்பது மைத்திரிக்கு நன்கு தெரியும். சிறிலங்காசுதந்திரக்கட்சிக்குள் மகிந்தவின் ஆதரவாளர்களும் நிறையவே உள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள்பலரின்ஆதரவும் அவருக்கு உண்டு. இதன் காரணமாகவே மைத்திரி தலைமையிலான அரசு மகிந்தவைக் கண்டு அஞ்சுகின்றது. கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் மோசடி செய்யப்பட்ட பெருமளவு நிதி மீளப்பெறப்படுமானால், அதுநாட்டின் பொருளாதாரநெருக்கடியைஓரளவாவது நிவர்த்தி செய்யப் பயன்படும். ஆனால் கண்முன்னே பெருமளவு நிதியைவைத்துக்கொண்டுமைத்திரி தலைமையிலானஅரசுபொருளாதார நெருக்கடிக்குள்சிக்கித் தவிக்கின்றது.

### ஆளை ஆள் மிரட்டும் அரச தலைவரும் மகிந்தவும்

இந்தஅரசைவிரைவில்வீழ்த்திக்காட்டுவேன் என மகிந்த சபதமிட்டு இருக்கின்றார். ஆனால்மறுபுறத்தில்மகிந்தவின் ஊழல்கள் அம்பலப்படுத்தப்படுமென அரச தலைவர் கூறி வருகின்றார். ஆனால் இவையிரண்டும் நடப்பதாகவே தெரியவில்லை. நடக்கும் என்றநம்பிக்கையும் எழவில்லை.

மோசடியாளர் ஒருவரைக் காப்பாற்றுகின்ற அரசும், மோசடி அரசு என்றே அழைக்கப்பட வேண்டும். அத்துடன் இந்தஅரசிலும்மோசடிகள்இடம்பெறுவதாக எதிரணியினர் கூறுகின்றனர். கூட்டாட்சி அரசு பிளவுபடுவதற்கான அறிகுறிகள் தற்போது தெளிவாகத் தெரிகின்றன. சிறிலங்காசுதந்திரக்கட்சி இரண்டாகப்பிளவுபட்டுஒருபிரிவினர் மைத்திரி பக்கம் இணைவதற்கான சாத்தியங்களும் காணப்படுகின்றன. நாடாளுமன்றத்தில் ஐ.தே.க. தனிப்பெரும் கட்சியாக உள்ள போதிலும், ஆட்சியைத் தனியாக அமைக்கும் அளவுக்குப்பெரும்பான்மைஇல்லை. இதனால்வேறுசிலரது ஆதரவைநாட வேண்டிய நிலையில் அந்தக் கட்சி உள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியாலும் தனித்து ஆட்சியமைக்க முடியாது. இந்தநிலையில்பெரும்இழுபறி நிலையொன்று நாட்டில் உருவாகப் போகின்றது. இதனால் பாதிக்கப்படப் போவது தமிழர்கள் தான் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மைத்திரி தலைமையிலான கூட்டாட்சிஅரசால் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்குமென்றநம்பிக்கைதமிழர்களிடத்தில் காணப்பட்டது. காலப்போக்கில் இந்த நம்பிக்கையில் தளர்வு ஏற்பட்டாலும் முழுதாக நம்பிக்கை இழக்கப்படவில்லை. ஆனால் தற்போது உருவாகியுள்ள புதிய சூழ்நிலை தமிழர்களுக்கு ஏமாற்றத்தையே அளித்துள்ளது.


> இந்த அரசை விரைவில் வீழ்த்திக் காட்டுவேன் என மகிந்த சபதமிட்டு இருக்கின்றார். ஆனால் மறுபுறத்தில் மகிந்தவின் ஊழல்கள் அம்பலப்படுத்தப்படுமென அரச தலைவர் கூறி வருகின்றார். ஆனால் இவையிரண்டும் நடப்பதாகவே தெரியவில்லை. நடக்கும் என்ற நம்பிக்கையும் எழவில்லை.


நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுப் புதிய தேர்தல் இடம்பெறுமாயின், மகிந்தஅணியினர்கணிசமானவெற்றியைப்பெறுவதற்கானவாய்ப்புக்கள் பிரகாசமாக உள்ளன. கூட்டாட்சி அரசின் தவறுகள், இனவாதம் ஆகிய இரண்டையும் வைத்தே அவர்கள் பரப்பரைகளில் ஈடுபடுவார்கள்: பொருளாதார ரீதியில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நாட்டு மக்கள் அரசுக்கு எதிராக வாக்களிக்கவே விரும்புவார்கள். இதுமகிந்தஅணியினருக்கு வாய்ப்பாக அமைந்து விடும். சிலவேளை அந்த அணியினர் நாடாளுமன்றத்தில்பெரும்பான்மையைப் பெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

### மகிந்தவால் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியுமா?

ஆனால் அவ்வாறானதொரு நிலை ஏற்படுமாயின், அரச தலைவரும் முடங்கியிருக்க வேண்டியிருக்கும். மகிந்தவின் செல்வாக்குமீண்டும்உயிர்பெறுமாயின் தமிழர்களுக்கு அதுவொரு நல்ல செய்தியாக அமையப் போவதில்லை. கடந்த அரச தலைவருக்கான தேர்தலில்தம்மைத்தோற்கடித்தவர்கள் தமிழர்கள்தான் என்ற வன்மத்தை கொண்டிருக்கும் மகிந்த அதற்குப்பழிவாங்கவேவிரும்புவார். இதனால் மேலும் பாதிக்கப்படப் போகின்றவர்கள் தமிழர்கள்தான். பெரும்பான்மை இனத்தவர்கள்தமக்குள் போட்டிபோட்டுக் கொண்டாலும், சிறுபான்மையினருக்கு எதையும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். இது கடந்த 70 ஆண்டுகால அனுபவம். ஆகவே இனியும் பெரும்பான்மையினரை நம்பியிருப்பதில் பயனொன்றுமில்லை. ஆனால்தனிவழிசெல்வதற்கான வாய்ப்புக்களும் குறைவாகவே உள்ளன.

இந்த நிலையில் தந்தை செல்வா கூறியதுபோன்றுதமிழர்களை இனிமேல் அந்த ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்.





## ஆசிரியருக்கான கடிதம்

### வருமுன் காக்க அக்கறை காட்டிச் செயற்படுக

சிறுநீரகம் உரிய விதத்தில் இயங்காததால் பலவித பாதிப்புக்களைச் சந்திக்கும் பொதுமக்கள் அதிகமாக உள்ள மாவட்டங்களாக சுகாதார அமைச்சால் சில மாவட்டங்கள் இனங் காணப்பட்டுள்ளன. குறித்த அந்த அட்டவணையில் வட மாகாணத்தின் கீழ்வரும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் சிறுநீரகப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் அதிக அளவிலான பொது மக்கள் வாழும் மாவட்டங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

தொடராகப் பிரச்சினைகளையும் சிரமங்களையும் சந்திப்போரை சுட்டிக்காட்ட, பனையால் விழுந்தவனை மாடு முட்டிக் காயப்படுத்தியதாம் என்ற முதுமொழியொன்று தமிழில் வழக்கில் உள்ளது. இடம்பெற்ற போரில் எவருமே எண்ணிப்பார்க்க இயலாத அளவுக்கு இழப்புக்களையும் உடல் உளப்பாதிப்புக்களையும் எதிர்கொண்டவர்கள் இந்த கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மக்களே.

போர் முடிவுக்கு வந்ததையடுத்து தத்தமது பகுதிகளில் மீளக்குடியமர்ந்த போதிலும், இடம்பெயர்வதற்கு முன்னர் அவர்களுக்கிருந்த பல வசதி வாய்ப்புக்கள் மற்றும் வளங்களை இழந்து எதுவுமற்ற நிலையிலேயே அவர்கள் மீளக்குடியமர நேர்ந்தது. படிப்படியாகத் தமது வாழ்வாதாரத் தேவைகளைத் தேடிக் கொண்டு மீண்டும் புதியதொரு வாழ்க்கையில் பிரவேசித்துள்ள அவர்களை இயற்கையும் சோதிக்கிறதே என மனம் வருந்தும் அளவுக்கு அவர்களை சிறுநீரகம் தொடர்பான நோய்களும், தாக்கங்களும் வருத்துவதாகக் கூறப்படுகிறது.

வவுனியா மாவட்டத்தில் இயற்கையாகவே கிணற்று நீரில் கல்சியம் கனியுப்பு அளவுக்கு அதிகமாகச் செறிந்து காணப்படுதல், வயல்களில் நெற்பயிர்களுக்கு பயன்படுத்தும் கிருமிநாசினி வகைகள் மற்றும் களைகொல்லி மருந்துகள் மக்களது குடிதண்ணீரில் கலக்கும் வாய்ப்பு என்பவை காரணமாகவே குறித்த பகுதிகளைச் சேர்ந்த மக்கள் சிறுநீரகப் பிரச்சினைகளுக்கு அதிக அளவில் உட்பட நேர்வதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இது விடயம் குறித்து வடக்கு மாகாண சுகாதார அமைச்சு அக்கறைகாட்டிச் செயற்பட விளையும் அதேவேளை, குறித்த மாவட்டங்களைச் சேர்ந்த பொது மக்களும் இது விடயத்தில் கடும் அக்கறை செலுத்தி சிறுநீரகநோய்ப் பாதிப்புக்களிலிருந்து தம்மைப் பாதுகாக்க முன்னெச்சரிக்கையோடு செயற்படுதல் அவசியம்.

து. இராசன்,
கிளிநொச்சி

# சந்தையிலுள்ள முக்கிய வணிகக் கூறுகள் வெளிப்படுத்தும் மாத மாற்றங்களின் போக்கு

| முக்கிய சந்தைக் கூறுகள் | நுகர்வோர் விலைச் சுட்டென் | | | செலவின மதிப்பீடுகளின் மாத மாற்றம் (ரூபா) | | | நுகர்வோர் விலைச் சுட்டென் மாத மாற்றம் (%) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஜூலை 2016 | ஜூன் 2017 | ஜூலை 2017 | ஜூலை 2016 | ஜூன் 2017 | ஜூலை 2017 | ஜூலை 2016 | ஜூன் 2017 | ஜூலை 2017 |
| அனைத்துப் பொருள்களும் | 113.9 | 120.1 | 119.4 | 428.71 | 1156.98 | -457.15 | 0.63 | 1.62 | -0.63 |
| உணவுப் பொருள்கள் | 123.8 | 132.0 | 129.7 | 474.62 | 1044.13 | -392.21 | 0.69 | 1.46 | -0.54 |
| உணவு அல்லாத பொருள்கள் | 110.1 | 115.5 | 115.3 | -45.91 | 112.86 | -64.93 | -0.07 | 0.16 | -0.09 |
| உடுபுடவைகள் மற்றும் காலணிகள் | 118.1 | 126.3 | 124.9 | -34.15 | -4.44 | -19.94 | -0.05 | -0.01 | -0.03 |
| வீடு, நீர், மின்சாரம், எரிவாயு, ஏனைய எரிபொருள்கள் | 110.2 | 110.1 | 110.1 | -12.30 | -18.51 | 9.33 | -0.02 | -0.03 | 0.01 |
| வீட்டுத் தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் பராமரிப்பு | 107.8 | 122.8 | 123.5 | 3.05 | 173.71 | 9.85 | 0.00 | 0.24 | 0.01 |
| சுகாதாரம் | 129.9 | 141.1 | 136.7 | -7.92 | -65.79 | -118.41 | -0.01 | -0.09 | -0.16 |
| போக்குவரத்து | 92.8 | 96.6 | 97.2 | 8.54 | 27.18 | 38.53 | 0.01 | 0.04 | 0.05 |
| சிற்றுண்டி சாலைகள் மற்றும் விடுதிகள் | 108.1 | 115.0 | 115.5 | 81.83 | 0.00 | 13.12 | 0.12 | 0.00 | 0.02 |
| ஏனையவை | 116.1 | 130.1 | 130.2 | -84.95 | 0.70 | 2.58 | -0.12 | 0.00 | 0.00 |

*அனைத்துப் பொருள்களுக்குமான கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மாதிரி கடந்த ஜூலை மாதம் 119.4 புள்ளிகளாக பதிவாகியுள்ளது. குறிப்பாக 0.7 சுட்டெண் புள்ளிகள் அல்லது 0.63 வீத குறைவாக காணப்படுகிறது. கடந்த ஜூன் மாத காலப்பகுதிக்கான அனைத்துப் பொருள்களுக்குமான கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மாதிரி 120.1 புள்ளிகளாக அமைந்துள்ளது. இந்த வெளிப்பாடுகள் சந்தையிலுள்ள முக்கிய வணிகக் கூறுகளின் செலவின மதிப்பீட்டை 457.15 ரூபாவாக வெளிக்காட்டியுள்ளது. இதேபோன்று ஏனைய முக்கிய வணிகக் கூறுகளுக்கான மாற்றங்களும் மேல் வருமாறு அமைந்துள்ளன.* (ஓ)

## மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்கள் அதிகரிப்பு

### நிதிச் சபை தகவல்

நிதிக் கொள்கைகளின் பரிசீலனைக்கு அமைவானதாக இலங்கை மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீத கட்டணங்களை அதிகரிப்பதற்கு நிதிச் சபை தீர்மானித்துள்ளது.

இதன்படி ஸ்ரண்டிங் டிபோசிட் பசிலிட்டி றேற் (எஸ்.டி.ஆர்.எவ்) 7 வீதத்தில் இருந்து 7.25 வீதமாக வும், ஸ்ரண்டிங் லெண்டிங் பசிலிட்டி றேற் (எஸ்.எல்.எவ்.ஆர்) 8.50 வீதத்தில் இருந்து 8.75 வீதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தவிர சற்றியூற்றரி றிசேவ் றேசியோ (எஸ்.ஆர்.ஆர்) 7.5 வீதம் என்ற அடிப்படையில் மாற்றமின்றி இருக்குமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## இலங்கையில் இயற்கை வாயு தயாரிக்கத் தீர்மானம்

### பன்னாட்டு முதலீட்டாளர்களை அணுக நடவடிக்கை



எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுக்கு முன்பாக இலங்கையில் இயற்கை வாயுவை தயாரிக்க முடியும் என்ற தகவல் கனிய வள மற்றும் பெற்றோலிய வாயுத் துறை அமைச்சர் சந்திம வீரக் கொடியால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக வடமாகாணத்தில் மன்னாரை அண்டிய பிரதேசத்தில் உள்ள இயற்கையான கனிய வாயுப் படிமத்தினை பயனுறுதியாக்கும் விதமாக பன்னாட்டு முறைமைக்கு அமைவான முதலீட்டாளர்களை அணுகுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்படுகிறது.

நடப்பாண்டின் மூன்றாவது காலாண்டில் இதுகுறித்த ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ஓ)




## டி.எவ்.சி. சி. வங்கிக்கு உயர் விருது

'மிகச்சிறந்த வணிக பேண்தகைமை சாதனை' விருதை அண்மையில் ஜேர்மனியின் 'கார்ள் சுருகி' நகர மண்டபத்தில் இடம்பெற்ற 'கார்ள் சுருகி' பேண்தகைமை நிதி விருதுகள் வழங்கும் நிகழ்வின் போது டி.எவ்.சி.சி வங்கி பெற்றுக்கொண்டுள்ளது.

இதன்படி இலங்கையில் டி.எவ்.சி.சி வங்கியானது தமது கூட்டாண்மை வினைத்திறனில் பேண்தகைமையினை ஒருங்கிணைத்தல் மற்றும் தமது வர்த்தகச் செயன்முறை ஆகியவற்றை வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளமை காரணமாகவே இந்த விருதைப் பெற்றுள்ளது.

டி.எவ்.சி.சி வங்கியின் பேண்தகைமை பிரிவு முகாமையாளர் சேனக்க ஜயசிங்க இந்த விருதினை 'கார்ள் சுருகி' நகரின் மேஜர் பிறாங் மென்ரறப்பிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

இது குறித்து கருத்துரைத்துள்ள டி.எவ்.சி.சிவங்கியின் தலைமைநிறைவேற்று அதிகாரி அர்ஜுன் பெர்ணாண்டோ,

"பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாடு என்பது எமது பெறுமானங்களில் வலுவாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதுடன், நாம் எவ்வாறு எமது வணிக நடவடிக்கைகளை முன்னெடுக்கிறோம், பொருள்கள், சேவைகளை எவ்வாறு மேம்படுத்துகிறோம் என்பதையும் சிறந்த முறையில் பிரதிபலிக்கின்றது. இந்த விருதானது நாம் செயற்படும் சமூகங்கள் மத்தியில் பேண்தகைமைப் பெறுமானங்களை உருவாக்குவதில் டி.எவ்.சி.சி வங்கி கொண்டுள்ள ஆழ்ந்த அர்ப்பணிப் புணர்வினையும், இலங்கையில் பேண்தகைமை மிகுந்த நிதி நடைமுறைகளை உருவாக்கி பேணுதல் குறித்தும் அங்கீகாரத்தை வழங்கியுள்ளது" - என்றார்.

மேலும் 'கார்ள் சுருகி' பேண்தகைமை நிதி விருதுகள் பேண்தகைமை நிதியியலில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை நல்கியுள்ள நிதி நிறுவனங்கள் மற்றும் ஸ்தாபனங்களுக்கு அளிக்கப்படுகின்றது. பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் பேண்தகைமையை தமது வர்த்தக நடவடிக்கைகளில் ஒருங்கிணைத்து, பேண்தகைமை நிதியியலில் மிகச்சிறந்த பங்களிப்பை நல்கிய நிதி நிறுவனங்களே விருதுக்காகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

'கார்ள்சுருகி' விருதானது பேண்தகைமை நிதிக் கருவிகள் மற்றும் சந்தைகளை உலகளாவிய ரீதியில் குறிப்பாக பசுமை நிதி மற்றும் முதலீடுகள், நிதி உள்ளடக்கம் மற்றும் சமூக நீதி, பசுமை உரிமை முதல் மற்றும் முயற்சியாண்மை முதலீடுகள், நிதிச்சேவை நிறுவனங்களின் பேண்தகைமையை பூரணமாக ஒருங்கிணைத்தல் போன்றவற்றை ஊக்குவிக்கும் நோக்குடன் வழங்கப்படுகின்றமை குறித்து நோக்கத்தக்கது. (ஓ)

## கடன் விலை மனுக்கள் கோரப்பட்டுள்ளன

### தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு நடவடிக்கை

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு 2017 ஆம் ஆண்டுக்குரித்தான நிதித் தேவையை பூர்த்தி செய்யும் விதமாக ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனை பெறுவதற்கான விலை மனுவை கோரியுள்ளது.

இதன்படி 2017 ஆம் ஆண்டுக்குரித்தான திட்டமிடப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு மேற்படி ஒரு பில்லியன் அமெரிக்கடொலர்கடன்தொகையை பயன்படுத்த எண்ணியுள்ளதென்றதகவலை தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு அறிக்கை மூலம் வெளிப்படுத்தியுள்ளது.

அபிவிருத்தி திட்டங்களுக்காக 300 தொடக்கம் ஆயிரம் மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக பெற்றுக் கொள்வதற்கு அனுமதியை அமைச்சரவை ஏற்கனவே வழங்கியுள்ளமை நோக்கத்தக்கது.

மேலும் உள்நாட்டு வங்கிகள் பன்னாட்டு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் என்பன தற்போது விலைமனுவை முன்வைத்துள்ளதாக அமைச்சின் கீழான வெளிநாட்டு வள திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தக் கடனைச் செலுத்துவதற்கான கால வரையறை என்பது மூன்று வருடங்கள் அல்லது அதற்கு அதிகமான காலம் என குறிப்பிடப்பட்டுள்ளதுடன் நிலையான வட்டி வீதத்தின் குறிகாட்டியானது லண்டன் பன்னாட்டு வங்கி வட்டி வீதம் மற்றும் தளம்பல் வட்டி வீதத்தில் விலைமனுவை முன்வைப்பதாக அமையலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# கருப்பைக் கழுத்துப் புற்றுநோய்

மருத்துவர் கோ.றஜீவ்

## தடுத்தல் அல்லது வருமுன் காத்தல்

*(நேற்றைய தொடர்ச்சி)*

**மூன்றாம் நிலைத்தடுப்பு ( கருப்பைக் கழுத்துப்புற்று நோயின் படி நிலைகளுக்குச்சிகிச்சையளித்தல்.)**

கருப்பைக்கழுத்துப்புற்று நோய் ஏற்கெனவே அதன் குணங்குறிகளை வெளிக்காட்டிய நிலையில் அல்லது வேறு உடற்பாகங்களுக்குப் பரவிய நிலையில் இனங்காணப்பட்டால் மேலதிக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய சிகிச்சை அளிக்கப்படும். நோயினால் ஏற்படக்கூடிய எல்லா பாதிப்புகளுக்கும் சிகிச்சை வழங்கப்பட்டாலும், இவர்களில் பெரும்பாலானோர் மிகக் குறுகிய காலத்தினுள் உயிரிழந்துவிடுகின்றனர்.

பல குடும்பங்கள் மனைவியை அல்லது தாயை இழக்கும் நிலை ஏற்படுகிறது. இவர்களுக்கான பரிசோதனைகள், அறுவைச் சிகிச்சை, கதிரியக்கசிகிச்சை, மருந்துகள் மற்றும் தொடர்ச்சியான சிகிச்சைகளுக்காக மிகப்பெருந்தொகையான பணம் சுகாதாரத்துறையினால் செலவிடப்படுகிறது. இத்தனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் இவர்களில் மிகப்பெரும்பாலானவர்கள் நோயின் பாதிப்பினால் உயிரிழந்து போதல் என்பது மிகவும் துன்பகரமானதாகும். இந்த வகை உயிரிழப்புகள் எச்.பி.வி (HPV ) தடுப்பு மருந்து வழங்கல் மூலம் தவிர்க்கப்படக்கூடியவையாகும்.


**இரண்டாம்நிலைத்தடுப்பு**
**(கருப்பைக் கழுத்துப் புற்றுநோய்க்கு முன்னான நிலைகளைப் பரிசோதனைகள் மூலம் இனங்கண்டு சிகிச்சை வழங்கல்)**

நீடித்த எச்.பி.வி (HPV) வைரஸ் தொற்றானது கருப்பைக்கழுத்து. யோனி வழி போன்றவற்றிலிருந்து பஞ்சினால் சுரண்டி எடுக்கப்படும் கலமாதிரிகளில் தொடர்ச்சியான எச்.பி.வி (HPV)மரபணுப் பரிசோதனைகளை நடத்துவதன் மூலம் இனங்கண்டுகொள்ளலாம். மேற்படி கலமாதிரிகளை நுணுக்குக்காட்டியில் ஏற்றி அவற்றில் வைரஸ் ஏற்படுத்தியுள்ள மாற்றங்களை உறுதிப்படுத்துவதன் மூலமும் இதனை இனங்காணலாம். இப்பரிசோதனை "பப் (pap) பரிசோதனை" (Papanicolaou test / Pap smear test) எனப்படும்.


இந்தவிரு முறைகளையுமே புற்றுநோயை அதன் ஆரம்ப நிலைகளில் இனங்காண்பதற்காக பெரும்பாலான நாடுகள் வழக்கத்தில் கொண்டுள்ளன. மேற்படி பரிசோதனைக்கான வளங்கள் குறைந்த சந்தர்ப்பங்களில் அசெற்றிக் அமிலத்தை அல்லது லூகோல் அயடீன் எனும் திரவத்தை கருப்பைக்கழுத்தில் பிரயோகித்து அதில் ஏற்படும் நிறமாற்றத்தை வெற்றுக்கண்களால் அவதானிப்பதன் மூலமும் வைரஸ் தொற்றினை இனங்காணலாம்.

" பப் (Pap) பரிசோதனை" கருப்பைக்கழுத்துப்புற்று நோயை அதன் ஆரம்ப நிலைகளிலே இனங்கண்டு சிகிச்சையளிப்ப தற்காகப் பயன்படுத்தப்படுகின்ற வினைத்திறன் வாய்ந்த பரிசோதனையாகும். பெரும்பாலான நாடுகளில் வழக்கமான புற்று நோய்த்தடுப்பு நிகழ்ச்சித்திட் டத்தில் இது உள்ளடக்கப்பட்டுள்ளது. 21 தொடக்கம் 65 வயது வரையான பெண்கள் 3 தொடக்கம் 5 வருடங்களுக்கொரு முறை இந்தப் பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும் எனப்பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் இப்பரிசோதனை முறையானது கடந்த இரண்டு தசாப்தங்களாக நடைமுறையில் உள்ளது. சுகாதாரவைத்திய அதிகாரிகளால் நடத்தப்படும் சுகவனிதையர் சிகிச்சை நிலையத்தில் (WELL WOMEN CLINIC) 35 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய அனைத்துப் பெண்களுக்கும் மேற்படி பரிசோதனைச் சேவை இலவசமாக வழங்கப்படுகிறது. எனினும் பல்வேறு காரணங்களால் தற்போதும் இலங்கையில் பெரும் எண்ணிக்கையான பெண்கள் கருப்பைக் கழுத்துப்புற்று நோயின் பாதிப்புகள் அதிகமாகிய நிலையிலேயே இனங்காணப்படுகிறார்கள்.



> தடுப்பு மருந்தேற்றலின் பாதுகாப்புத்தன்மை தொடர்பான உலகளாவிய ஆலோசனைக் குழுவானது உலகநாடுகளின் தடுப்பு மருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டங்களை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகிறது.




**முதலாம்நிலைத்தடுப்பு**
**(தடுப்புமருந்தேற்றலினால் எச்.பி.வி. (HPV வைரஸின் மரபு சார் வடிவங்கள் 16, 18 என்பன உடலினுள்புகுவதையும்,நிலைத்திருப்பதையும்தடுப்பதன் மூலம் கருப்பைக்கழுத்துப் புற்று நோயைத்தடுத்தல்.)**

உலகளாவியரீதியில் பல்வேறு நாடுகளில் எச்.பி.வி (HPV) வைரஸ் தொற்றினால் ஏற்படும் கருப்பைக் கழுத்துப்புற்று நோயைத் தடுப்பதற்காக இரண்டு வகையான வருமுன் காக்கும் தடுப்பு மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன.

அவற்றுள் ஒன்று எச்.பி.வி (HPV)வைரசின் மரபுசார் வடிவங்கள் 6,11,16,18 என்பவற்றை உள்ளடக்கிய நால் வலுத் தடுப்பூசி. மற்றையது எச்.பி.வி (HPV) வைரசின் மரபுசார் வடிவங்கள் 16, 18 என்பவற்றை உள்ளடக்கிய இரு வலுத் தடுப்பூசி என்றும் கூறப்படுகிறது. நால் வலுத்தடுப்பூசி கடந்த 2006 ஆம் ஆண்டிலும்,இரு வலுத்தடுப்பூசி கடந்த 2007ஆம் ஆண்டிலும் அனுமதி வழங்கப்பட்டு பாவனைக்கு வந்தன. இவை எச்.பி.வி (HPV) வைரஸ் உடலினுள் உட்புகுவதற்கு முன்னர் வழங்கப்பட வேண்டும் என்பதே இலக்காகும்.

2014 ஆம் ஆண்டளவில் உலகிலுள்ள 58 நாடுகள் (30 வீதம்) தமது தேசிய தடுப்புமருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டத்தில் பெண்பிள்ளைகளுக்கான எச்.பி.வி (HPV) தடுப்பூசியை அறிமுகப்படுத்தியிருந்தன. கடந்த மூன்று வருடங்களில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் அடங்கலான மேலும் பல நாடுகள் இந்தத் தடுப்பூசியை அறிமுகம் செய்துள்ளன.

இலங்கை அமைந்துள்ள தென்கிழக்கு ஆசிய வலயத்தில் பூட்டான், பங்களாதேஷ், நேபாளம் மற்றும் இந்தியா (சில மாநிலங்கள்) ஆகிய நாடுகள் முன்பிருந்தே இத்தடுப்பூசியைப் பயன்படுத்துகின்றன. தாய்லாந்து, மியன்மார் ஆகிய நாடுகள் விரைவில் இந்தத் தடுப்பூசியை அறிமுகம் செய்ய உள்ளன.

இலங்கையின் சுகாதார அமைச்சின் கீழுள்ள நோய்த்தொற்றியல் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படும் தேசியதடுப்புமருந்தேற்றல் திட்டத்தின் கீழ் கடந்த மாதம் கருப்பைக்கழுத்துப்புற்று நோயைத்தடுப்பதற்கான நால்வலுவுள்ள எச்.பி.வி (HPV) தடுப்பூசி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது கருப்பைக்கழுத்துப்புற்று நோயை ஏற்படுத்தும் எச்.பி.வி (HPV) வைரஸ் மரபுசார் வடிவங்களான 16, 18 என்பவற்றைத் தடுப்பதன் மூலம் கருப்பைக்கழுத்துப்புற்று நோயைத் தடுக்கின்றது. அத்துடன் மரபுசார் வடிவங்கள் 6,11 என்பவற்றை எதிர்ப்பதன் மூலம் இனப்பெருக்க உறுப்புகளில் ஏற்படும் புற்றுநோயல்லாத உண்ணிகளையும் தடுக்கிறது என்பது மேலதிக நன்மையாகும்.

தடுப்பு மருந்தேற்றலின் பாதுகாப்புத்தன்மை தொடர்பான உலகளாவிய ஆலோசனைக் குழுவானது உலகநாடுகளின் தடுப்புமருந்தேற்றல்நிகழ்ச்சித்திட்டங்களை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகிறது. மேலும் எச்.பி.வி (HPV) தடுப்பூசியின் பாதுகாப்புத்தன்மை தொடர்பான பல்வேறு நாடுகளின் தரவுகளைத் துல்லியமாக ஆராய்ந்து இத்தடுப்பூசி மிகவும் பாதுகாப்பானதொன்று என 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியிட்ட அறிக்கையொன்றில் உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கையில் தனியார் மருத்து வமனைகளில் இந்தத் தடுப்பூசி கடந்த 2010 ஆம் ஆண்டிலிருந்து பாவனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும் கருப்பைக்கழுத்துப் புற்று நோயைத் தடுப்பதற்கான எச்.பி.வி (HPV)நால் வலுத்தடுப்பூசியானது நடப்பாண்டிலிருந்து அனைத்து பெண்சிறார்களுக்கும் இலவசமாக கிடைக்கிறது.அதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**எச்.பி.வி (HPV) தடுப்பூசியும் பயனுறுதியும்**

- தேசிய தடுப்பு மருந்தேற்றல் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் இருந்து கருப்பைக் கழுத்துப்புற்று நோயைத் தடுப்பதற்கான எச்.பி.வி (HPV) தடுப்பூசி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- இவை பாடசாலை அடிப்படையிலான தடுப்புமருந்தேற்றல் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.
- 10 வயது பூர்த்தியடைந்த தரம் 6 இல் கல்வி பயில்கின்ற எல்லாப் பெண்பிள்ளைகளுக்கும் இத்தடுப்பூசி வழங்கப்படும்.
- எச்.பி.வி (HPV) மரபுசார் வடிவங்கள் 16, 18 என்பவற்றால் ஏற்படும் கருப்பைக்கழுத்துப்புற்று நோயைத்தடுப்பதற்கு இந்தத்தடுப்பூசியானது 2 தடவைகள் வழங்கப்பட வேண்டும்.
- இரு தடவைகளுக்குமான ஆகக் குறைந்த இடைவெளி 6 மாதங்களாக இருத்தல் அவசியம்.
- இதனைப்பாடசாலையில் பெறத்தவறும் பட்சத்தில் குறித்த பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியின் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.
- இந்தத் தடுப்பூசி பாடசாலையில் வழமையாக வழங்கப்படும் ஏ.ரி.டி (atd) தடுப்பூசியுடன் சேர்த்து வழங்கப்படக் கூடியது.
- எச்.பி.வி (HPV) தடுப்பூசிபாதுகாப்பானது ஊசி ஏற்றப்படும போது அவ்விடத்தில் வலி, தோலில் மெல்லிய சிவப்புத்தன்மை போன்ற மிகச்சிறிய பக்கவிளைவுகள் ஏற்படலாம். பாரதூரமான பக்கவிளைவுகளுக்கான வாய்ப்பு மிக மிகக் குறைவாகும். எனினும் சுகாதாரத்துறையினர் இதற்கான சகல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்வதுடன் உடனடியாக சிகிச்சை வழங்கவும் ஆயத்தமாக இருப்பர்.
- கருப்பைக்கழுத்துப்புற்று நோய் தடுக்கப்படக்கூடியது. மிகவும் பாதுகாப்பான, வினைத்திறனான எச்.பி.வி (HPV) தடுப்பூசி 70 வீதமான ஆன கருப்பைக் கழுத்துப்புற்று நோய்களைத் தடுக்கக் கூடியது. இந்தத்தடுப்பூசி தரம் ஆறிலுள்ள சிறுமிகளுக்கு வழங்கப்படும். அவர்கள் 35 வயதிலிருந்து " பப் (Pap) பரிசோதனை " இனை மேற்கொள்ளுதல் வேண்டும்.

*கட்டுரையாளர்:பிராந்திய தொற்றுநோய் தடுப்பு மருத்துவ அதிகாரி, யாழ்ப்பாணம்.*



# ஓகஸ்ட் மாத பலன்

கிடைத்த வாய்ப்பைத் தவறவிடாமல் சாதகமாக பயன்படுத்திக் கொள்ளும் திறமை உடைய மிதுன ராசியினரே இந்த மாதம் வழக்கு சம்பந்த மான விடயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். பயணங்கள் செல்ல நேரிடலாம். மனத் திருப்தியுடன் செயலாற்றுவீர்கள். புத்திசாதூரியம் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கை நிறைவேற்று வதன் மூலம் மற்றவர்களிடம் மதிப்புக் கூடும் பாராட்டு கிடைக்கும். உடல்சோர்வு உண்டாகும். எனினும் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள்.
தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண புதிய திட் டங்களைத் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்ப வர்கள் உற்சாகமாக செயற்பட்டு வேலைகளை உடனுக்குடன் செய்து முடிப்பார்கள். புதிய பதவி அல்லது பொறுப்புக்கள் கிடைக்கும்.
கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக் கும். குடும்பத்துடன் விருந்து. கேளிக்கை நிகழ்ச்சி களில் கலந்து கொள்ளும் சூழ்நிலை உருவாகும். குழந்தைகள் உற்சாகமாக காணப்படுவார்கள்.
பெண்கள் மனத் திருப்தியுடன் காரியங்களைச் செய்து சாதகமான பலன் பெறுவீர்கள். பயணம் செல்ல நேரலாம்.

**அரசியல்வாதிகள்:** கட்சித் தலைமையின் நம்பிக் கையைப் பெறுவார்கள். உங்கள் செயல்பாடுகளை மேலிடம் உற்று நோக்கும். கட்சியில் உங்களைப் பற்றிய சலசலப்பு நீங்கும். தொண்டர்கள் உங்கள் சொற்படி நடந்து உங்கள் மனதில் இடம்பிடிப்பார்கள்.

**கலைத்துறையினருக்கு:** எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். வருமானம் உயர வழி பிறக்கும். விமர்சனக்களையும் தாண்டி முன்னேறு வார்கள். வேலைப்பளு காரணமாக வெளியில் தங்க நேரலாம்.

**மாணவர்கள்:** பாடங்களைக் கவனமாகப் படித்து கூடுதல் மதிப்பெண் பெறுவீர்கள். பொறுப்புகள் அதிகரிக்கும்.

**மிருகசீரிடம் 3, 4 பாதங்கள்:** இந்த மாதம் தொழில், வியாபாரத்தை மாற்றலாமா என்ற எண் ணம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்க ளுக்கு இடமாற்றம் பதவி உயர்வு கிடைக்க பெறுவார் கள். தொழில், வியாபாரத்தில் வரவேண்டிய பாக்கி கள் வசூலாகும். வாகனங்கள் மூலம் இலாபம் கிடைக்கும். சரக்குகளை வெளியூர்களுக்கு அனுப் பும் போது கவனம் தேவை.

**திருவாதிரை:** இந்த மாதம் குடும்ப உறுப்பினர்களுக்கு துணி போன்றவைகளை வாங்குவீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை குறையும். உங்களை பற்றி யாராவது வீண் அவதூறு பேசி னால் கண்டுகொள்ளாமல் ஒதுங்கி விடுவது நல்லது. விருந்து, கேளிக்கை நிகழ்ச்சி களில் கலந்து கொண்டு ருசி யான உணவை உண்பீர்கள்.

## மிதுனம்

மிருகசீரிடம்
3, 4 பாதங்கள்
திருவாதிரை,
புனர்பூசம்
1, 2, 3 பாதம்

**புனர்பூசம் 1, 2, 3 பாதம்:** இந்த மாதம் எந்த ஒரு வேலையையும் மனதிருப்தியுடன் செய்வீர்கள். சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி உண்டாகும். பணவரத்து கூடும். கடுமையான முயற்சிகள் மேற்கொள்வது குறையும். வீண் வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவு உண்டாகும்.

**பரிகாரம்:** பெருமாளை புதன்கிழமைகளில் அர்ச் சனை செய்து வணங்க திருமண தடை நீங்கும். குடும்பத்தில் சுபிட்சம் உண்டாகும்.

# வரலாற்றில் இன்றைய தினம் 08.08.2017



2010-சீனாவின் ஹன்சுவில் மண்சரிவு காரணமாக ஆயி ரத்து 400 பேர்வரை உயிரிழந்தனர்.

1220-லிஹுலா போரில் எஸ்தோனிய பழங்குடி மக்க ளால் சுவீடன் படைகள் தோற்கடிக்கப்பட்டன.

1908-பிரான்ஸ் லீமன்ஸ் குதிரைப் பந்தயத் திடலில் வில்பர் சகோதரர்களால் முதலாவது வானூர் திப் பறப்பு மேற்கொள்ளப்பட்டது.

1946-உலகின் முதலாவது அணு ஆயுத விநியோக வாகனமாக 'கொன்வையர் பி.36' வானூர்தி யின் முதலாவது பறப்பு இடம்பெற்றது.

1973-பின்னாளில் தென்கொரிய அரச தலைவராகிய கிம்டா யங் ஜப்பானில் கடத்தப்பட்டார்.

1990-குவைத்தை ஆக்கிரமித்த ஈராக் அதனைத் தனது நாட்டுடன் இணைத்துக் கொண்டது. இதுவே வளைகுடாப் போர் ஏற்படக் காரணமா னது.

1991-ஒரு காலத்தில் மிக உயரமான கட்டுமானமாக அமைந்திருந்த வோர்சோ வானொலிக் கோபு ரம் சரிந்து வீழ்ந்தது.

2000-136 ஆண்டுகளாக அமிழ்ந்திருந்த கடற்ப டுக்கை நிலையிலிருந்து 30 ஆண்டுகளுக்கு முன் கண்டு பிடிக்கப்பட்ட எச். எல். ஹண்லி, நீர்மூழ்கிக்கப்பல் கடலின் மேற்பரப்புக்கு கொண்டு வரப்பட்டது.

2006-ஈ.பி.டி.பி. பிரமுகரின் காரில் குண்டு வெடிப்பு. சிறுவன் உட்பட இரண்டு பேர் உயிரி ழப்பு. கொழும்பில் நண்பகல் வேளை அதிர்ச்சிச் சம்பவம்.

2006-கொழும்புத்துறையில் இரவுவேளை வர்த்தகர் சுட்டுக் கொலை.

2006-தமிழ் ஊடகவியலாளர் களைப் பாதுகாப்பதில் அரசுக்கு மாற்றாந்தாய் மனப்பான்மை என நாடாளுமன்றில் மகேஸ்வ ரன் எம்.பி. சாடல்.

2010-சீனாவின் ஹன்சுவில் மண்சரிவு காரணமாக ஆயி ரத்து 400 பேர்வரை உயிரிழந் தனர்.

2013-பாகிஸ்தான் கெற்றாவில் சாவு ஊர்வலம் ஒன் றின் போது மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 31 பேர் உயிரிழந்தனர்.

## நாளை

**09.08.2017**
புதன்கிழமை

**ஆடி - 24**

திதி: துதியை பி.இ. 12.54 வரை
நட்சத்திரம்: சதயம் முழுவதும்
சுபநேரம்: 04.34–06.04 வரை
ராகுகாலம்: 12.04–01.34 வரை

# பத்தி எழுத்து

## கூட்டமைப்புக்கு இதுவொரு சோதனைக் காலம்

வடக்கு மாகாண சபையின் அமைச்சுப் பதவிகளை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தூக்கி எறிந்து விட்டதாக ஊடகங்க ளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் தமிழ் அரசுக்கட்சியைப் பழிவாங்கும் வகை யில் நடந்து கொள்வதால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிய வருகின்றது. இதனால் புதிய அமைச்சர்களை நியமிக்கும் போது எந்தப் பதவியையும் பெறுவதில்லை யெனவும் தற்போது கட்சியின் சார்பில் சுகாதார அமைச்சர் பொறுப்பை வகிக்கும் ப.சத்தியலிங்கம் பதவியிலிருந்து விலகு வார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தற்போது புதிய அமைச்சர்களை நியமனம் செய்வது தொடர்பான நடவடிக்கைகளில் முதலமைச்சர் ஈடுபட்டுள்ளார். இதில் தமக்கு ஆதரவு தெரிவித்து வருபவர்க ளுக்கே அவர் அமைச்சர் பதவிகளை வழங் குவார் எனவும் அறிய முடிகின்றது. இந்த நிலையில் தமிழ் அரசுக்கட்சி அமைச்சர் பதவிகளைத் தூக்கி எறிந்ததில் ஆச்சரியப் படுவதற்கு எதுவுமேயில்லை.
வடக்கு மாகாண சபையில் கூட்டமைப்பின் ஆட்சி இடம்பெற்று வருகின்றது. கூட்ட மைப்பின் மிகப்பெரிய பங்காளியாக இலங் கைத் தமிழ் அரசுக் கட்சியே காணப்படுகின் றது. மாகாணசபை உறுப்பினர்களும் அந் தக் கட்சிக்கே அதிகளவில் உள்ளனர். இந்த நிலையில் அந்தக் கட்சி அமைச்சரவையில் அங்கம் வகிக்காமை மாகாண சபையின் நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிப்ப தாகவே அமையப்போகின்றது.
இதேவேளை கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு இடையே இடம்பெற்ற கூட்டத்தில் தமிழ் அரசுக்கட் சித் தலைவர் மாவை.சேனாதிராசாவுக்கும், ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கும் இடையே கடும் வாக் குவாதம் இடம்பெற்றுள்ளது. சுரேஷ் பிரே மச்சந்திரன் கூட்டமைப்பின் தலைவரை யும், தமிழ் அரசுக் கட்சியையும் கடுமையாக விமர்சிப்பதையே வழமையாகக் கொண்ட வர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.
தற்போதைய அரசியல் சூழ்நிலைகளைக் கவனித்துப் பார்க்கும்போது கூட்டமைப்பு நீடிக்குமா? என்ற சந்தேகம் எழுகின்றது. வடக்கு மாகாண சபையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் கூட்டமைப்பின் ஒற்றுமை யையும் பாதித்துள்ளது.
உள்ளூராட்சித் தேர்தல்கள் விரைவில் இடம்பெறவுள்ள நிலையில் கூட்டமைப்பில் பிளவுகள் நீடிப்பது நல்லதல்ல. மக்களும் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எனவே கூட்டமைப்பு ஒற்றுமையாக இயங்க வேண்டும் அல்லது பிரிந்துவிட வேண் டும். பிரிந்து சென்று தேர்தல்களில் போட் டியிடும் போதுதான் ஒவ்வொரு கட்சிக்கும் தமது பலம் தெரிய வரும். இதன் பின்னர் பதிய ஞானமும் பிறக்கும்.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். நண்பரால் உதவி உண்டு. தொழில், வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**இடபம்:** குழப்பத்தால் பணியில் தாமதம் உண்டாகலாம். நண்பரின் ஆலோசனை நன்மைக்கு வழி வகுக்கும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும்.

**மிதுனம்:** பிறருக்காக எவ்வித பொறுப்பும் ஏற்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் சிரமங்களை திறம்படச் சமாளிப்பீர்கள். இலாபம் சுமாராக இருக்கும்.

**கடகம்:** அவமதித்து பேசியவரும் அன்பு பாராட்டுவர். மனதில் புத்துணர்வு மேலோங்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் உயரும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும்.

**சிங்கம்:** விலகிய உறவினரும் விரும்பி நெருங்குவர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு நிறைவேறும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர்.

**கன்னி:** நிதானித்து செயற்பட்டால் நற்பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வர்.

**துலாம்:** பேச்சு, செயலில் நிதானம் பின்பற்றவும். தொழில், வியாபாரத்தில் உள்ள சிரமத்தை மற்றவரிடம் விவாதிக்க வேண்டாம். பணியாளர்கள் பணிச்சுமையால் அவதிப்படுவர்.

**விருச்சிகம்:** இனிய அணுகுமுறையால் நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட வருமானம் உயரும். பெண்கள் விருந்து, விழாவில் பங்கேற்பர்.

**தனுசு:** பேச்சில் நிதானம் காப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேற விடாமுயற்சி தேவைப்படும். இலாபம் சுமாராக இருக்கும்.

**மகரம்:** கடந்த கால உழைப்புக்கு பலன் கிடைக்கும். உறவினரால் உதவி உண்டு. தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். வருமானம் பன்மடங்கு உயரும்.

**கும்பம்:** வீண்பேச்சு பேசுபவரிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். இலாபம் சீராக இருக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**மீனம்:** சமூகத்தில் மதிப்பு உயரும். தொழில், வியாபாரத் தொடர்பு பலம் பெறும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்களுக்கு குடும்பத் தேவை தாராள செலவில் நிறைவேறும்.

# ஓவியா விசாரிக்கப்படவேண்டும் வலியுறுத்தி முறைப்பாடு பதிவு




பிக் பாஸ் நிகழ்ச்சியில் தற்கொலைக்கு முயன்ற விடயத்தில் ஓவியா மீது விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்று தெரிவித்து சென்னை பொலிஸ் ஆணையாளரிடத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிக் பாஸ் நிகழ்ச்சியின் மூலம் அதிகப்படியான ரசிகர்களை கட்டிப் போட்டுள்ளார். திரைப்பட நடிகை ஓவியா. கடந்த சனிக்கிழமை மாலை இவர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. குறித்த நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ள சக போட்டியாளர்களால் தனிமைப்படுத்தப்பட்டதே ஓவியா தற்கொலை முயற்சி மேற்கொள்ளக் காரணம் என்று சொல்லப்படுகிறது. இதையடுத்து தனது விருப்பத்தின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் அவர் போட்டியில் இருந்து விலகினார். இதையடுத்து தற்கொலைக்கு முயன்ற குற்றச்சாட்டில் ஓவியா மீது விசாரணை நடத்தப்படவேண்டும் என்று தற்போது முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

'பிக் பாஸ்' நிகழ்ச்சியில் ஹெலன் என்கிற ஓவியா தற்கொலை முயற்சியில் ஈடுபட்டமை குறித்து அவரிடம் விசாரணை நடத்தி சட்டரீதியான நடவடிக்கை எடுக்கவேண்டும். தொலைக்காட்சி டி.ஆர்.பி.இனை உயர்த்துவதற்காக இது போன்று நிகழ்ச்சி நடத்தப்படுகிறதா? என்பது குறித்தும் தொலைக்காட்சி நிறுவனம், நிகழ்ச்சியை தொகுத்து வழங்கும் நடிகர் கமலகாசன் ஆகியோரிடம் விசாரணை நடத்தி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. சட்டத்தரணி ஒருவரே இந்த முறைப்பாட்டை வழங்கியுள்ளார்.



உன்னோட ருத்பேஸ்ட்ல உப்பு இருக்கா....?

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | | 5 | | | | 6 |
| 9 | 2 | | 6 | | | | | 7 |
| 6 | | | 9 | | | | 3 | 1 |
| | | 2 | 8 | | 6 | | | 4 |
| | 9 | | | 1 | | | 6 | |
| 8 | | | | | 3 | 1 | | |
| 4 | 3 | | | | 9 | | 1 | |
| 2 | | | | | 4 | | 7 | 5 |
| | | | | 2 | | 6 | 4 | |


நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 1 | 8 | 9 | 3 | 7 | 2 | 4 |
| 4 | 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 9 | 1 |
| 3 | 7 | 9 | 2 | 4 | 1 | 8 | 5 | 6 |
| 2 | 8 | 3 | 1 | 7 | 6 | 5 | 4 | 9 |
| 1 | 4 | 6 | 9 | 5 | 8 | 2 | 3 | 7 |
| 5 | 9 | 7 | 3 | 2 | 4 | 6 | 1 | 8 |
| 7 | 6 | 5 | 4 | 3 | 9 | 1 | 8 | 2 |
| 9 | 1 | 2 | 5 | 8 | 7 | 4 | 6 | 3 |
| 8 | 3 | 4 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. [உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங் கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக் கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### எதுவும் சில காலம் தான்...

எதிர்பார்ப்பை குறைத்து கொண்டால்,
ஏமாற்றம் ஒன்றும் பெரிதாக தெரியாது.
நம்பு யாரையும் முழுமையாக நம்பாதே,
உன்னை மட்டும் வாழ்வில் நம்பு...
சிந்தனை செய், கோபப்படாதே...
வாழ்வது ஒரே ஒரு வாழ்க்கை, அதை
அர்த்தமுள்ளதாக வாழ்ந்து விட்டு போ...!



சுற்றிலும் கடல், 4 ஆயிரம் ரசிகர்கள்... 11 எதிர் வீரர்கள்... இரண்டு அம்பயர்ஸ், ஒரு தேட் அம்பயர்... ஓடவும் முடியாது ஒளியவும் முடியாது....

# எண்ணப் பறவை சிறகடித்து...



சங்கரும் பூங்கொடியும் உடன் பிறந்தவர்கள் அவர்களின் வீட்டைச் சுற்றிலும் எண்ணற்ற கொய்யா மரங்கள் இருந்தன. பழுத்த கொய்யாப் பழங்களை உண்பதற்காக அந்த மரங்களைத் தேடி தினமும் ஏராளமான பறவைகள் வந்த வண்ணம் இருந்தன. ஒரு நாள் கொண்டைக் குருவியைத் தொட்டுப்பார்க்க விரும்பிய சங்கர் சிறிய வலையை வீசிவிட்டு அதன் மேலே தானியங்களைத் தூவி விட்டான். எதிர்பார்த்த படி வலையில் கொண்டைக் குருவி சிக்கிக் கொண்டது. அந்தக் குருவியை ஆசையுடன் தொட்டுப் பார்த்த அண்ணன் தங்கை இருவரும் குருவியைப் பார்த்து "ஐயோ பாவம்... செல்லக் குருவி. நீ பறந்து போம்மா..." என்று அதனை வானில் பறக்க விட்டனர். உடனே அந்தக் குருவி ஒரு தேவதையாக மாறியது. "உயிர்களிடத்தில் அன்பு கொண்ட குழந்தைகளே! உங்களுக்கு என்ன வேண்டும் கேளுங்கள் தருகிறேன்" என்றது. "பறவைகள் போல் பறந்து செல்ல எங்களுக்கு இறக்கைகள் வேண்டும்" என்றனர் இவருவரும்.

"அன்புப் பிள்ளைகளே, இறக்கை இருந்தால் மட்டும் பறக்க முடியாது; பறப்பதற்கான உடலமைப்பும் வேண்டும்" என்று கூறிய தேவதை அடுத்த நொடியில் அவர்களைப் பறவைகளாக மாற்றியது. பின்னர் பிள்ளைகளைப் பார்த்து "நீங்கள் மீண்டும் மனிதர்களாக மாற விரும்பினால் 'அன்பே வெல்லும்" என மனதாரக் கூறுங்கள். மீண்டும் மனிதர்கள் ஆவீர்கள்" எனக் கூறி மறைந்து போனது. பறவைகளான பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் வானில் சிறகடித்துப் பறந்தனர்.

சற்று நீண்ட தூரம் அவர்கள் சென்ற பின்னர், ஓரிடத்தில் மலைப் பாம்பு ஒன்று வளைந்து நெளிந்து கிடப்பதைக் கண்டு அதனருகே சென்றனர். அப்போது அந்த மலைப்பாம்பு பேச ஆரம்பித்தது. "பறவைகளே! நான் மலைப்பாம்பு அல்ல. இந்தப் பெரிய மலையின் மீது நீண்டு செல்லும் சாலை" என்றது. "அப்படியா" "வாய் பிளந்து வியந்து நின்ற இருவரும், "நாங்களும் பறவைகள் அல்லர். தேவதையின் கருணையால் பறவைகளாய் மாறிய சிறு பிள்ளைகள்" என்றனர்.

"அடடா" என்று ஆச்சரியப்பட்ட சாலை, அவர்கள் மலை உச்சியை அடைய வழிகாட்டியது.

அப்போது அங்கு மலையில் சறுக்கி விளை யாடிக் கொண்டிருந்த நீர் வீழ்ச்சி ஹா.... ஹா.... ஹா... என்று சிரித்துக் கொண்டே ஓடி வந்த அந்தப் பிள்ளைகளை அன்புடன் வரவேற்றது. அவ்வேளையில் நீர் வீழ்ச்சியிலிருந்து வெளியேறிய வெண்ணிறப் புகை (நீர்த்தீ வலைகள்) வானில் மேகமாகத் தவழ்ந்து சென்றது. அந்த மேகத்தை ரசித்துக் கொண்டே இருவரும் ஆனந்தமாய் அந்த நீர் வீழ்ச்சியில் குளித்தனர். பின்னர் ஈரமான தங்கள் சிறகுகளை உயரமான தைல மரத்தின் உச்சியில் அமர்ந்து உலர்த்தினர்.

பின்னர் மாலை வேளையாயிற்று. எல்லாப் பறவைகளும் கூடுகளை நோக்கிப் பறந்துசெல்வதை இருவரும் பார்த்தனர். இப்போது இருவரும் பல இயற்கைக் காட்சிகளையும் கண்டுகளித்த திருப்தியுடன் வீடு செல்ல விரும்பி "அன்பே வெல்லும்" என்று மனதாரக் கூறினர். இப்போது இருவரும் முன்பிருந்தது போல மனித உருவம் எடுத்து தமது வீட்டை அடைந்தனர். பின்னர் பறவைகளாகி தாங்கள் கண்டு ரசித்த காட்சிகளை "இயற்கையைப் பாதுகாப்போம்" என்ற தலைப்பில் படங்களாக வரைந்து ஓவியக் கண்காட்சியாக வைத்தனர். பாராட்டும் பரிசும் பெற்றனர். அதில் கிடைத்த பரிசுத் தொகையைப் படிக்கின்ற ஏழை நண்பர்களுக்குக் கொடுத்து மகிழ்ந்தனர். அந்த அன்பு சகோதரர்களை ஊரே வாழ்த்தியது. அவர்களின் பெற்றோர் உள்ளமும் மகிழ்ந்தது.

# மூதுரை



நேற்றைய தொடர்ச்சி...

3. *நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப்*
*புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல் உலகில்*
*நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு*
*எல்லார்க்கும் பெய்யும் மழை*

பொருள் : நெற் பயிருக்குப் பாய்ச்சுகின்ற தண்ணீர் வாய்க்காலில் ஓடி அந்த வழியில் உள்ள புல் பூண்டு, செடி கொடி முதலான களைகளுக்கும் உணவாகிறது. அதுபோல இவ்வுலகில் நல்லவர் ஒருவர் இருந்தாலும் அவரை வாழ வைக்கப் பெய்யும் மழையானது மற்றவர்களுக்கும் பயன்படுகிறது. (நல்லவர் ஒருவரால் மற்றெல்லோரும் பயன் பெறுவர்)

4. *அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணி*
*கடக்கக் கருதவும் வேண்டா - மடைத் தலையில்*
*ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும்*
*வாடி இருக்குமாம் கொக்கு*

பொருள் : பொருத்தமான காலம் வரும் வரை அமைதியாகக் காத்திருப்பவர் நீர் நிலையில் சிறிய மீன்களைக் கண்டும் அவற்றை இரையாகக் கொள்ளாமல் அமைதியாக இருந்து பெரிய மீன் வந்ததும் உடனே கொத்திப் பிடிக்கும் கொக்கைப் போன்றவர்கள். இவர்கள் அமைதியாக இருப்பதால் அறிவு அற்றவர்கள் என்று எண்ணி விடக் கூடாது. சரியான சமயத்தில் காரியத்தை நிறைவேற்றி விடுவர்.

5. *அற்ற குளத்தில் அறு நீர்ப் பறவை போல்*
*உற்றுழிதீர்வார் உறவு அல்லர் - அக்குளத்தில்*
*கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே*
*ஒட்டி உறுவார் உறவு*

பொருள் : குளத்தில் நீர் வற்றி விட்டால் குளத்தை அண்டி வாழ்ந்த நீர் வாழ் பறவைகள் எல்லாம் அந்தக் குளத்தை விட்டு செல்வது போல் அல்லாமல், நீர்வற்றினாலும் அந்தக் குளத்தில் நிலை கொண்டிருந்த நீர்த் தாவரங்கள் அங்கேயே தங்கி இருப்பது போல ஒருவர் நல்லாயிருந்த வேளை உதவி பெற்றவர்கள் அவர் வறுமைப்படினும் அவரை விட்டுப் பிரியாமல் சேர்ந்திருந்தாலே அவர்கள் உண்மையான உறவினராவர்.

## எமக்குச் சேவை செய்யும் அமைச்சர்கள்

| | | |
|---|---|---|
| மூளை | - | தலைமை அமைச்சர் |
| தண்டு வடம் | - | இணை அமைச்சர் |
| நரம்பு மண்டலம் | - | ஊடகத்துறை அமைச்சர் |
| தலை | - | கல்வி அமைச்சர் |
| தோல் | - | மனித வள மேம்பாட்டு அமைச்சர் |
| எலும்பு | - | பாதுகாப்பு அமைச்சர் |
| கண் | - | அயலுறவுத் துறை அமைச்சர் |
| காது | - | தபால்தொலைத்தொடர்புகள்அமைச்சர் |
| மூக்கு | - | சுகாதாரத் துறை அமைச்சர் |
| பல் | - | கிராமியத் துறை அமைச்சர் |
| இதயம் | - | உள்நாட்டுவிவகாரத்துறைஅமைச்சர் |
| கை | - | தொழிற்றுறை அமைச்சர் |
| வயிறு | - | உணவுத்துறை அமைச்சர் |
| கால் | - | போக்குவரத்துறை அமைச்சர் |



# வானூர்தி

- வானூர்தி மனிதனின் மகாத்தான படைப்பாகும்.
- ஆரம்பத்தில் பறவையைக் கண்ட மனிதன் இறக்கையைத் தன் உடலில் கட்டிக் கொண்டு பறந்து பார்த்தான்.
- பலூன்களைச் செய்து பறக்க விட்டு அவற்றில் தொங்கிப் பறந்து பார்த்தான்.
- பல தொடர்ச்சியான முயற்சிகளின் பின் வானூர்தி ஆக்கினான்.
- றைட் சகோதரர்களின் பெரு முயற்சியால் கிடைத்தது தான் வானூர்தி.
- இன்று நவீன ரக வானூர்திகள் வான வீதியில் உலா வருகின்றன.
- பிரயாணத்தை வானூர்தி இலகு வாக்கி விட்டது.
- ஒரு சில மணித்தியாலங்களில் நினைத்த இடத்தைச் சென்றடையலாம்.
- வானூர்தியில் பயணம் செய்வது ஒரு புதுமையான அனுபவமாகும்.
- வானூர்திக்குள் ஏறிய பின் காதுகளுக்குள் பஞ்சை வைத்துக் கொண்டால் வானூர்தியின் இரைச்சல் கேட்காது.
- முகிலைக் கிழித்துக் கொண்டு வானூர்தி செல்வதும் வானூர்தியிலிருந்து ஜன்னல் ஊடாக தரையைப் பார்ப்பதும் கண் கொள்ளாக் காட்சிகள்.
- நாம் உயரப் பறக்கையில் கீழே மனிதர்கள் எறும்புகள் போலும், தெருக்கள் கரும்பாம்புகள் போலும், ஆறுகள் பளபளப்புடனும் தென்னை, பனை மரங்கள் பசுமையாகப் பரந்து நட்சத்திர வடிவில் தெரிவது மிகவும் ரசிப்புக்குரியவை.
- நீலக் கடல் எமக்குக் கீழே நீண்டு பரந்து கிடக்கும். விஞ்ஞானத்தின் விந்தையே விந்தை.

# ஒழுக்கம்




பெற்றவர் இடத்தில் மரியாதை
பெரியவர் இடத்தில் மரியாதை
கற்றவர் இடத்தில் மரியாதை
காட்டி நடப்பது ஒழுக்கம் என்போம்

நன்மை பயக்கும் சொல்லோடு
நல்லோர் போற்றும் செயலோடு
உண்மை பேசும் துணிவோடு
உலகில் வாழ்வது ஒழுக்கம் என்போம்

மாறும் சுற்றுச் சூழலையே
மாசுகள் செய்து கெடுக்காமல்
போற்றும் பொதுச் சொத்து அழிக்காமல்
பேணிக் காப்பது ஒழுக்கம் என்போம்

உதவிக் கரங்கள் நீட்டிடவும்
ஊரார் உன்னைப் போற்றிடவும்
பதவி பெருமை காத்திடவும்
பக்குவப்படுத்தும் ஒழுக்கம் என்போம்



புள்ளிகளை இணைத்து உருவத்தை பூர்த்தி செய்வோம்

# தலையில் அரிப்பா? குணப்படுத்த இலகுவான வழிகள்

ஒரு கைப்பிடியளவு வெந்தயத்தை முதல் நாள் இரவு தண்ணீரில் ஊற வைத்திடுங்கள். மறு நாள் காலை அதைத் தலையில் தேய்த்து குளியுங்கள். தலையில் அலர்ஜி, கிருமித் தொற்று ஏதேனும் இருந்தால் இது தீர்த்திடும். வறட்சி ஏற்படாமல் தவிர்த்திடும். அத்தோடு பொடுகையும் வராமல் தடுக்கும்.

வேப்பமிலையில் இயற்கையாகவே ஆன்ட்டி பக்டீரியாக்கள் இருக்கின்றன. அவை நோய்த் தொற்று வராமல் தடுத்திடும். வேப்பிலையோடு சிறிது தண்ணீர் சேர்த்து பேஸ்ட்டாக அரைத்துக் கொள்ளுங்கள் பின்னர் அதனை தலையில் தேய்த்து காய்ந்ததும் அதிக கெமிக்கல் சேராத ஷாம்பு கொண்டு தலையைக் கழுவிடுங்கள். தலையில் ஏதேனும் அலர்ஜி இருந்தாலோ அல்லது அதிகப்படியான வறட்சி இருந்தாலோ இதனைப் பயன்படுத்தலாம்.

சிறிது நல்லெண்ணெயுடன் துளசியை போட்டு சூடேற்றுங்கள். நன்றாக சூடானதும் அதில் சிறிது வெந்தையத்தை தூவுங்கள். பின்னர் அதனை ஆற வைத்து தலையில் தேய்த்து 30 நிமிடங்கள் ஊறிய பின்னர் தலைக்கு குளிக்கலாம்.

பெரும்பாலானோர் தலைக்கு தேங்காய் எண்ணெய் பயன்படுத்துவார்கள் வெறும் தேங்காய் எண்ணெயை தலைக்கு தேய்ப்பதை விட லேசாக சூடேற்றி வெதுவெதுப்பாக தலைக்கு தேய்த்து குளிக்கலாம். தேங்காய் எண்ணெய் தலைக்கு தேய்க்கும் முன்னர் உங்கள் தலையில் அதிக வியர்வை இருக்கிறதா என்று பாருங்கள். அதிக வியர்வை இருந்தால் தேங்காய் எண்ணெயைத் தவிர்த்திடுங்கள்.

அதிகமாக அரிப்பு இருந்தால் இதனைப் பயன்படுத்துங்கள். இது வறட்சி வராமல் தடுப்பதுடன் பி.எச். அளவை சமனாக வைத்திருக்கும். தலையில் இருக்கும் தேவையற்ற பக்டீரியாக்களையும் அழித்திடும். இதை பயன்படுத்துவதற்கு முன்னர் தலையைச் சுத்தமாக கழுவிக் கொள்ளுங்கள் பின்னர் ஆப்பிள் சீடர் வினிகர் மற்றும் தண்ணீர் இரண்டையும் சம அளவு கலந்து கொள்ளுங்கள். அதனைதலைக்கு எல்லா புறமும் வருமாறு தேய்த்து அரை மணி நேரம் ஊறிய பின்னர் தலைக்கு குளியுங்கள்.

அதிகப்படியான தண்ணீர் மற்றும் களைகோ புரோட்டீன்ஸ் நிரம்பியிருக்கும் இது, எமது சருமத்திற்கு மட்டுமல்ல தலைக்கும் மிகவும் நல்லது. கற்றாழை ஜெல் எடுத்து தலையில் தடவி 10 நிமிடம் ஊறிய பின்னர் கழுவி விடலாம். உங்களுக்கு நல்ல பலன் கிடைக்கும் வரை தினமும் இதனைச் செய்யலாம்.

இதில் சுத்தப்படுத்தும் பொருள்கள் அதிகப்படியாக உள்ளன. தலையில் வறட்சி ஏற்பட காரணமான சீபம் சுரக்காமல் தடுத்திடும். இதை அப்படியே தேய்த்திடலாம். அல்லது லெமன் ஜூஸுடன் தயிர் கலந்து தலையில் தேய்த்திடுங்கள் 15 நிமிடங்கள் ஊறிய பின்னர் தலையை அலசிடுங்கள். வாரம் இருமுறை இதனைச் செய்யலாம்.

## ஆலயத்திற்கு முகாமையாளர் தேவை

வவுனியா,ஓமந்தைகண்ணகிஅம்மன்பொற்கோவிலில் முகாமையாளராக பணியாற்று வதற்கு 50 வயதிற்கு மேற்பட்ட ஆண் ஒருவர் உடன் தேவை. அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொடர்பு - 077 404 8920**

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1387
சீட்டிழுப்பு திகதி 2017.08.07

வெற்றி இலக்கங்கள்: 12 31 41 65 B — 13 30 48 53

அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்: ரூ. 16,453,972/-

## SUPER BALL

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 686
சீட்டிழுப்பு திகதி 07.08.2017 திங்கட்கிழமை

L 26 42 49 72

சுப்பர் ஜக்பொட் ரூ. 55, 097, 228/=
வெல்லப்படவில்லை

03 07 59 61

பச்சை நிற டிக்கட்டுகள் 2017.08.10 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம் 2913 திகதி 07.08.2017

| வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து | | | | | போனஸ் இல. | புதன் கிழமை ஜக்பொட் |
|---|---|---|---|---|---|---|
| 10 | 28 | 37 | 66 | U | 62 | 35, 388, 295/- |

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்: 09 26 30 42

ஊதா நிற டிக்கட்டுக்கள் 2017.08.09 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

## மரண அறிவித்தல்



பிறப்பு 18 . 11 . 1951 — இறப்பு 06 . 08 . 2017

# புஸ்பவதி சின்னத்துரை

புகையிரத நிலைய வீதி, சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பவதி சின்னத்துரை 06.08.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார்சின்னத்துரையின்அன்புமனைவியும்காலஞ்சென்றவர்களான கைலாயர் முத்துப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும் செல்லம்மா, இரத்தினம், பொன்னுத்துரை, இராசரத்தினம் பத்மாவதி காலஞ்சென்ற குணரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் வன்னியசிங்கம், காலஞ்சென்ற இராசா, இராசலட்சுமி , துரைராசா, தனபாலசிங்கம் (டென்மார்க்), காலஞ்சென்ற திலகவதி, இந்திராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் காந்தரூபன் (லண்டன்), நிரஜா, காலஞ்சென்ற பத்மரூபன் ஆகியோரின் அன்புத் தாயாரும் மதியழகன், துஷ்சிக்கா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் மாதுளா, கயூரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.08.2017) புதன் கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**புகையிரத நிலைய வீதி,**
**சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**0212240013**

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலியும் 75 ஆவது பிறந்தநாள் நினைவும்



மலர்வு 01 . 07 . 1942 — உதிர்வு 11 . 08 . 2014

### திருமதி தவமணி தம்பிராசா

திதி: ஆடித்திங்கள் அபரபட்ச பிரதமை

ஆண்டுகள் மூன்றானாலும் அன்னையே
உம் அன்பின் அரவணைப்பு என்றும்
எம் மனதை விட்டகலாது
எமது ஈரவிழி நீரால் உம்பாதமலர் இறைஞ்சுகின்றோம்
எத்தனை ஆண்டானாலும் உமது நிழல்
எம்மனத்தே என்றும் அகலாது


ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**மஞ்சத்தடி,**
**இணுவில்.**

**குடும்பத்தினர்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

### முத்துக்குமார் செல்வரத்தினம் (பண்டா)



பிறப்பு 25.03.1943

இறப்பு 09.07.2017

அன்புள்ள அப்பாவே!
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்தது
எங்களால் ஏற்கமுடியவில்லை
இருந்தாலும் ஏற்கத்தான் வேணுமப்பா!
உடல் பிரிந்தாலும் உயிர் எம்முடன்
என்றும் வாழ்ந்து கொண்டே இருக்கும்
எங்கள் உயிர் உள்ளவரை என்றும் நிலைத்திருக்கும்


எமது அன்புத் தெய்வத்தின் மரணச்சடங்கில் பங்குபற்றி உதவிகள் புரிந்தவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (08.08.2017) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**அரியாலை,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### இரட்ணசிங்கம் ரகு



பிறப்பு 27.05.1971 — இறப்பு 04.08.2017

சின்னப்பா வீதி, நவாலி கிழக்கு மானிப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட இரட்ணசிங்கம் ரகு (04.08.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரட்ணசிங்கம் - புஸ்பகாந்தி தம்பதியரின் அன்புமகனும் கலாவின் அன்புக்கணவரும் றெஜீனா, ரேகா, ரேணுகா, ரகுவரன், லட்சுமி ஆகியோரின் பாசமிகு தந்தையும் நீகன் அவர்களின் பாசமிகு மாமனாரும் பிரகதி, நிகணன் ஆகியோரின் பாசமிகுபேரனும் ரஜனி, ரஞ்சித், ரவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயராஜசிங்கத்தின் பாசமிகு அத்தானும் இராஜேஸ்வரியின் மருமகனும் ரகுணா, கிருஷ்ணா, பவிதா, வளர்மதி, தீபா, லீபன் ஆகியோரின் பாசமிகு அத்தானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.08.2017) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கரையாம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நவாலி கிழக்கு, மானிப்பாய்.**
**(சின்னப்பா வீதி)**

தகவல் :
**குடும்பத்தினர்.**
**077 935 9147, 077 617 5447**

# காளான்

## இதயம் காக்கும் நட்பான பண்பாளன்

அதிகம் விரும்பி உண்ணப்படும் உணவாக காளான் உள்ளது. இயற்கையாக வளரும் காளான்களில் சில விசமுள்ளதாகவும், சில விசமற்றதாகவும் காணப்படுகின்றன. விசக்காளான்கள் துர்நாற்றம் வீசக்கூடியதாகவும், அதிக வண்ணமுடையதாகவும் இருக்கும். காளான் வளர்ப்பு சிறந்த வருவாய் ஈட்டித் தரும் எளிமையான தொழிலாகவும் அமைந்துள்ளது. இவை சுவையுள்ளதாகவும், அதிக சத்துக்கள் கொண்டதாகவும் இருப்பதோடு அதீத மருத்துவப் பயன்பாட்டையும் கொண்டுள்ளன. காளான் இதயத்தைக் காக்கும் அற்புத உணவாக விளங்குகிறது.



காளான் குருதியில் கலந்துள்ள அதிகபடியான கொழுப்பைக் கரைத்து குருதியைச் சுத்தப்படுத்தும் தன்மை கொண்டது. காளானில் உள்ள லென்ட்டைசன் (LENTYSINE) உயர் குருதி அழுத்தம் மற்றும் குருதி நாளங்களின் உட்பரப்பில் உண்டாகும் கொழுப்பு அடைப்புகளைத் தடுக்கின்றன. எரிட்டிடைனின் (ERITADENIN) என்ற வேதிப்பொருள்கள் குருதியில் கலந்துள்ள 'ட்ரை கிளிசரைடு, பாஸ்போலிட்' போன்றவற்றை அதிகம் குறைக்கிறது. இதில் எரிட்டினைன் கொழுப்புப் பாதிப்பு இல்லாமல் குருதியிலிருந்து வெளியேற்றி பிறதிசுக்களுக்குப் பொருள்களைஅனுப்பி உடலை சமனிலை பெறச் செய்கிறது. இதனால் குருதி சுத்தமாவதுடன் இதயம் பலம் பெறுகிறது.சீராகச் செயற்பட்டு இதயத்தை பாதுகாப்பதில் காளானின் பங்கு அளப்பரியதாகக் காணப்படுகிறது.

பொதுவாக உயர் குருதி அழுத்தம் ஏற்படும் போது உட்புறக் கலங்களில் பொட்டாசியத்தின் அளவு குறைவடையும். வெளிப்புறக் கலங்களில் உள்ள சோடியம் உட்புறமுள்ள பொட்டாசியத்திற்கு சமமாக இருக்கும். குருதி அழுத்தத்தின் போது வெளிப்புறத்தில் சோடியம் அதிகரிப்பதால் சமநிலை மாறுபட்டு இதயத்தின் செயற்பாடு குழப்பமடையும். உடற்புறத்தில் பொட்டாசியத்தின் அளவு குறைகிறது. இத்தகைய செயல்நிலைகளை சீர்ப்படுத்துவதில் காளான் முக்கிய பங்கினை பெற்றுக்கொண்டுள்ளது, பொட்டாசியம் சத்தினை அதிகம் தருகிறது. 100 கிராம் காளானில் பொட்டாசியம் சத்து 44 வீதமும், சோடியம் 9 வீதமும் காணப்படுகிறது. இவை தவிர காளானில் தாமிரச்சத்து உள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. தாமிரச்சத்து மூட்டு வாதத்தை குணப்படுத்துகிறது.பெண்களுக்கு உண்டாகும் கருப்பை நோய்களையும் குணப்படுத்துகிறது. தினமும் காளான் சூப் அருந்துவதால் பெண்களுக்கு உண்டாகும் மார்பகப் புற்று நோய் தடுக்கப்படுவதான தகவல் காளான் பற்றிய அண்மைய ஆய்வில் கண்டுகொள்ளப்பட்டுள்ளது.100 கிராம் காளானில் 35 சதவீதம் புரதச்சத்து உள்ளது.

ENGLISH PERSONAL CLASSES
ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புக்கள்
அனுபவம் மிக்க ஆசிரியரினால் உங்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு - 077 658 9443
யாழ்ப்பாணம்.


காணி விற்பனைக்கு
திருநெல்வேலி, பனிக்கர் ஒழுங்கையில்
பரப்பு 07, குளி 5.067
விற்பனைக்கு உண்டு.
- 077 631 5662, 077 635 9284


வேலையாள்கள் தேவை
S.V.Murugesu (Anchor முகவர்)
Computer Operators தேவை.
வயதெல்லை (20 - 30)
ஆண், பெண் இருபாலாரும்.
காலம் - 11, 12.08.2017
நேரம் - 9.00 - 11.00
நேரில் வரவும்.
தொடர்பு- 154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
077 226 9912, 077 432 3315

# சுவாசமும் நுரையீரலும்

## இணைபிரியாக் கூட்டாளிகள்

உணவும் குடிதண்ணீரும் இல்லாமல் சில மணி நேரங்கள் இருக்கலாம். ஆனால் சுவாசம் இல்லாமல் சில நிமிடங்களுக்குமேல் இருக்கமுடியாது.




ஒரு நிமிடத்துக்கு 16 அல்லது 18 முறைகள் நாம் சுவாசிக்கிறோம். ஒரு முறை சுவாசிப்பதற்குள் எங்களுடைய இதயம் நான்குமுறை துடிக்கிறது. சுவாசிக்கும் செயல் என்பது எங்களுடைய கட்டுப்பாட்டில் இல்லை. சுவாசமும், இதயத்துடிப்பும் அனிச்சைச் செயல்கள் எனப்படும். மூச்சின் இயக்கமும், இதயத்துடிப்பும் ஒரு உயிரில் முதன் முதலாக எவ்வாறு ஆரம்பித்தன என்பது புரியாத புதிர். சுவாசிப்பதில் உள்ள ஒழுங்கையும், இதயத்தின் இயக்கத்தோடு அதற்குள்ள இசைவையும் ஆராயந்தால் மனித மனம் தெளிவடையும்.

காற்றை உள்ளே இழுக்கும்போது நுரையீரல்கள் நன்றாக விரிவடையவேண்டும். நிமிர்ந்து உட்கார்ந்து அல்லது நிமிர்ந்து நின்று சுவாசிப்ப தால் உடலுக்குத்தேவையான ஒட்சிசன் முழுஅளவில் நுரையீரலுக்குள் செல்லும். சுவாசத்தில் ஒட்சிசனின் அளவு குறைந்தால் நீர்க்கோவை, காசநோய் போன்ற நோய்கள் ஏற்படும். நுரையீரலுக்குள் செல்லும் ஒட்சிசன் குருதி ஓட்டத்தில் கலந்துவிடுகிறது. குருதியில் உள்ள காபனீர் ஒக்சைட் நுரையீரல் வழியாக வெளித்தள் ளப்படுகிறது. இந்தக் காபனீர் ஒக்சைட் வாசனை அற்றது. ஆனாலும் மனிதர்கள் வெளிவிடும் மூச்சுக்காற்றில் பெரும்பாலும் சகித்துக்கொள்ள முடியாத வாசனை இருக்கும். இதற்குக்காரணம் மனித உடலில் உள்ள அசுத்தம், சிதைந்த பற்கள், நோயுற்ற தொண்டைச்சதைகள் மற்றும் நோயுற்ற காற்றறைகள் ஆகியவையே. புகையிலைப்புகை மூச்சு உறுப்புகளைப் பாதிக்கிறது. நுரையீரலின் உள் உறையை அதிகம் சுரண்டு கிறது. ஆக,சுவாசத்தை நாம் சுவாசிப்போம்.. சுவாசம்எம்மைச் சுவாசிக்க நாம் வழிசெய்து கொடுப் போம்.

மரண அறிவித்தல்



தில்லைநாயகம் பவளகுமார்
(மின்னியந்திரவியல் பொறியியலாளர் - மெற்றோ பொலிற்றியன்)

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வாசல வீதி, கொட்டாஞ்சேனை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லைநாயகம் பவளகுமார் (மின்னியந்திரவியல் பொறியியலாளர் மெற்றோ பொலிற்றியன்) கடந்த (06.08.2017) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லைநாயகம் - பவளம்மா தம்பதியரின் அன்பு மகனும் ப. கோமதியின் அன்புக்கணவரும் ப.திவாகர் (உதவிப்பணிப்பாளர், திறந்த பல்கலைக்கழகம், முல்லைத்தீவு), ப. டயானி (2ஆம் வருட மாணவி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்) ஆகியோரின் தந்தையும் இரத்தினகுமார், நந்தகுமார் (கனடா), சூரியகுமார் (ஜேர்மனி), மஞ்சுளா, ரூபகுமார் (கனடா) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற முத்தையா மற்றும் சின்னத்தங்கச்சி தம்பதியரின் மருமகனும் அன்புமலர், கயல்விழி (கனடா) காலஞ்சென்ற கேதீஸ்வரி மற்றும் சிறிதரன் (சுவிஸ்), சுபாஜினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் மீன்பிடி போக்குவரத்து அமைச்சு) ஆகியோரின் மைத்துனரும் ஜெகநாதன், கிருதாரணி (சுவிஸ்), கோகுலன் (சேவைக்கால ஆலோசகர், வ.க. அலுவலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.08.2017) புதன்கிழமை பி.ப. 4 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

24/3. சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.
077 218 8888, 077 289 8275

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# குடாநாட்டில் கைதுகள் தொடரும்

## பொலிஸ்மாஅதிபர் நேற்றுத் தெரிவிப்பு

"யாழ்ப்பாணக் குடாநாட்டில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்படுகின்ற கைது நடவடிக்கைகள் அதிக அதிகாரங்களுடன் கூடிய சிறப்பு பொலிஸ் பிரிவுகளின் ஊடாக தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்" என்று பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவித்தார்.

திட்டமிடப்பட்ட குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்கள் என்பனவற்றை கட்டுப்படுத்துவதற்கான சிறப்பு வேலைத் திட்டங்களுக்கு அவசியப்படும் நேரத்தில் இராணுவத்தினரும் களமிறக்கப்படுவார்கள் என்றும் பொலிஸ்மாஅதிபர் குறிப்பிட்டார்.

கண்டிக்கு நேற்றுப் பயணம் செய்த பொலிஸ்மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர, அங்கு மல்வத்துப் பீட மகாநாயகரைச் சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டார்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கருத்து வெளியிட்டார்.

"யாழ்ப்பாணக் குடாநாட்டில் அண்மைக்காலமாக இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக நான் வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளேன். அதை விடவும் சிறப்பு வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கவும் எதிர்பார்க்கின்றேன். திட்டமிடப்பட்ட குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் தொடர்பில் சிறப்பு அதிரடிப் படையினரின் பொறுப்புக்களையும் ஏற்று, சிறப்புத் திட்டமொன்றை உருவாக்கி வருகின்றேன். புதிய அதிகாரங்களுடன் அந்தப் பிரிவை உருவாக்குகிறேன். அந்தத் திட்டம் இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கிறது" என்று பொலிஸ்மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர மேலும் கூறினார்.

இதேவேளை, வடமராட்சி துன்னாலைப் பகுதியில் முன்னெடுக்கப்படும் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கை முடிவுக்குக் கொண்டுவரப் பட்டுள்ளதாக வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மாஅதிபர் தெரிவித்தார் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் கூறியுள்ளார். (வ-5)

### பதவி...

அமைச்சராக இருக்க விரும்பவில்லை என்று அவர் தெரிவித்தார்.

"கட்சியின் தீர்மானத்துக்குக் கட்டுப்பட்டு நான் எனது பதவியிலிருந்து விலகுகின்றேன்" என்று தெரிவித்து வடக்கு மாகாண முதலமைச்சருக்கு தனது பதவி விலகல் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றிருந்தது. மாற்றியமைக்கப்படும் வடக்கு அமைச்சரவையில் பங்கேற்பதில்லை என்று அதில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் நேற்றுத் தனது பதவி விலகல் கடிதத்தை அனுப்பி வைத்தார். அதில் அவர் தெரிவித்ததாவது:

அமைச்சர்கள் மீதான விசாரணைக்குழு தனது இறுதி அறிக்கையில் என்னை விடுவித்திருந்ததுடன், எனது அமைச்சின் செயற்திட்டங்களுக்கு மாகாணசபை முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று கோரியிருந்தது. ஆனால் என் மீது மீள்விசாரணை நடத்தப்படும் என்றும் கட்டாயவிடுப்பில் செல்லுமாறும் கூறியிருந்தீர்கள்.

மீள அமைக்கப்படும் விசாரணைக்குழு நீதியானதாகவும், சட்டரீதியானதாகவும் இருந்தால் நான் மீண்டும் விசாரணைக்குத் தயாராக இருந்தேன்.

கடந்த 5ஆம் திகதி தங்கள் அலுவலகத்தில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களுடன் நடந்த சந்திப்பில், அமைச்சரவையிலிருந்து என்னை வெளியேற்ற வேண்டும் என்று கருத்துத் தெரிவித்துள்ளீர்கள். அதில் நீங்கள் பிடிவாதமாக இருந்துள்ளீர்கள்.

அமைச்சர் சபையிலிருந்து என்னை வெளியேற்றுவதில் நீங்கள் கொண்டிருந்த உறுதியான நிலைப்பாடானது அரசியல் உள்நோக்கம் கொண்டது என்பதை என்னால் புரியக்கூடியதாக இருந்தது. இவ்வாறான நிலையில் தங்களுடன் இணைந்து தொடர்ந்தும் கடமையாற்றுவது சிந்திக்க வேண்டிய விடயமாக இருந்தது.

இதன் பின்பு, தமிழ் அரசுக் கட்சியின் மாகாணசபை உறுப்பினர்கள் கூடிப் பேசியபோது, மாற்றியமைக்கப்படும் அமைச்சரவையில் தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் எவரும் இருப்பதில்லை என்று முடிவு எடுக்கப்பட்டது. இவற்றுக்கு அமைவாகவே எனது பதவி விலகல் கடிதத்தை தங்களுக்கு அனுப்பி வைக்கின்றேன் என்றுள்ளது. (உ,5,101)

### அனந்தி...

ஒரு ஆசனத்தை அனந்தி சசிதரனுக்கு ஏற்கனவே வழங்கியுள்ளார் என்பதையும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வுக்கான ஆசனமும் வழங்கப்பட்டுள்ளது என்றும் புளொட்டுக்கும் ரெலோவுக்கும் ஆசனங்கள் வழங்கப்படவேண்டும் என்று தான் முடிவெடுத்திருக்கிறார் என்று முதலமைச்சர் கூறினார்" என்று தெரிவித்துள்ளார்.

அதேபோன்று மற்றொரு சந்தர்ப்பத்தில் "மாகாண சபையின் அவைத் தலைவர், பிரதி அவைத் தலைவர், முதலமைச்சர் மற்றும் அனந்தி சசிதரன் ஆகிய நால்வரும் தமிழ் அரசுக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்றும் ஏனைய கட்சிகளுக்கு ஒவ்வொரு அமைச்சுப் பதவியே வழங்கப்படுகிறது என்பதையும் முதலமைச்சர் சுட்டிக்காட்டினார். கடந்த காலத்தில் புளொட் அமைப்புக்கு ஓர் அமைச்சுப் பதவியும் கொடுக்கப்படவில்லை என்பதையும் அவர் தெளிவுபடுத்தினார் " என்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது கருத்துக்களின் அடிப்படையில் அனந்தி மற்றும் சர்வேஸ்வரனின் பதவிகள் நிரந்தமாக அவர்களுக்கே வழங்கப்படும் என்றே தெரிகின்றது என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

இருவருக்கும் தற்காலிகமாக என்று வழங்கப்பட்ட பதவியை நிரந்தரமாக்குவது என்று முதலமைச்சர் முடிவெடுத்துள்ளமையாலேயே அவர் புளொட்டுக்கு ஆசனம் வழங்குவது தொடர்பில் மட்டுமே பேசியுள்ளார் என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (உ,5)

### சூத்திரதாரி...

கொழும்பில் கைது செய்யப்பட்டவர்கள் நேற்றிரவு யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டனர். முக்கிய சூத்திரதாரி கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

கொக்குவிலில் வைத்து பொலிஸார் இருவர் மீது கடந்த வாரம் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. சம்பவத்துடன் தொடர்புடைய இரு சந்தேகநபர்கள் சம்பவம் நடைபெற்று இரு தினங்களுக்குள் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். மேலும் ஒருவர் சரணடைந்திருந்தார்.

வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார் தீவிரப்படுத்தியிருந்தனர். பலரிடமிருந்து இரகசியத் தகவல்கள் கிடைக்கப் பெற்றதாகவும் அதனடிப்படையில் 6 பேரை இரு தினங்களில் கைது செய்ய முடிந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கொக்குவிலைச் சேர்ந்த சிறிக்காந்தன் குகதாஸ், இணுவிலைச் சேர்ந்த அர்ஜுனன் பிரசன்னன் இருவரையும் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்ததாகவும், இவர்களிடமிருந்து இரு வாள்களைத் தாம் மீட்டனர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கொழும்பு துறைமுக வீதியில் வைத்து இருவரும், மட்டக்குளியில் வைத்து இருவருமாக 4 பேர் நேற்றுப் பகல் கைது செய்யப்பட்டனர். சத்தியவேல் நாதன் (நிசா விக்டர்), ராஜ்குமார் ஜெயகுமார் (வினோத்), குலேந்திரன் மனோஜித் (மனோஜ்), சுபா சட்டநாயகம் (போல்) ஆகியோரே கொழும்பில் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் மனோஜ், வினோத், சுரேந்திரன், பிரசன்னா, போல், ஆகிய 5 சந்தேகநபர்களும் நேற்று மாலை யாழ்ப்பாணம் நீதிவானின் உத்தியோகபூர்வ இல்லத்தில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் 5 பேரையும் 3 நாள்களுக்கு பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய பொலிஸாருக்கு அனுமதி வழங்கினார் நீதிவான். முக்கிய சூத்திரதாரி நிசா விக்டர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (உ,5,26,37,103)

### சம்பந்தர்...

உறுப்பினர்கள், நேற்றுமுன்தினம் மாலை கலந்துரையாடல் நடத்தினர். மாற்றியமைக்கப்படும் வடக்கு மாகாண அமைச்சரவையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பங்கேற்பதில்லை என்ற முடிவை எடுத்தனர்.

இந்த முடிவை, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு அலைபேசியூடாக அறிவித்துள்ளார். இதன் போது, இரா.சம்பந்தன், "இது தொடர்பில் கொழும்பில் கலந்து பேசி முடிவெடுக்கலாம். எல்லோரையும் கொழும்புக்கு வரச் சொல்லுங்கள்" என்று பிடிகொடுக்காமல் பதில் வழங்கியுள்ளார்.

இந்தப் பதிலை, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மாகாணசபை உறுப்பினர்களிடத்தில் தெரிவித்தார். இதனால் விசனமும் கோபமும் அடைந்த கட்சித் தலைவர் மாவை சோ.சேனாதிராசா "அப்படியானால் நான் கட்சித் தலைமைப் பதவியிலிருந்து விலகுகின்றேன்" என்று காட்டமாகப் பதிலளித்து விட்டு, கூட்டத்திலிருந்து வெளியேறிச் சென்றார் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, தமிழ் அரசு கட்சியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரையும் நாளை புதன்கிழமை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஒன்றுகூடுமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் சபை அமர்வு மற்றும் முதல் நாள் இடம்பெறும் கூட்டங்கள் காரணமாக கலந்து கொள்ளமுடியாது என அறிவித்துள்ளார். (உ,5,101)

### புளொட்டின்...

மிப்பது என்பதில் குழப்பம் தோன்றியுள்ளதாக அறிய முடிகின்றது.

புளொட் அமைப்பை நேரடியாகப் பிரதி நிதித்துவப்படுத்தி வவுனியா மாவட்டத்தில் ஜி.ரி.லிங்கநாதனும், முல்லைத்தீவு மாவட்டத்தில் க.சிவநேசனும் (பவான்) உள்ளனர்.

வவுனியா மாவட்ட உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனே, அமைச்சர்கள் மீதான ஊழல் மோசடி தொடர்பில் மாகாணசபையில் பிரேரணை சமர்ப்பித்திருந்தவர். இவரை அமைச்சுப் பதவியை ஏற்குமாறு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கோரியபோதும் அவர் அதனை மறுதலித்திருந்தார். "பிரேரணை கொண்டு வந்ததே அமைச்சுப் பதவிக்காகத் தான் என்று கூறுவார்கள். இதனால் அமைச்சுப் பதவியை நான் ஏற்க மாட்டேன்" என்று கூறியிருந்தார்.

முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் க.சிவநேசன், முதலமைச்சருக்கு சுயவிவரக் கோவை அனுப்பியபோது அவருக்கு அமைச்சுப் பதவி வழங்க முடியாதுள்ளது என்று பதில் வழங்கியிருந்தார். ஊடகவியலாளர் சிவராம் கொலையுடன் தொடர்புடையதாக அவரது பெயர் குறிப்பிடப்படுவதன் காரணமாக அமைச்சுப் பதவி வழங்க முடியாதிருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

இதனால், புளொட்டுக்கு வழங்கப்படும் அமைச்சுப் பதவியை யாருக்கு வழங்குவது என்பதில் குழப்பம் தோன்றியுள்ளது. (உ,5)

### கூட்டமைப்புடனான...

ஆராய்வதற்காக சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்க அடுத்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளார்.

"யாழ்ப்பாணத்தில் தொடரும் கைதுகள் சம்பந்தமாக சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்காவுடன் பேசினேன். கைதுகளை உடனடியாக நிறுத்துமாறு கேட்டுக்கொண்டேன்.

கடற்படையினர் மீது தாக்குதல் நடத்தியமை, பொலிஸ் அதிகாரியின் வீடு மீது தாக்குதல் நடத்தியமை, சிறப்பு அதிரடிப்படையின் வாகனத்தின் மீது தாக்குதல் நடத்தியமை மற்றும் வன்முறைகளில் ஈடுபட்டவர்களையே கைது செய்கிறார்கள் என்று அவர் என்னிடம் கூறினார்.

இது பாதுகாப்புத் தரப்பினர் உங்களுக்குச் சொன்னது. நீங்கள் அங்கே நேரில் வந்து நிலைமையைப் பாருங்கள். அதுவரையாவது இந்தக் கைதுகளை நிறுத்துங்கள் என்று நான் சொன்னேன். அடுத்த வாரம் வருவதாக அவர் எனக்குப் பதில் தந்தார். ஆனால், அதன் பின்னரும் கைதுகள் தொடர்கின்றன.

இன்று நாடாளுமன்றக் கூட்டத் தொடர் ஆரம்பமாகின்றது. இந்த நாள்களில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் பேச்சு நடத்தவுள்ளோம்" என்றார். (உ,5)

### பிரபாகரன்...

மாட்டார் கள். தன்னுடைய அண் ணன் மாதிரி அக்கா மாதிரி என்றுதான் கூறுவார்கள். ஆகவே உங்கள் ரோல் மொடலாக ஓர் அக்கா கிடைத்துள் ளார் என்று அர்ச்சனா செல்லத்துரையை சுட்டிக்காட்டினார்.

அர்ச்சனா செல்லத்துரை யின் பெற்றோர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள். அதனை குறிப்பிட்டு, "அவரில் (அர்ச்சனா செல்லத்துரை) வல்வெட்டித்துறை மக்களின் வேகத்தை நான் காண்கின்றேன். இவரைப் போலத்தான் ஆழிக்குமரன் ஆனந்தனின் வாழ்க்கையும் இருந்தது அல்லது அவர் போல்தான் இவர் இருக்கின்றார். செயற்கரியதைச் செய்துகாட்ட வேண்டும் என்ற மனோபாவம் வல்வெட்டித்துறை மக்களின் ஒரு சிறப்பம்சம். அவர்களுள் ஒரு அக்னிஎன்னேரமும் சுவாலைவிட்டு ஒளிர்ந்து கொண்டிருக்கும்" என்றார்.

வடக்கு மாகாணசபைத் தேர்தலின் போது, வல்வெட்டித்துறையில் நடந்த பரப்புரைக் கூட்டத்தில் 'பிரபாகரன் மாவீரன்' என்று கூறியிருந்தார். முதலமைச்சராகத் தேர்வு செய்யப்பட்ட பின்னர் சாவகச்சேரியில் நடந்த தொழிலாளர் தினக் கூட்டத்தில் பிரபாகரனை சர்வாதிகாரி என்று விழித்துக் கூறி சர்ச்சைக்குள் சிக்கியிருந்தார். (உ,5)

### வடக்கு...

பார்ப்பை பூர்த்தி செய்யவில்லை. ஆளும் கட்சியைச் சேர்ந்த 30 பேரும் ஒத்திருந்த போதே முதலமைச்சரினால் எதனையும் செய்யமுடியவில்லை. முதலமைச்சர் உடனடியாக மதிப்பார்ந்த முடிவை எடுக்க வேண்டும்.

மாகாணசபையைக் கலைப்பதுதான் மதிப்பார்ந்த முடிவாக இருக்கும். மக்களுக்கு பயனுள்ள எதுவுமே செய்யாது, பெரும் தொகை நிதி உறுப்பினர்களும், அமைச்சர்களுக்கும் செலவாகின்றது. இதனைத் தவிர்ப்பதற்கு சபையைக் கலைப்பதே சிறந்தது.

நியதிச் சட்டங்களை உருவாக்கி வேலை வாய்ப்புக்களைக் கொடுத்திருக்க முடியும். அப்படி எதுவுமே செய்யவில்லை. எதனையும் செய்யாது, இருப்பதைவிட்டு பறப்பதற்கு ஆசைப்பட்டமையால் மாகாணசபை எதையுமே செய்ய முடியாத நிலையில் உள்ளது. மக்கள் நீதிபதிகளாகட்டும். மாகாணசபையைக் கலையுங்கள். தேர்தல் நடத்தப்படும். மக்கள் சரியான தீர்ப்பைக் கொடுப்பார்கள் என்றார். (5)

### உயர்தர...

பரீட்சை மத்திய நிலையங்களில் மேற்படி பரீட்சை நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கான அனுமதி அட்டையுடன் தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு என்பவற்றைக் கொண்டு வருவது கட்டாயமாகும் என்று பரீட்சைகள் ஆணையாளர் மேலும் கூறியுள்ளார். (உ)

### துன்னாலையில்...

கப்பட்டனர். வீதிச் சோதனையுடன் வீடு வீடாகவும் சோதனை நடத்தப்பட்டது.

குடும்ப அட்டை மற்றும் குடும்ப உறுப்பினர்கள் அடங்கிய ஒளிப்படங்கள், அல்பங்களையும் பொலிஸார், சிறப்பு அதிரடிப் படையினர் பரிசோதித்தனர். இந்தச் சோதனை நடவடிக்கையின்போது 2 ஹன்ரர்களை கைப்பற்றி பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர். சந்தேகத்தில் 6 பேரைக் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். எனினும் விசாரணைகளின் பின்னர் அவர்களை விடுவித்தனர். (5)

# இந்திய அணியை புறக்கணியுங்கள்

## மியான்தத் வலியுறுத்தல்

“பன்னாட்டு கிரிக்கெட் சபையின் பொதுவான தொடர்களிலும் இந்திய அணிக்கு எதிராக விளையாட வேண்டிய ஆட்டங்களை பாகிஸ்தான் அணி புறக்கணிக்க வேண்டும்” என்று வலியுறுத்தியுள்ளார் பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் ஜாவித் மியான்தத்.

மும்பைத் தாக்குதலுக்குப் பின்னர் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, பாகிஸ்தானுடனான ஆட்டங்களைப்புறக்கணித்து வருகிறது.




இந்த இரு நாடுகளுக்கும் இடையே இருதரப்புத் தொடர்கள் நடத்தப்பட பலமுறை முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதிலும் இந்திய கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபை அவற்றை உதறித்தள்ளி வருகிறது. இருதரப்புத் தொடர் விவகாரத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையால் கொடுக்கப்படும் எந்த அழுத்தத்தையும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கண்டுகொள்ளவில்லை.

இருதரப்புத் தொடர்கள் நடைபெறா விட்டாலும், பன்னாட்டு கிரிக்கெட் சபையின் பொதுவான தொடர்களான உலகக்கிண்ணம், ரி-20 உலகக்கிண்ணம், மினி உலகக் கிண்ணம், ஆசியக் கிண்ணம் ஆகிய தொடர்களில் இரு நாடுகளும் விளையாடுகின்றன. இந்த நிலையில் பொதுவான தொடர்களிலும் இந்தியாவுடன் பாகிஸ்தான் விளையாடக் கூடாது என்கிறார் மியான்தத். (ம)




# சென். பற்றிக்ஸ் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஒக. 8

இலங்கைக் கடற்படையால் நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதியது.

முதல் பாதியில் இரண்டு அணிகளாலும் எதுவித கோல்களையும் பதிவுசெய்ய இயலவில்லை. இரண்டாம் பாதியின் 10ஆவது நிமிடத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியின் றோஜித் முதல் கோலைப் பதிவுசெய்தார். ஜீவன் 15ஆவது நிமிடத்தில் பற்றிக்ஸின் கோல் கணக்கை இரண்டாக உயர்த்தினார். 19ஆவது நிமிடத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் கோல் காப்பாளர் ஆனல்ட் அடித்த பந்து மத்திய கல்லூரியின் கோல் காப்பாளரின் கையில் பட்டுக் கோலாக மாறியது. முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது பற்றிக்ஸ்.

(ம-23)



‘மாற்றத்தை நோக்கி மாற்றுத்திறனாளிகள்’ எனும் தொனிப் பொருளிலான பரா ஒலிம்பிக் போட்டிகள் மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து நூற்றுக் கணக்கான சிறப்புத் தேவையுடையவர்கள் இதில் பங்கெடுத்தனர். (ம)

# முல்லை வீராங்கனைகள் கௌரவிப்பு



யாழ்ப்பாணம், ஒக. 8

இந்த வருடம் நடைபெற்ற பெண்களுக்கான தேசியமட்ட சைக்கிள் ஓட்டம் மற்றும் மரதன் ஓட்டத்தில் சாதித்த முல்லைத்தீவு மாவட்ட வீராங்கனைகள் முல்லைத்தீவு மாவட்டச்செயலரினால் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர்.

நடப்பு வருடத்தில் பெண்கள் பிரிவு சைக்கிள் ஓட்டத்தில் வடமாகாண அணி முதல் இடத்தைப் பெற்றது. வடக்கு மாகாண அணி முதல் இடத்தைப் பிடிப்பதற்கு பங்காற்றிய முல்லைத்தீவு மாவட்ட வீராங்கனைகளான என்.ராதிகா, எஸ்.ஹேமா ஆகியோரும், தேசிய மட்ட மரதனில் 10ஆம் இடத்தைப் பெற்ற எஸ்.சுடர்மதியுமே அவ்வாறு கௌரவிக்கப்பட்டனர். (ம-422)

# சண்டிலிப்பாய் இந்து., ஆவரங்கால் இந்து இறுதிக்குத் தகுதி


சண்டிலிப்பாய் இந்து இளைஞர் அணி


ஆவரங்கால் இந்து இளைஞர் அணி

கைதடி தெற்கு சனசமூக நிலையம் நடத்திவரும் கரப்பந்தாட்டத் தொடரில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம், மற்றும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் என்பன இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன.

கைதடி தெற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது. 5 செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. இந்த ஆட்டத்தின் முதல் மூன்று செற்களையும் முறையே 25:23, 25:22, 25:09 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய சண்டிலிப்பாய் இந்து இளைஞர் அணி 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதியது. 5 செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் மூன்று செற்களையும் முறையே 25:17, 25:18, 25:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)


## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக. 8

நாவற்குழி சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குமரநகர் ‘பி’ அணியை எதிர்த்து வளர்மதி அணியும், இரவு 8.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் துர்க்கா அணியை எதிர்த்து ஆனந்தா அணியும் மோதவுள்ளன. (ம-23)

# கேத்லினின் வெற்றி ஏற்கத்தக்கது அல்ல

## தடகளச் சம்மேளனத் தலைவர் செபஸ்ரியன் கோ வெளிப்படை




லண்டன் தடகளத் தொடரில் அமெரிக்க வீரர் கேத்லின், ஜமைக்க வீரர் உசைன் போல்டை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றமை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை எனத் தெரிவித்தார் உலக தடகளச் சம்மேளனத் தலைவர் செபஸ்ரியன் கோ.

இலங்கை நேரப்படி நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடைபெற்ற இந்தப் போட்டியே 100 மீற்றர் தடகளத்தில் போல்ட் கள மிறங்கும் கடைசிப் போட்டியாக அமைந்தது. இதில், அமெரிக்க வீரரான ஜஸ்ரின் கேத்லின் 9.92 செக்கன்களில் இலக்கை அடைந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். அவரது சக வீரரான கிறிஸ்ரியன் கோல்மன் 9.94 செக்கன்களில் இலக்கை அடைந்து வெள்ளிப் பதக்கத்தையும், போல்ட் 9.95 செக்கன்களில் இலக்கை அடைந்து வெண்கலப் பதக்கத்தையும் தமதாக்கினர்.

உசைன் போல்ட் வெற்றிபெறுவார் என்று பரவலான எதிர்பார்ப்பு நிலவிய போதிலும், அவர் வீழ்த்தப்பட்டமையானது பெரும் அதிர்வலைகளை தோற்றுவித்துள்ளது. இந்த நிலையிலேயே இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ளார் செபஸ்ரியன் கோ.

"இரண்டு முறை ஊக்கமருந்து பயன்படுத்தியதற்காக தடைபெற்ற ஒருவர், எம்முடைய பரிசை பெறுவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. உசைன் போல்டாலும் இந்தப் பந்தயம் ஏற்கத்தக்க ஒன்றாக இருக்காது" என கோ மேலும் தெரிவித்தார்.

முன்னதாக ஜஸ்ரின் கேத்லின், ஊக்கமருந்துப் பயன்படுத்தினார் என்று குற்றம் சாட்டப்பட்டு இரண்டு தடைவைகள் தடை விதிக்கப்பட்டார். இதனால் இந்தத் தொடரிலும் அவரது குருதி மாதிரிகள் மீண்டும் சோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளன என்று பன்னாட்டு ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டன. (ம)

## றேஞ்சர்ஸ் சம்பியன்

கரணவாய், ஒக. 8

அரியாலை பிறீமியர்லீக் துடுப்பாட்டத் தொடரில் அரியாலை றேஞ்சர்ஸ் அணி கிண்ணம் வென்றது.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில், அரியாலை பயர் வோல் அணியும், அரியாலை றேஞ்சர்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது அரியாலை பயர் வோல் அணி. அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஏ.எஸ்.ஜெறோசன் 38 ஓட்டங்களையும், த.கோகுலன் 26 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் காண்டீபன், துசிதரன் இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

80 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அரியாலை றேஞ்சர்ஸ் அணி 8 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை சமநிலைப்படுத்தியது. அதிகபட்சமாக ஏ.எஸ்.நிறோசன் 41 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் தனுசாந் 3 இலக்குகளையும் கோகுலன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

சுப்பர் பந்துப்பரிமாற்றத்தில் வெற்றியாளரைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய றேஞ்சர்ஸ் அணி 13 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பயர்போல் அணி 10 ஓட்டங்களைப்பெற்று 3 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பரிசளிப்பு நிகழ்வுக்குத் தலைமை விருந்தினராக கணேஸ்வரன் வேலாயுதம் கலந்து கொண்டார். (ம-108)

## சிந்து சம்பியனானது

கைதடி குமரநகர் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரில் உடுவில் ஆடி சிந்து அணி கிண்ணம் வென்றது.

குமரநகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் உடுவில் ஆடி சிந்து விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழக அணி மோதியது. 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஆடி சிந்து அணி வெற்றிபெற்றது. (ம-23)

## சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்ட பொது விளையாட்டு மைதானத்தை புனரமைத்துத் தரும்படி கோரிக்கை

சாவகச்சேரி, ஒக. 8

சாவகச்சேரி நகரசபையின் பொது விளையாட்டு மைதானத்தை புனரமைத்து, தென்மராட்சி பிரதேசத்துக்கு நிரந்தர விளையாட்டு மைதானம் அமைத்துத் தருமாறும் இந்த மைதானத்தில் உள்ளக விளையாட்டுக்கள் நடத்தக்கூடிய வகையிலான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி தே.பாபு கோரிக்கை முன்வைத்துள்ளார். அண்மையில் நடைபெற்ற பிரதேசஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்தக் கோரிக்கை அவரால் வைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபையின் பொது விளையாட்டு மைதானம் நகரப் பகுதியில் அமைந்துள்ளதால் 1996ஆம் ஆண்டுக்கு முன்னர் பிரதேச விளையாட்டுக் கழகங்களாலும் பிரதேச செயலகம் தென்மராட்சி கல்வி வலயம் ஆகியவற்றினாலும்பயன் படுத்தப்பட்டுவந்தது. நகரப் பகுதியில் உள்ள விளையாட்டுக் கழகங்கள் மாலை நேரங்களில் பயிற்சிகளையும் மேற்கொண்டுவந்தன. 1996 ஆம் ஆண்டின் பின்னர் அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் மைதானம் வந்ததால் பயன்படுத்த முடியாமல் போய்விட்டது.

2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் நகர சபையினால் தற்காலிகமாகப் புனரமைக்கப்பட்டு பல விளையாட்டுக் கழகங்களால் தொடர்கள் நடத்தப்பட்டு வந்தன. அத்துடன் கழகங்கள் பயிற்சிகளையும் மேற்கொண்டு வந்தன. மழைக் காலங்களில், வெள்ளம் வெளியேற முடியாமல் தேங்கி நிற்பதால் பயன்படுத்த முடியாமல் போய்விட்டதென கழகங்களால் முறைப்பாடு தெரிவிக்கப் பட்டது. பிரதேசத்தில் விளையாட்டு வீர வீராங்கனைகளின் விளையாட்டுப் பயிற்சிச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காகமைதானத்தைப் புனரமைத்து வழங்குமாறும் கோரப்பட்டது. இந்த நிலையில் கோரியுள்ளனர். கூட்டத்தில் கலந்துகொண்ட இணைத் தலைவர் சாவகச்சேரி நகரசபையின் பொது விளையாட்டு மைதானத்தைகொழும்பு விளையாட்டு அமைச்சுடன் தொடர்பு கொண்டு புனரமைத்து வழங்கும நடவடிக்கைஎடுக்கவேண்டுமென முன்மொழிவினைச் சமர்ப்பித்திருந்தார்.

அவ்வேளையில் அங்கு கருத்து வழங்கிய மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன், "விளையாட்டு அமைச்சினால் மைதானம் புனரமைக்க வேண்டுமாயின் குறைந்தது ஐந்து ஏக்கர் காணி இருக்க வேண்டுமெனக் கூறுகின்றனர். நகரசபை பொது விளையாட்டு மைதானம் 4 ஏக்கர் காணியாக உள்ளதால் அபிவிருத்தி செய்யப்படாமல் உள்ளது. எனவே மைதானத்துக்கு அருகில் காணப்படும் காணியைப் பெற்றுக் கொடுத்தால் விளையாட்டு அமைச்சினால் புனரமைக்க முடியும்" எனத் தெரிவித்தார்.

மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜி லிங்கம் கருத்துத் தெரிவிக்கையில், "பிரதேசத்தில் விளையாட்டினை மேம்படுத்துவது அவசியம். பிரதேசத்தில் ஒரு நிரந்தர பொதுவிளையாட்டுமைதானம் இல்லாதமை பெரும் குறையாக உள்ளதை பல கூட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. மைதானத்துடன் இணைந்த ஒன்றுக்குமேற்பட்ட ஏக்கர் காணி உள்ளதென கூறப்பட்டது. அந்தக் காணியை முறைப்படி கொள்வனவு செய்ய நகரசபை முன்வரவேண்டும். இல்லாதபட்சத்தில் கட்டாய சுவீகரிப்புத் திட்டத்தில் சுவீகரித்து மைதானத்தை விஸ்தரிக்க வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார். (ம-9)

## ரிச்சட்ஸைப் போன்றவர் கோக்லி



"இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி, மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் ஜாம்பவான் விவ ரிச்சட்ஸைப் போன்றவர்" என இலங்கை அணியின் முன்னாள் வீரர் அரவிந்த டி சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அரவிந்த டி சில்வா அளித்துள்ள செவ்வியில், "விராட் கோக்லி அணியை வேறு லெவலுக்கு கொண்டு சென்றிருக்கிறார். கோக்லியின் நம்பிக்கை, ஆக்ரோசம் மற்றும் அணியை அவர் வழிநடத்தும் விதம் ஆகியவைகளைப் பார்க்கும் போது மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் ஜாம்பவான் விவியன் ரிச்சர்ஸின் ஞாபகம் எனக்கு வருகிறது" என டி சில்வா மேலும் தெரிவித்தார். (ம)

## இலங்கை அணியின் எதிர்காலம் குசல் மெண்டிஸ் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார தெரிவிப்பு

"இலங்கை அணியின் துடுப்பாட்ட எதிர்காலமாக குசல் மெண்டிஸ் வருவார்" இவ்வாறு குறிப்பிட்டார் இலங்கை அணியின் முன்னாள் ஜாம்பவான் குமார் சங்கக்கார.

இலங்கை கிரிக்கெட்டுடன் தொடர்புடைய விடயங்களை ரசிகர்களுடன் அவ்வப்போது தனது கீச்சகப் பக்கத்தில் உரையாடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார் குமார் சங்கக்கார.

ரசிகர் ஒருவர் இலங்கை அணியில் தற்போதுள்ள துடுப்பாட்ட வீரர்களில் ஆகச் சிறந்தவர் யார் என்று கேள்வி எழுப்பினார். இதற்குப் பதில் வழங்கையிலேயே சங்கக்கார இவ்வாறு குறிப்பிட்டார்.

'இலங்கை அணியின் ஆகச் சிறந்த துடுப்பாட்ட வீரர்களாக மத்தியூஸ் மற்றும் குசல் மென்டிஸ் ஆகியோரைக் குறிப்பிடலாம். குசல் மென்டிஸ் இளம் வீரர். அவரிடம் அபாரமான திறமை உள்ளது. உரியமுறையில் வளர்த்தெடுத்தால் அவர் இலங்கை அணியின் துடுப்பாட்ட ஜாம்பவனாக உருவெடுப்பார்' என சங்கா மேலும் குறிப்பிட்டார். (ம)






## விண்மீன் அணி சம்பியனானது

பருத்தித்துறை கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக் கழகம் அமரர் கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்த வெற்றி கிண்ணத்துக்காக பருத்தித்துறை லீக் மற்றும் வடமராட்சி லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் பலாலி விண்மீன் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
உதயதாரகையின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதியது.
ஆட்டத்தின் முதலாவது நிமிடத்தில் விண்மீன் அணியின் உதயதாஸ் முதல் கோலைப் பதிவுசெய்தார். 5ஆவது நிமிடத்தில் திக்கம் இளைஞரின் கோல் பதிவானது. இந்தக் கோலை அகிலதீபன் பதிவுசெய்தார். அதன் பின்னர் ஆட்டம் விறுவிறுப்படையும் என்று எதிர்பார்த்த போதும் பலாலி விண்மீன் அணியின் ஆதிக்கம் மேலோங்கியது. 16ஆவது நிமிடத்தில் உதயதாஸ், 19ஆவது, 38 ஆவது நிமிடங்களில் நிசாந்தன் ஆகியோர் அடுத்தடுத்து கோல்களைப் பதிவு செய்தனர். 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது விண்மீன்.

(ம-422-108)

# புஜாரா, ரகானே இரு தூண்கள்

## புகழ்கிறார் கோக்லி

"இந்திய அணியின் டெஸ்ட் ஆட்டங்களுக்கான துடுப்பாட்ட வரிசையில் புஜாரா, ரகானே இருவரும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள்" இவ்வாறு தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.
இந்திய அணி, இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. கொழும்பில் நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் இந்தியா இன்னிங்ஸ் வெற்றியைப் பதிவு செய்தது. புஜாரா 133 ஓட்டங்களையும், ரகானே 132 ஓட்டங்களையும் பெற்றனர். இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கை யிலேயே கோக்லி இவ்வாறு குறிப்பிட்டார்.
"புஜாரா மற்றும் ரகானே ஆகிய இருவரும் டெஸ்ட் ஆட்டங்களைப் பொறுத்தவரை எங்களுடைய சிறந்த துடுப்பாட்ட வீரர்கள். குறிப்பாக மத்திய வரிசையில் சிறப்பாக விளையாடக் கூடியவர்கள். இருவரும் தொடர்ச்சியாக சிறப்பாக விளையாடி வருகிறார்கள். புஜாராவுக்கு நான் அதிக ஆதரவு கொடுப்பேன். ஏனெனில் அவர் டெஸ்ட் ஆட்டங்களில் மட்டுமே விளையாடி வருகிறார். அவர் தன்னுடைய சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவதற்காக கடினமாகப் பயிற்சி செய்கிறார். நாங்கள் எல்லோரும் சிறப்பாகவே விளையாடுகிறோம். ஆனால், புஜாராவின் ஆட்டம் அடுத்த கட்டத்துக்குச் சென்றுள்ளது" என கோக்லி மேலும் தெரிவித்தார்.

(ம)

V2 TRAVELS
வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு
(VISA EXTENSION)
0768227499

## டெஸ்ட்டில் வேண்டும் வில்லியர்ஸ் விருப்பப்படுகிறார் சோன் பொலக்

தென்னாபிரிக்க அணியின் அனுபவ வீரர் வில்லியர்ஸ் டெஸ்ட் ஆட்டங்களுக்குத் திரும்ப வேண்டும் என்று தெரிவித்தார் அந்த அணியின் முன்னாள் வீரர் பொலக்.
'வில்லியர்ஸ் அனுபவமான, ஆபத்தான வீரர். தென்னாபிரிக்க கிரிக்கெட்டை அடுத்த கட்டத்துக்குக் கொண்டுசெல்லத் தகுதியானவர். அவர் டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து விலகியிருப்பது நல்லதல்ல. விரைவில் அவர் வெள்ளை ஜெர்சியில் களமிறங்க வேண்டும்' என்று பொலக் மேலும் தெரிவித்தார்.

(ம)


வேலையாள்கள் தேவை
213, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள லிங்கன் கிறீம் ஹவுஸிற்கு அனுபவம் வாய்ந்த ரொட்டி தயாரிப்பாளர்கள் மற்றும் கிளீனிங் வேலைக்கு ஆண், பெண் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
நிறுவுனர்
லிங்கன் கிறீம் ஹவுஸ், யாழ்ப்பாணம்.
T. P : 021 222 6660

SAAMSON
Experts in English Training
EASY WAY English
EASY WAY ஆங்கிலம் என்பது வீட்டிலிருந்தபடியே அடிப்படை ஆங்கில அறிவற்றவர்களும், ஓரளவு தேர்ச்சி பெற்றவர்களும் சரளமாக ஆங்கிலம் பேசப்பழகுவதற்கான ஒரு பயிற்சிநெறியாகும்.
90 பாடங்கள் மற்றும் 90 வீடியோக்களைக்கொண்ட இப்பாடநெறியை ஒவ்வொரு மாணவரும் சுயமாகக்கற்று அதிலுள்ள பயிற்சிகளுக்கு பதில்களை எழுதி அனுப்புதல்வேண்டும். பதில்கள் திருத்தப்பட்டு இறுதியில் நாடளாவிய ரீதியில் அனைத்து மாவட்டங்களிலும் பரீட்சை இடம்பெற்று தேசிய டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்
பயிற்சியில் இணையும் அனைவரும் 90-120 நாட்களுக்குள் அனைத்து பாடப்பயிற்சிகளையும் பூர்த்திசெய்தல் வேண்டும்.
1.08.2017 இற்குள் பதிவுகளை மேற்கொள்ளும் அனைவருக்கும் பாடநெறிக்கட்டணம் ரூபா 1000.00 மட்டுமே! அதன்பின் ரூபா 3000.
நாட்டின் எப்பாகத்திலுள்ளவர்களும் வயதுவேறுபாடின்றி இப்பயிற்சிநெறியில் இணைந்துகொள்ளமுடியுமென்பதுடன் பயிற்சிக்கட்டணங்களை வங்கி மற்றும் தபாலகங்கள் வாயிலாக செலுத்தமுடியும்
பிரிவு மாணவர்களுக்கான பரீட்சை அனைத்து மாவட்டங்களிலும் நவம்பர் 19,2017 அன்று இடம்பெறும்
SAAMSON
Experts in English Training
403, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோவில் அருகில்) யாழ்நகர்.
021 320 33 13
077 1570 486

# ரியல் மட்ரிட் அணியில் ரொனால்டோ இணைவு

போர்த்துக்கல் அணியின் தலைவரும், ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரருமான ரொனால்டோ, நீண்ட கால ஓய்வின் பின்னர் நேற்று மீண்டும் ரியல் மட்ரிட் அணியுடன் இணைந்தார்.
நடப்புப் பருவகாலம் (2017-2018) ஆரம்பிக்கப்பட்டு, ரியல் மட்ரிட் அணியின் பயிற்சி முகாம்கள் நடைபெற்று வந்த போதிலும் ரொனால்டோ அணியுடன் இணைந்திருக்கவில்லை. இதனால் ரியல் மட்ரிட்டின் பரம எதிரியான பார்சிலோனா அணிக்கு எதிராக அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் மட்ரிட் தோல்வியடைந்தது. ரொனால்டோ களமிறங்காதமையே மட்ரிட்டின் தோல்விக்கான முக்கிய காரணம் என்று குறிப்பிடப்பட்டது. இந்த நிலையில் நேற்று அணியுடன் இணைந்தார் ரொனால்டோ.
கடந்த வருடம் லா லிகா, சம்பியன்ஸ் லீக் உள்ளிட்ட முக்கிய தொடர்களை ரொனால்டோவின் சிறந்த ஆட்டத்தின் மூலம் ரியல் மட்ரிட் கைப்பற்றியிருந்தது. நடப்பு வருடத்திலும் முக்கிய கிண்ணங்களை வெல்லும் நம்பிக்கையை ரொனால்டோ வெளிப்படுத்தினார்.

(ம)



# இலங்கையின் வேகப்பந்துப் பயிற்சியாளராக ரொமேஸ் ரத்னநாயக்க விரைவில் நியமனம்




இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சுப் பயிற்சியாளராக முன்னாள் வீரர் ரொமேஸ் ரத்னநாயக்க நியமிக்கப்பட வாய்ப்புள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.
இந்திய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. அந்த அணிக்கு எதிராக சமீபத்தில் நடந்த இரண்டு டெஸ்ட் ஆட்டங்களிலும் இலங்கை படுதோல்வி அடைந்தது.
முக்கியமாக இந்தியா முதல் டெஸ்ட் ஆட்டத்தில், 600 ஓட்டங்களையும், இரண்டாவது ஆட்டத்தில் 622 ஓட்டங்களையும் குவித்தது. இதற்கு இலங்கை அணியின் படு மோசமான பந்து வீச்சே காரணம் என கடும் விமர்சனங்கள் எழுந்தன. இந்த நிலையில், தொடர் தோல்விகளைச் சந்தித்து வரும் இலங்கை அணியில் சில மாற்றங்கள் செய்யப்படலாம் எனத் தகவல் வெளியாகியுள்ளன.
அதன்படி, அந்த அணியின் புதிய வேகப்பந்து வீச்சுப் பயிற்சியாளராக முன்னாள் வீரர் ரொமேஸ் ரத்னநாயக்க நியமிக்கப்படலாம் எனக் கருதப்படுகிறது.
தற்போது வேகப்பந்து வீச்சு பயிற்சியாளராகச் செயலப்படும் சமிந்த வாஸ் 19 வயதுக்கு உட்பட்ட அணியின் பயிற்சியாளராக மாற்றப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.